மனிதர்குல மாணிக்கம், இந்தியப் பிரதமர்



ஸ்ரீ பண்டித ஜவஹர்லால் நேரு

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 6] குரோதி ஆனி-ஜூலை 1964 [மணி 10

# நீ அமரன் ஆனாய்!

இந்தியத்தாய் ஈன்றளித்த எழிற்புதல்வ!
ஜவஹர்லால் என்னும் எங்கள்
முந்துறுநற் பெருந்தலைவ! முத்துயிர்த்த
ரத்தினம்போல் மோதி லால்ஆம்
தந்தையுயர் தவத்துதித்தோய்! மனிதர்குல
மாமணியே! மாண்பார் சான்றோய்!
அந்தமிலாப் பெருஞ்சிறப்பின் ஆசியநற்
சோதி! நீ அமரன் ஆனாய்! (1)

[ஜவஹர் — மாணிக்கம். மோதி — முத்து]

பெருந்தகையே! காந்தியண்ணல் பிறங்கடையே!
தியாகத்தின் பெருவி ளக்கே!
ஒருங்குலக மெலாம்போற்றும் உத்தமனே!
போரில்லா உலகம் காண
வருந்திமிக உழைத்தவனே! சமவாய்ப்புச்
சமுதாயம், மக்க ளாட்சி
அருந்திறலால் வளர்த்தவனே! அகிலமெலாம்
துயருற, நீ அமரன் ஆனாய்! (2)

[பிறங்கடை — வாரிசு.]

நம்மருமைத் தாயகம்தான் நல்லுரிமை
பெற்றுமிக நலங்கள் ஓங்க
வெம்மைமிகு சிறைப்பட்டாய்! மிகப்பலவாம்
தியாகங்கள் விரும்பிச் செய்தாய்!
செம்மைமிகு பிரதமராய்த் திகழ்ந்து, பல
ஆண்டுகள்நற் பணிபு ரிந்தாய்!
அம்ம! நின தருமையெலாம் அளப்பரிதால்!
ஐய! நீ அமரன் ஆனாய்! (3)

உலகிலொளிர் பலநாட்டின் உயர்ந்தபெருந்
தலைவரெலாம் உவந்து போற்ற
இலகிநின்றோய்! கிழக்கொடுமேற் கிணைந்தசெம்மால்!
இந்தியமாண் பெல்லாம் கண்டோய்!
திலகமென நம்தேசம் சிறந்தொளிரத்
திட்டங்கள் தீட்டி வந்தோய்!
அலகில்பெருஞ் சீர்த்தியினோய்! ஆண்தகையே!
அண்ணால்! நீ அமரன் ஆனாய்! (4)

காட்சிக்கு மிகஇனியோய்! கருணைமிகும்
இயல்புடையோய்! கல்வி வல்லோய்!
சேட்சிமையும் புகழ்பொறித்த திறல்மிகுந்தோய்!
சிறந்தபஞ்ச சீலக் கொள்கை
சூட்சிமிகு சீனரொடும் சூழ்ந்துலகுக்கு
அளித்துயர்ந்தோய்! தூய நல்ல
ஆட்சியினுக் கொருவனென அமைந்தொளிர்ந்தோய்!
அரும்பெறல்நீ அமரன் ஆனாய்! (5)

---

வாழி **ஜவஹர்லால்**! வாழிஅவர் தேசபக்தி!
வாழிஅவர் தன்னிழப்பு, மாட்சிமைகள்!—வாழியரோ
**நேருஅண்ணல்** தந்த நெறியுமுயர் கொள்கைகளும்,
சீருறவே ஓங்கிச் செழித்து!

[தன்னிழப்பு — தியாகம்]

— ஆசிரியர்.

# திருமுறைகளின் பெருமை

## முன்னுரை

தமிழ்நாடு எத்துணையோ பலவகைகளில் தனிப்பெருஞ் சிறப்புடையது. ஆயினும், இந்நாளில் அதன் பழம் பெருமைகள் பலவும் அத்துணை விளக்கம்பெற் றிலங்கக் காண்கின்றிலம். என்னும், தமிழ்நாடு இன்னும் ஒரு சிறிதளவாதல் "இங்குளி வாங்கும் கலம்" (பெருங்காயச் சிமிழ்) போல, மங்காப் புகழொளிவீசித் திகழ்ந்துகொண்டே வருகின்றது.

அதற்குரிய சிறந்ததொரு பெருங் காரணமாகத் திகழ்வன "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" அமைந்த அருந்தமிழ்க் கவிதைகளே யாகும். "இங்கிலாந்து தேசம் வேறுபிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது" ("By nothing is England so glorious as by her poetry"—Matthew Arnold) என மேத்யூ ஆர்னல்ட் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந்தமை, நம் அருமைத் தமிழ்நாட்டிற்கே மிகவும் இயைந்ததாக உள்ளது.

தமிழ் மக்களின் நயத்தக்க தனிநாகரிகம், தமிழ்க் கவிதைகளின் வாயிலாகத்தான் உலக அரங்கில் இன்று ஓரளவேனும் மதிக்கப்பெற்று விளங்கிவருகின்றது. தமிழ்நாட்டிற்கு இற்றைஞான்றுள்ள பெருமைகளெல்லாம், பெரும்பாலும் அதன் அழகிய இனிய அரிய கவிதைகளினால் எஞ்சி நின்றனவே யாகும்.

## திருமுறைகளின் சிறப்பியல்புகள்

தமிழ்க் கவிதைகளோ பலப்பல திறத்தன. அவைகளுள்ளே, சைவத் திருமுறைகள் தனிச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தொளிர்வனவாகும். மொழி (Language), சமயம் (Religion), தத்துவம் (Philosophy), இலக்கியம் (Literature), வரலாறு (History), பண்பாடு (Culture), மன்பதைவாழ்வியல் (Sociology) நுண்கலைகள் (Fine arts) என்னும் பலப்பல துறைகளிலும், சைவத் திருமுறைகள் தமிழ்மக்களின் தனி நாகரிக மேம்பாட்டின் நலங்களைத் திறம்பட விளக்கித் தெளிவிக்கும் சிறந்த பெருங் கருவிகளாகத் திகழ்கின்றன எனலாம்.

கவிதை நலத்திற்கு வரம்பாகக் கலைஞர்களாற் கொள்ளப்படும் சங்ககாலப் பாடல்களிற் "பாலிற்படு நெய்போல்" மறையநின்றுள்ள தெய்விகச் சிறப்பு நலம், திருமுறைப் பாடல்களில் "ததிநெய்போல்" தெளிவாக விளங்கிச் சிறந்தினிது நிறைந்து காணப்படுதல், அவற்றின் தனிப்பெருஞ் சிறப்புக்குக் காரணமாகும்.

## அருளியல் நிறைமொழிகள்

கலையறிவுணர்வால்மட்டுமே பாடப்பெற்ற ஏனைப் பிற சில உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையருளுணர்வாற் பாடப்பெற்ற திருமுறைகளின் நிறைமொழிப் பாடல்கள், எல்லாவகையாலும் ஏற்றம் மிக்குடையன என்பதில் ஐயமில்லை. "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு" எனவும், "பல நல்ல கற்றக்கடைத்தும் மனம் நல்லர் ஆகுதல் மாணார்க் கரிது" எனவும், "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை யறிவே மிகும்" எனவும் ஆசிரியர் திருவள்ளுவர் பலவிடத்தும் பகர்ந்தபடி, எத்துணைதான் சிறந்த கலைநூற்புலவராயினும் அவரெல்லாம் முற்றிலும் பிழையற்ற பெற்றியினராதல் இயலாது. முக்குணவயத்தான் முறை மறந்தறைதல் கலைநூற் புலமையர் எல்லார்க்கும் இயல்பே யாகும்.

ஆனால் 'தவத்தான் மனம் தூயராய்'—'பொறிவாயில் ஐந்து அவித்து'—'ஏகனாகி இறைபணி நின்று' அருள்பெற்றுயர்ந்த 'நிறைமொழிமாந்தர்'தம் அருள்மொழிகள், என்றும் 'பொய்யாமொழியாய்' நின்று நிலவி வையத்துயிர்களையெல்லாம் வாழவைத்தருளும் மாட்சிமையுடையன.

திருமுறைநூல்களின் ஆசிரியர்கள் நம்மைப் போன்று மனிதநிலையில் இருந்து, அவற்றைப்

பாடினர் அல்லர். "எனதுரை தனதுரையாக" எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுதற்கேற்ப, இவ்வுலகியல் வாழ்விலேயே சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற்றுச் சீவன்முத்தர்களாக விளங்கி, அந்நிலையில் அவர்களால் திருமுறை நூல்கள் அருளிச்செய்யப் பெற்றன. இவ்வுண்மை,

பாலைநெய்தல் பாடியதும்
பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்றேவிக்
கராங்கொண்ட - பாலன்
மரணம் தவிர்த்ததுவும்
மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுளால் உணரப்படும். திருமுறைகளின் இணையற்ற பெருமைகளுக்கு இதுவும் ஒரு பெருங் காரணமாகும்.

இதுபற்றியே சமய உணர்வும் தெளிவுமுடைய தக்கோர்கள் அனைவருக்கும் திருமுறைகளின் பெருமை, நிலத்தினும் பெரியதாய்—வானினும் உயர்ந்ததாய்—நீரினும் ஆரளவிலதாய்த் தோன்றும் என்பது திண்ணம். பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரம் ஆயிரம் அறிஞர்களும் ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆகிய அனைவரும், திருமுறைகளை ஓதி ஓதியே சிறப்புற்றுயர்ந்துய்ந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

## தமிழ்ப்பெருஞ் சான்றோர்கள் :

அணிமைக் காலத்தே பேரருட் பெருஞ் செல்வராகப் பிறங்கி யிருந்த அருட்டிரு இராமலிங்க அடிகளார், தேவார திருவாசகத் திருமுறைகளை நாடோறும் தவறாது ஓதியே உயர்நிலை எய்தினர் என்னும் உண்மையினை, அவர்தம் திருமொழிகளாலேயே நாம் செவ்விதின் உணரப் பெறுகின்றோம்.

தேன்படிக்கும் அமுதாம்நின்
திருப்பாட்டைத் தினம்தோறும்
நான் படிக்கும் போது, என்னை
நான் அறியேன் ! நா ஒன்றோ ?
ஊன்படிக்கும் ! உளம்படிக்கும் !
உயிர்படிக்கும் ! உயிர்க்குயிரும்
தான்படிக்கும் ! அநுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே !

இவ்வாறே வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் சான்றோர் ஆகிய தாயுமான அடிகள் திருமுறைகளைப் பலகாற் பயின்று பாராயணம் செய்து, அவைகள் "மொழிக்கு மொழி தித்திப்பாக" இருப்பதனை வியந்து பாராட்டி மொழிந்தருள்கின்றார்.

தேவரெலாம் தொழச்சிவந்த
செந்தாள் முக்கண்
செங்கரும்பே ! மொழிக்குமொழி
தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல்
முற்று மோதான் ?

வாக்கிற் சிறந்த அருணகிரிநாதர், திருமுறை ஆசிரியர்களுள்ளே திருஞானசம்பந்தர்பால் மிகவும் ஈடுபாடும் பக்தியும் வாய்ந்தவராய், அவரை முருகனின் அவதாரம் எனக் கொண்டு பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியிருப்பதுடன், திருஞான சம்பந்தர் போலச் சிறந்த முறைகளிற் பாடும் திறமையினைத் தமக்கு அருள் புரிதல் வேண்டும் என முருகனைப் பரவித் தொழுகின்றார்.

புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல,
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே!

இவ்வாறே சிவஞான முனிவர், குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலிய செந்தமிழ்ச் சைவச் சான்றோர்கள் அனைவரும், திருமுறைகளின்பாற் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு விளங்கியிருந்தனர்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைப் போற்றித் தொகுத்து உதவியருளினார். சேக்கிழார் சுவாமிகள் தம்முடைய வாழ் நாள் முழுவதும் திருமுறைகளை நுனித்து ஆராய்ந்து

திளைத்துக் களித்தார்; திருமுறைகள் என்னும் திருப்பாற் கடலைக் கடைந்து, பெரிய புராணம் என்னும் தெய்விக அமிழ்தத்தினைச் செவ்விதில் நமக்குத் திரட்டிக் கொடுத்தவர் அவரே. பட்டினத்தடிகள் "வித்தகப் பாடல்" எனத் திருமுறைகளை வியந்து போற்றிக்குறிப்பிடுகின்றார்

"நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப்பான்"

எனச் சிவபெருமான் திருமுறைகளின்பாற் கொண்டுள்ள சிறந்த ஈடுபாட்டினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நன்கெடுத்துமொழிகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலத்திற்கு முன்பே "திருமுறைஎழுதுவோர்வாசிப்போர்" பெருகியிருந்தனர் என்பதும், அத்தகையவர்களைத் தக்கவாறு பயிற்றி விடுத்தல் சிறந்த பெருந்தொண்டாகக் கருதப்பெற்றுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது எனபதும், சுணாநாத நாயனார் வரலாற்றால் அறியப்படுகின்றன.

## மெய்கண்டார் :

'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும்' தன்மை வாய்ந்த நிறை மொழிகள் எனத் திருமுறைகளைத் தொன்னெடுங்கால முதலே தமிழ்ப் பெருமக்கள் உறுதியாகத் தெளிந்து கொண்டு, பக்தியுடன் ஓதிப் பயின்று வந்துள்ளனர். திருமுறைகளை ஓதி வழிபடுதலின் வாயிலாக, மக்கள் தாம்தாம் விழைந்த பயன்களை விழைந்தவாறே மிகவும் நிரம்பப் பெற்று, மகிழ்ந்து வந்திருக்கின்றனர். ஆசிரியர் மெய்கண்டார் பெருமானின் வரலாறே இவ்வுண்மைக்குப் போதிய சான்றாகும். நெடுநாள் மகப்பேறு இன்றி வருந்திய அச்சுத களப்பாளர், அக் குறைதீரற் பொருட்டுத் திருமுறைகளிற் கயிறு சார்த்திப்பார்த்த பொழுது,

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினே டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண் டாவென்றும்
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே

என்னும் திருஞான சம்பந்தர் பாடல் கிடைக்க, அதன்படியே அவர் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குள நீரில் மூழ்கி இறைவனை வழிபட்டுவர, அதன் பயனாகவே, சைவ சித்தாந்தத் தனிப்பெரு ஞாயிறு ஆகிய ஆசிரியர் மெய்கண்டார், அச்சுத களப்பாளர்க்கு மைந்தராகத் தோன்றி யருளினார் என்பது வரலாறு. திருமுறைகளின் பெருமையை உணர்ந்து கொள்ளுதற்கு இன்னோரனைய உண்மை வரலாறுகள் உறுபெருஞ் சான்றுகளாகும்.

## திருமுறைச் சொற்றொடர்கள் :

செந்தமிழ்ச் சான்றோர்கள், திருமுறைகளின்பால் எல்லையில்லாத பத்திமை பூண்டு ஒழுகி வந்திருக்கின்றனர். அதனால் திருமுறைகளில் வரும் சொற்கள், சொற்றொடர்கள் தாமும், மிகவும் மதித்துப் போற்றப் பெற்றுள்ளன. தமிழ் நூல் உரையாசிரியர்களுள்ளே மிகவும் தலை சிறந்த ஒருவர் நச்சினார்க்கினியர். அவர் தம் பெயர், "நச்சுவார்க் கினியர் போலும் நாக ஈச்சரவனாரே" என்னும் தேவாரப் பாடலை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை இயற்றியவர் அடியார்க்கு நல்லார் என்பவர். "கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே" என வரும் தேவாரத்தை ஒட்டியே அவர்க்கும் அப்பெயர் வழங்கிற்று. கம்பரை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச்சடையப்பரின் இளவல் பெயர் இணையார மார்பன் என்பது. அது தானும் "இணையார மார்பன் என் எழில் நலம் உண்டு இகழ்வானோ?" எனவரும் தேவாரப் பாடலை ஒட்டியே அமைக்கப் பெற்றது. இன்னனைய செய்திகள் பலவும், திருமுறைகளின் பெருமை யினையும், அவற்றில் நம் முன்னோர்கள் கொண்டிருந்த அளவிறந்த பெருமதிப்பினையும், ஈடுபாட்டினையும் உணர்த்தும்.

நிரம்ப அழகிய தேசிகர் என்பவர் சேது புராணம் முதலியன பாடிய சிறந்த புலவர். சிவஞான சித்தியார்க்கு உரை வகுத்த அறுவர்களுள் அவரும் ஒருவர். அவருக்கு அப்பெயர் "நித்த மணாளர் நிரம்ப அழகியர் சித்தத் திருப்பரால் அன்னே என்னும்" என்னும் திருவாசகத் தொடரால் அமைந்தது.' சைவ சித்தாந்தநூலாசிரியர்களுள் ஒருவராய்,"உண்மை விளக்கம்" என்னும் நூலினை இயற்றியுதவியருளியவர், மனவாசகங் கடந்தார் என்பவர்.

அவருக்கும் அப்பெயர் "எனை நான் என்ப தறியேன் பகல் இரவு ஆவதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்தன் ஆக்கினன்" என்னும் திருவாசகப் பாடலை ஒட்டியே வழங்கப் பெற்றது. இவைகளெல்லாம், நம் முன்னோர்கள் திருமுறைகளில் எத்துணைப் பத்திமை மிக்கு விளங்கியிருந்தனர் என்பதனை, நமக்கு நன்கினிது உணர்த்தும்.

## மண்ணகத்தில் விண்ணகம் :

இங்ஙனமே திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்களும் தலங்களுமே சிறப்பும் முதன்மையும் தெய்விகமும் மிக்கனவாகத் தமிழ் மக்களாலும் தமிழ் மன்னர்களாலும் பாராட்டப் பெற்று மிகவும் புகழ் பெற்றுத் திகழ்கின்றன. திருமுறை ஆசிரியர்கள் தோன்றி நடந்து உலவி வாழ்ந்ததன் பயனாகவே, நம் தென்றமிழ்த் திருநாடானது "சித்திக்கு வித்தாகிய தென்னாடு" என அறிவறிந்த மேலோர்களாற் சாலவும் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்றது. திருமுறைகளின் பயனாகவே, உலகில் வேறு எங்கணும் காண்டற்கரிய நிலையில், எண்ணில்லாத பல பெருங்கோயில்கள் கலை நலஞ் சிறந்த நுண்ணிய பல வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, நம் நாடானது "மண்ணகத்தில் விண்ணகம்" (Paradise on Earth) என்று வியக்கும்படி மாட்சிமையுற்று வயங்குகின்றது. இம்மட்டோ! தாம் தோன்றிய காலம் முதல் இது காறும் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக, எண்ணிறந்த பல கோடிக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தித் தூய்மை செய்து, அவர் தம் வாழ்க்கையினை வளமுறுத்திப் புனிதமாக்கி உயர்வித்து, உய்வித்து வந்துள்ளவை திருமுறை நூல்களே எனின், அத் திருமுறைகளின் பெருமையினை அளவிட் டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ?

## மறு மலர்ச்சி நூல்கள் :

இனி, திருமுறைகளின் பெருமையினை இஞ்ஞான்றை முறையிலும் நாம் ஒரு சிறிது ஆராய்ந்து காண்டல் இயலும். இக்கால மக்கள் சிலர் "மறுமலர்ச்சி நூல்கள்"(Renaissance Literature) என ஒரு சில நூல்களைப் பெரிதும் புகழ்ந்து போற்றக் காண்கின்றோம். உண்மையாக ஆராய்ந்தால், சைவத் திருமுறைகள் மறு மலர்ச்சி நூல்கள் எனப் போற்றப் படுவதற்கு மிகவும் தகுதியும் உரிமையும் உடையன எனலாம்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் திருமுறை ஆசிரியர்கள் இந்நில வுலகில் தோன்றி வாழ்ந்த பொழுது, தமிழ் வேந்தர்களாகிய தென்னர் சேரர் சோழர்களின் ஆட்சி நிலை குலைந்தது. தமிழர் அல்லாத பல்லவர் களப்பிரர் முதலிய வேற்றரசர்களின் ஆட்சி தமிழகத்தில் தலை எடுத்து நின்றது. அது பொழுது வட நாட்டில் ஹர்ஷன் என்னும் பேரரசன் (கி. பி. 606-647) ஆண்டு வந்தான். சாளுக்கிய நாட்டில் இரண்டாம் புலிகேசி (கி. பி. 610-642) என்னும் மன்னன் செங்கோல் செலுத்தினன். காஞ்சிபுரத்தில் மகேந்திர வர்ம பல்லவனும் (கி. பி 600-630), அவனது மகனாகிய நரசிம்ம வர்ம பல்லவனும் (கி. பி. 630-668) அரசோச்சினர். மதுரையில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் (கி. பி. 640-6.0) அரசு கட்டில் வீற்றிருந்தான். சிறுத்தொண்டர் பம்பாய்க்கு அருகேயுள்ள வாதாபி என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் (கி. பி. 642) இரண்டாம் புலிகேசியை வென்று, அந்நகரை அழித்து அங்கே வெற்றித் தூணை நாட்டினர். அதுபோது வேற்று நாட்டு மக்கள் பலர் தமிழகத்தில் பெருந்திரளாகப் புகுந்து கலந்து, தங்களது பொருந்தாத கொள்கைகள் தீய பழக்க வழக்கச் செயல்கள் முதலிய வற்றைத் தமிழ் மக்களிடையே திணித்துப் பரப்பி வந்தார்கள்.

இங்ஙனம் சங்க காலத்திற்குப் பின்னர்த் தமிழ் நாட்டில் நிலவிய இருண்ட காலச் சூழ்நிலைகளால் மங்கி மழுங்கிக் கிடந்த தமிழ் மொழியும் இலக்கியமும் கவிதையும் கலைகளும் தமிழர் வாழ்வும் ஆகியன எல்லாம், திருமுறைகளால்தான் மீண்டும் பொங்கிப் பொலிவுற்றுச் செழித்துச் சிறந்தன. இவைகளெல்லாம் புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சியும், புதுப்புது வகையான அமைப்புகளும் சிறப்புகளும் பெற்று வளர்தற்குத் திருமுறை யாசிரியர்களே காரணர்கள் ஆவர். சங்ககால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும், திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும் வடிவால் வேறுபட்டுத் தோன்றுதல் ஒன்றே, கால நிலையின் விளைவாக எழுந்து சாலத் தழைத்துப் பெருகிய திருமுறைகளை மறு மலர்ச்சி நூல்கள் என வற்புறுத்தற்குப் போதிய சான்று பகரும்.

## புதுமை இலக்கியங்கள் :

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பலவகை மாறுதல்களையும், அந்நாட்டு மொழியில் வழங்கும் இலக்கியங்களின் நடை மாறுதல்களே நன்கினிது விளங்கக் காட்டும் என்பர் அறிஞர். திருமுறை யாசிரியர்கள் மக்களியக்கத்தலைவர்கள்! பற்பல ஆயிரம் தொண்டர்கள் சூழ நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர்கள்! திருமுறைப் பாடல்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மூலை முடுக்கர்களிலும் சென்று பாடப்பெற்று, மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு பரவிய மக்கள் இலக்கியங்கள்! திருமுறைகளின் சொல் புதிது, பொருள் புதிது, நடை புதிது, சுவை புதிது! சங்ககால நூல்களோடு ஒப்பிட்டு நோக்கின், திருமுறை நூல்கள் பல வகைகளிற் புதுமை மிக்குத் திகழும் புத்திலக்கியங்களே யாகும் என்று செவ்விதில் தெளிந்து கொள்ளலாம். சங்ககாலச்செந்தமிழ், திருமுறைகளின் காலத்தில் 'தெய்வச் செந்தமிழ்' எனப் புதுமைப் பொலிவு நலம் எய்தியது எனலாம். சங்ககால இலக்கியங்களிற் காண முடியாத இசை நலஞ் சான்ற அரிய இனிய அழகிய செந்தமிழ்ச் செய்யுள் வகைகளை, நாம் முதன் முதலாகத் திருமுறைகளிலேயே காணப் பெறுகின்றோம்.

| | |
|---|---|
| திருவிராகம் | ஏகபாதம் |
| வழிமொழித் | திருவெழுகூற்றிருக்கை |
| திருவிராகம் | சக்கரமாற்று |
| திருஇருக்குக்குறள் | சந்த இயமகம் |
| மொழி மாற்று | கூட சதுக்கம் |
| மாலை மாற்று | திருநேரிசை |
| திருத்தாளச் சதி | திருக்குறுந்தொகை |
| யாழ் மூரி | திருத்தாண்டகம் |

என்பனபோலும் பலதிற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப்பாடல்கள், முதன் முதலாகத் திருமுறை நூல்களில்தான் காணப்படுகின்றன. எனவே, திருமுறைகளை நாம் புதுமை இலக்கியங்கள் அல்லது மறுமலர்ச்சி இலக்கியங்கள் எனச் சிறப்பித்துக் கூறுதல் பெரிதும் பொருந்துவதேயாகும்!

## திருக்கோயில்களும், திருமுறைகளும் :

கலைகள் பலவற்றிற்கும் இருப்பிடமாக விளங்கும் எண்ணிறந்த பல கோயில்களைத் தமிழ் நாட்டில் நாம் இன்று காண்கிறோம். இத்துணைப் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்கள் தோன்றுதற்குக் காரணம் திருமுறைகளே எனக்கூறுதல் மிகையன்று. திருக்கோயில்கள் மக்கட் சமுதாயத்திற்கு விளைவித்து வரும் பல திற நலங்களுக்கும் அளவேயில்லை.

நம் தமிழ் நாட்டில் பழங்காலத்தில் திருக்கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும், கலைஞர்களின் கலைக் கழகங்களாகவும், அறங்கூறும் அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கு ஊணுடை நல்கி ஓம்பும் புகலிடங்களாகவும், மக்கட்குத் தொழில்தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்து வாங்கி உதவிபுரியும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலங்காக்கும் மன்றங்களாகவும், போர்க்காலங்களில் படைவீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன*. இன்றும் அவற்றால் விளைந்து வரும் பயன்களுக்கு எல்லையில்லை. இத்தகைய கோயில்களும் சமய நிலையங்களுமெல்லாம் தோன்றுதற்கு வாயிலாக அமைந்த திருமுறைகளின் பெருமை, எம் ஒருநாவாற்கூறல் ஒல்லுமோ?

## தலங்களும், வரலாறுகளும் :

திருமுறைகளின் வாயிலாகத் தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களைப் பற்றியும், அவ்வூர்களுக்குச் செல்லும் வழிகளைப்பற்றியும், அவ்வவ்வூர்களிற் காணப்பெறும் பல்வகைச் சிறப்பியல்புகளைப் பற்றியும், நாம் அறிந்து கொள்ளலாம்.

"உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"

எனச் சேக்கிழார் பெருமான் பாடுவது போல, திருமுறையாசிரியர்கள் சென்ற சிறப்பையோ, அல்லது அவர்களின் திருப்பாடல்களில் எவ்வகையாலேனும் குறிப்பிடப்பட்ட சிறப்

---

* "Above all, temples became centres of religious and social life...... As landholder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval South Indian temple has few parallels in the annals of mankind."

—Prof. K. A. NILAKANTA SASTRI, M.A.,

பையோ பெற்றுள்ள, எந்த ஊரும், எந்தத்தல மும், எந்தக் கோயிலும், நம்மை 1300 ஆண்டு கட்கு முற்பட்ட காலநிலைக்கு அழைத்துக் கொண்டுபோய், நம் உள்ளத்தை யெல்லாம் உருக்குகின்றது என்பதில் ஐயம் உண்டோ ?

மேலும் 'நளன்கெழுவி நாளும் வழிபாடு செய்தது' நள்ளாறு என்றும், 'தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாம் இருவர் புள்ளானூர்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூர்' என்றும், 'முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனி சாபம் பின்னொருநாள் அவ்விண்ணவர் ஏத்தப் பெயர்வெய்தித் தன் அருளாற் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு' கண்ணார் கோயில் என்றும், 'நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத் தொடொல்க வாலினால் கட்டிய வாலியார் வழி பட மன்னுகோயில்' ,குரங்காடுதுறை என்றும், 'வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச் செய்ய கண் வளவன் முன் செய்தகோயில்' வைகல் மாடக் கோயில் என்றும், இராமன் இலக்குவன் சாம்புவான் சுக்கிரீவன் அநுமான் ஆகியோர் தொழுதது திருவுசாத்தானம் என்றும், பலவேறு தலங்களின் வரலாறுபற்றிய செய்திகளையுங்கூட நாம் திருமுறைகளால் அறிந்து மகிழ்கின்றோம்.

## இசைக்கலையின் அரசிருக்கை :

திருமுறை நூல்கள் பலவேறு கலைகளுக்கு நிலைக்களம் எனத் திகழ்வன. சிறப்பாக இசைக்கலையின் அரசிருக்கையாகத் திகழும் சிறப்பு திருமுறைகளுக்கு உண்டு. இசைக்கலை யின் சிறப்பை ஷேக்ஸ்பியர் பின்வருமாறு பாடுகின்றார் :

இனியநல் இசையைக் கேட்டும்
  இளகிடா திருப்பான் நெஞ்சம்,
துனிதரு நரகம் போலச்
  சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதரு வஞ்சம் சூழ்ச்சி
  முதற்பல தீங்கே செய்வான்,
நனிமிகக் கொடியன், அந்தோ !
  அவனைநாம் நம்பொ ணாதே !*

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு.

இத்தகைய சிறந்த இசைக்கலைத் துறையில் திருமுறைகள் எத்துணைச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது என்பதனை, எண்ணி யுணருந் தோறும் திருமுறைகளின் பெருமை தெளிவுறப் புலனாகும். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் இயற்றியளித்த யாழ்நூல் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இம்மட்டோ ! தமிழ கத்தின் ஐந்திணைக்கும் உரிய கருப்பொருள் வகைகளை யெல்லாம் பற்றியும், திருமுறை நூல் களிற் பற்பல குறிப்புக்களை அறிந்து நாம் பெரி தும் மகிழலாம்.

## அகச்சான்றுகள் :

திருமுறைகள் அவற்றைப் பாடியருளிய அருளாசிரியர்களின் வரலாற்றை யுணர்த்தும் அகச்சான்றுகளைத் தம் அகத்தே கொண்டு இலங்குகின்றன. அவ்வகச் சான்றுகளால் (Internal evidences) நாம் அப்பெருமக்களின் வாழ்க்கை பற்றிய பல்வேறு விவரங்களையும் அறிந்துகொண்டு மிகவும் பயன் அடைகின் றோம். லாங் ஃபெல்லோ (H. W. Longfellow) என்னும் ஆங்கிலக் கவிஞர், 'சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினை யும் தெய்விகம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளலாம் என நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மண லில், அவர்கள் பதித்துவிட்டுச் செல்லும் அவர் களின் அடிச்சுவடுகள், பிறவி என்னும் கடலில் வாழ்க்கை என்னும் மரக்கலத்தில் ஏறி, வழி தவறித் தடுமாறி நிற்கும் சகோதரர்களுக்குத் தைரியம் அளித்து நலம் புரிகின்றன'' என் கின்றார்*.

சீலம் மிக்க பெருமக்கள்
  சிறந்த நல்ல வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
  இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;

* "The man that hath no music in himself,
  Nor is not moved with concord of
  sweet sounds,
  Is fit for treasons, strategems and spoils.
  Let no such man be trusted."
  —SHAKESPEARE.

* "Lives of great men all remind us
  We can make our lives sublime,
  And, departing, leave behind us,
  Footprints on the sands of time;
  Footprints, that perhaps another,
  Sailing o'er life's solemn main,
  A forlorn and shipwreck'd brother,
  Seeing, shall take heart again."
  —H. W. LONGFELLOW.

காலமணலில் பதிந்தஅவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரியமேகொண் டுயச்செய்யும் !

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு.

இதற்கு ஏற்ப, திருஞானசம்பந்தர் ஞானப் பால் உண்ட செய்தி, திருநாவுக்கரசர் சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்ற தன்மை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தடுத்தாட் கொள்ளப் பெற்ற சிறப்பு, மாணிக்கவாசகர்க்காக இறைவன் நரிபரியாக்கிய மாட்சிமை முதலிய பல வேறு செய்திகளையும், திருமுறைகளின் வாயிலாக அறிந்து, நாம் வியந்து மகிழ்ந்து இன்புறுகின்றனம் அல்லமோ ?

## சித்தாந்த சாத்திரங்கள் :

இன்னனைய எத்துணையோ பல பெருமைகளுள், சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை தோன்றுதற்கு அடிப்படையாக அமைந்த தனிப்பெருஞ் சிறப்பும், திருமுறைகளின் பெருமைகளுள் ஒன்றாகும். திருமுறைகளின் சிறந்த பிழிவே, சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். சமயங்கள் வெறும் அறிவாராய்ச்சிக் காரர்களால் உண்டாக்கப்படுவதில்லை. இறைவனிடமும் தம்மிடமும் மாறுத நம்பிக்கை வாய்ந்த அருள் ஞானப் பெரு வீரர்களாலேயே சமய நெறிகள் வகுக்கப் படுகின்றன. அங்ஙனம் வகுக்கப்பெறும் சமய நெறிகளின் உண்மைகளையே பின் வரும் அறிஞர்களும் மெய்யுணர்வாளர்களும் தத்தம் நூல்களாலும் உரைகளாலும் விளக்கத் தலைப்படுகின்றனர் !*

இவ்வுண்மைக் கேற்ப, நமது சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் கி. பி. 12-13-14-ஆம் நூற்றாண்டுகளில் செம்மையுறத் தோன்றுதற்கு, மூல முதற் கருவாகவும், தலையூற்றாகவும், அடிப்படை நிலைக்களமாகவும் விளங்கித் திகழ்ந்தவை திருமுறைகளே எனின், அவற்றின் அருமை பெருமைகளுக்கும் ஓர் அளவு உண்டோ ?

## பன்னிரு திருமுறைகள் :

திருஞானசம்பந்தர் பாடல்கள் தூய சிறந்த நடை நலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத்திறனும், எழில்கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக்குரிய பெருமித உணர்ச்சியும் வீறும் பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

திருநாவுக்கரசர் பாடல்கள் அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, மக்கள் வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்ப நுட்பமுறச் சுவைபெருக உருக்கமாக அறிவுறுத்துகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த பாடல்களோ, கலையழகும் இசை யினிமையும் நகைச்சுவை நலங்களும், பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய்மைகளை, நம்மனோர் மனங்கொளத் தேற்றுகின்றன.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வில் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து, எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில்லாத பக்திப் பெருநூலாக ஒளிர்கின்றது. இறையருளைத் தேடி யலைந்து, முயன்று பெற்று, உய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளக்கிக் காட்டும் திறனில், திருவாசகம் போலச்சிறந்த நூல், வேறொன்றில்லை. தன்னை ஓதுபவர்களின் சிந்தையிலுள்ள கலக்கத்தைத் தெளிவித்துச் சிவமாக்கி உய்விக்க வல்ல சிறப்பினது திருவாசகம்.

திருச்சிற்றம்பலக் கோவையார், சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய காதலுணர்ச்சியோடு, கடவுளுணர்ச்சியையும் கலந்தியைத்துப் பிணைத்துப் பாடி, கலை நலமெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங்கருவூலம் ஆக,

*" Forms of religion are founded, not by philosophers and theologians, with their interpretations and argumentations, but by heroic men of faith—faith in God and faith in themselves. ... The former come later on to justify and sanction what already exists, with their elaborate exegetics, written solely for the learned and thoughtful—not to say the sceptical."

—**Prof. P. SUNDARAM PILLAI,** M.A.

'காமம் சான்ற ஞானப் பனுவல்' எனக் குமர குருபர சுவாமிகள் பாராட்டும் நிலையில், சிறந்தோங்கித் திகழ்கின்றது.

திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் நூல்களின் பாடல்களும், இனிமையும் சிறப்பும் மிக்கவை. கண்டராதித்த சோழர் (கி. பி. 949-957) பாடிய பாடல்களும், முதலாம் இராஜ ராஜ சோழன் (கி. பி 985-1014) கட்டிய இராஜ ராஜேச்சரம் பற்றிய பாடல்களும், இராஜேந்திர சோழன் (கி. பி. 1012-1044) கட்டிய கங்கைகொண்ட சோழேச்சரம் பற்றிய பாடல்களும், பிறவும் இவற்றில் அமைந்திருக்கின்றன.

திருமூலர்அருளிய திருமந்திரம் என்னும் நுண்பொருள் மறை நூல், ஆராய்ச்சி அனுபூதி என்னும் இருவகை நெறிகளுள், அனுபூதி நெறியால் நம்மனோர் இறைவனை அடைந்து உய்யுமாறு பலதிற யோகப் பயிற்சி முறைகளையும், ஐந்தெழுத்து முதலிய அரிய பல மந்திரங்களையும், அவற்றை உருவேற்றுதற்குரிய பல வகை இயந்திர அமைப்புக்களையும், சிறந்துயர்ந்த தத்துவ ஞானப் பொருள்களையும், அழகிய இனிய நீதிக் கருத்துக்களையும், ஓதற்கெளியவாய் உணர்தற் கரியவாய் உள்ள பாடல்களால் திறம்பட விளக்கிச்செல்கின்றது. இதனை 'ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிரு மந்திர மாலை' எனச் சேக்கிழார் அடிகள் சிறப்பித்துக் கூறியருள்கின்றார்கள்.

பதினொன்றும் திருமுறை, திருவாலவாய் உடையார் திருமுகப்பாசுரம், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள் முதலிய பலரின் பாடல்கள், ஆகிய பலவற்றைக் கொண்ட சிறப்புடையது.

பன்னிரண்டாம் திருமுறை ஆகிய பெரிய புராணமோ, தமிழகத்தின் சமய-சமுதாய-கலாசார-வரலாற்றுப் பெருங்களஞ்சியம் எனத் தலை சிறந்து விளங்குவது. தமிழ் நாட்டின் தேசீய காவியம் (National Epic) என்று பெரிய புராணத்தைக் கூறுவது மிகமிகப் பொருந்தும்.


இத்தகைய சிறந்த திருமுறை இலக்கியங்களின் பயனாகவே, தமிழ் மொழியானது உலக இலக்கியங்களில் தனிச் சிறப்பிடம் பெற்று, ஒப்புயர்வற்றுச் சுடர்விட்டு ஒளிர்கின்றது.*

## முடிவுரை :

இத்தகைய சிறந்த பல பெருமைகளையுடைய, தெய்விக நலம் சிறந்த திருமுறைகளை அன்பும் ஆர்வமும் கொண்டு, முறையாக ஓதி இறைவனை வழிபட்டு, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்களை யெல்லாம் இனிது அடைய முயலுவோமாக!

* "In the matter of pure *devotional outpouring*, exuberance and ebullience of language, Tamil has hardly a parallel in the world's literature"

—Dr. C. P. RAMASWAMY AIYER, in a P.E N. Conference.



ஸ்ரீ சென்ன மல்லேசுவரர் தேவஸ்தானம், சென்னை-3.

(வெண்பா)

திருமுறை நூல்களின் தெய்வநலம் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து)-அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்கள்என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து. (1)

இயற்கைஎழிற் கின்புறுதல் வாழ்வியலைத் தேர்தல்
மயற்கையறும் மெய்யறிவு வானில்-உயர்ச்சியுறல்
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை திருமுறைபோல் இன்பு. (2)


மனக்கவலை மாற்றும் மருந்தாகும், எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்-தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தனஇல் மற்று. (3)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்றாய்-விலைவரம்பின்று
உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர்! (4)

—ஆசிரியர்.

[குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் கோயிலில் நடைபெற்ற திருமுறை விழாவில், 22-5-64 அன்று நிகழ்த்திய தலைமை யுரையைத் தழுவியது.

—ஆசிரியர்.]



ஸ்ரீ சென்னகேசவப்பெருமாள் தேவஸ்தானம், சென்னை-3.

# திருமுறை நூல்களின் சிறப்பு

[விவிலிய நூலின் சிறப்பினை விளக்கி, **Amos R. Wells** என்பவர் இயற்றிய **'The Sufficing Bible'** என்னும் அழகிய ஆங்கிலக் கவிதையினைத் தழுவி, மொழி பெயர்த்து இயற்றப் பெற்றது. —ஆசிரியர்.]

திருமுறை நூல்களின் சிறப்பும் பயனும்
உணர்தொறும் உணர்தொறும் உலப்பில வாகும்;
களைப்புறின், நமக்குக் கட்டிலாய் விளங்கும்;
நளிஇருள் தன்னில், ஒளிமிக நல்கும்;
பசிவரின், சிறந்த ருசிமிகும் உணவாம்;
பயமுறில், போரிடக் கவசமாய்ப் பயன்படும்;
நோயுறில், போக்கும் வாயுறை மருந்தாம்!

செந்தமிழ் மணங்கமழ் திருமுறை நூல்கள்
தனிமையிற் சூழும் நனியுயர் நட்பு;
பணிசெய முனையில், அணிமிகு கருவி;
விளையாட்டு அயரக் கலையாட்டு இனியயாழ்;
பேதைமை பிறங்கிடின் மாபெரும் பள்ளி;
தளர்ந்து விழின், நமைத் தாங்கும் தரைநிலம்;
குளிர்மிக வாட்டின் ஒளிமிகும் நெருப்பு;
துணிந்து விரும்பினுல், அணிந்தெழு சிறகு;
வழியினை விடுப்பின், மதிவழி காட்டி!

தெய்வ ஒளிதிகழ் திருமுறை நூல்கள்,
ஆடையில் நிலையுறின், அரும்பெறல் உடைதரும்;
சிறைப்படில், நல்ல நிறைப்படு வெளியாம்;
புயல்எழுந்து ஆர்ப்பின், புகலிடம் அளிக்கும்;
அருஞ்செயல் ஆற்றப் பெருங்கடல் போலும்!
ஓய்வுற விழையில், சாய்பெரும் பசுந்தரை;
கவலையிருள் கவ்விற் கடிந்தருள் ஞாயிறு;
அழகிலாச் சூழலில் அழகொளிர் பூங்கா;
தாகம் கொளின், அது தணிக்கும்நல் ஓடை!
மூச்சு முட்டிடில், ஆற்றல்தரு காற்று!

சிவநெறிச் செல்வமாய்ச் செம்மை செறிந்தொளிர்ந்து
இங்ஙனம் எல்லாம், எணைப்பல வகைகளில்
நமக்குப் பயன்தரும், நலமிகு திருமுறை
நூல்களின் சிறப்பு, நுவலுதற் கெளிதோ?

# திருக்களிற்றுப்படியார்

## முன்னுரை :

தமிழ் நாட்டிற்குத் தனிப்பெருஞ் சிறப்பை விளைவிக்கும் மேன்மை யுடையதாகத் திகழ்வது, சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையாகும். "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என உமாபதி சிவாசாரியரும், "ஆரா இன்ப அருங்கனி பிழிந்ததன் சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேன் அமுது" எனக் குமரகுருபரரும் பிறரும், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை வியந்து பாராட்டி யுள்ளனர்.

## சைவசித்தாந்த சாத்திரங்கள்

"சைவ சித்தாந்தம்" என்னும் தலை சிறந்த தத்துவக் கொள்கையினைத் தகவுற எடுத்து விளக்கும் முதன்மை சான்ற தமிழ் நூல்கள் பதினான்கு ஆகும். அவைகள் முறையே திருவுந்தியார், திருக்களிற்றுப்படி யார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப் பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. இவற்றைச் 'சைவ சித் தாந்த சாத்திரங்கள்' அல்லது 'மெய்கண்ட நூல்கள்' என அறிஞர்கள் வழங்குவர்.

உந்தி களிறு
உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை
பிரகாசம்-வந்த அருட்
பண்பு வினா போற்றிகொடி
பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி
சங்கற்பம் உற்று

எனவரும் பழைய செய்யுள் ஒன்று, இச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பெயரை யும் வரிசைப்படுத்தி வழங்கி யிருத்தல் காண லாம்.

## திருக்களிற்றுப்படியார் :

திருக்களிற்றுப் படியார், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் இரண்டாவதாகத் திகழ்கின்றது. இதனை இயற்றியவர் திருக் கடவூர் உய்ய வந்த தேவ நாயனார் என்பதும், இந்நூற்கு உரை வரைந்தவர் திருவாவடுதுறை ஆதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசத் தம்பிரான் என்பதும்,

சேடன் படிபுரக்கும்
தென்கடவூர் உய்யவந்தான்
பாடும் களிற்றுப்
படிதனக்கு-நீடியசீர்
தேடுபுகழ்ச் செஞ்சொற்
சிவப்பிரகா சன்திருந்த
நாடியுரை செய்தான் நயந்து

என்னும் உரைப்பாயிரச் செய்யுளால் உணரப் படுகின்றன.

## உய்ய வந்தார் :

திருக்களிற்றுப்படியார் நூலிலுள்ள வெண் பாக்கள், திருவுந்தியார் நூலிலுள்ள செய்யுட் களைப் பின்பற்றி, அவற்றின் சொற்பொருள் நலங்களை முழுவதும் தழுவி, அவற்றிற்கு ஒரு விளக்கவுரை போல இயற்றப்பட் டுள்ளது. இவ்வமைப்பினாலும்,

"வையம் முழுதும்
மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தானுரை உந்தீபற
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற"

என்னும் செய்யுளாலும், திருவுந்தியார் நூலை இயற்றியவர் உய்ய வந்தார் என்பது புலனாகின்றது. இவரே 'திருக்களிற்றுப்படியார்' இயற் றிய திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனா ரின் ஞானாசிரியர் என்பர்.

திருவுந்தியார் ஆசிரியர் திருவிசலூரைச் சேர்ந்தவர் என்பதற்குரிய சான்றேதும் இல்லை.

மேலும் இந்நூல் செய்த பின்னர் அவர் தல யாத்திரை புரிதலை மேற்கொண்டு விட்டார் என்றும் ஒரு செவிவழிச் செய்தியுண்டு.

என்னறிவு சென்றளவில்
யான்நின் றிருந்தபடி
என்னறிவி லார்அறிக
என்றொருவன்-சொன்னபடி
சொல்லக்கேள் என்றொருவன்
சொன்னான் எனக்கதனைச்
சொல்லக்கேள் யான்
உனக்கச் சொல்.

எனவரும் பாடலால், திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், திருவுந்தியார் இயற்றிய உய்யவந்த தேவரின் நேர்முக மாணாக்கர் அல்லர் என்றும், அவர் தம் மாணாக்கரின் மாணாக்கரே யாவர் என்றும் தெரிகின்றது.

## ஆளுடைய தேவர் :

இந்நூலாசிரியரின் ஞானாசிரியர் திருவிச லூரில் வதிந்திருந்தவர் என்பதும், அவர் ஒரு பெரிய சிவயோகியார் என்பதும்,

திருவிசலூர் ஆளும் சிவயோகி இன்றென்
வருவிசையை மாற்றினான் வந்து

எனவரும் இந்நூலின் செய்யுள் (96) கொண்டு தெளியலாம். அதன்கண்,

ஆளுடையான்! எந்தாமும்
ஆளுடையானே! அறியும்
தாளுடையான்!
தொண்டர் தலைக்காவல்!

எனவரும் முற்பகுதியினால், இவர்தம் ஞானா சிரியராகிய சிவயோகியாரின் பெயர் ஆளு டைய தேவநாயனார் என்பது புலனாகின்றது.*

## நூற்பெயர்க் காரணம் :

திருவுந்தியார் சுருங்கிய சூத்திரமும், திருக்களிற்றுப்படியார் விரிந்த பாஷியமும் போல, ஒன்றனை யொன்று தழுவி அமைந்தன வாகும். திருவியலூர் ஆளுடைய தேவர் விரும்பியருளியபடி, திருக்கடவூர் உய்ய வந்த தேவர் இதனை இயற்றியருளினர். இயற்றிய தன் பின்னர், இந்நூலாசிரியர் தில்லையம்பல வாணரைத் தரிசிக்கச் சென்றார்.

வையகம் பொலிய
மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே
ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த
கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்தச்
செய்தவப் பெரியோன்
சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு.

என்றபடி, இவரும் அங்குத் திருக்களிற்றுப்படி மருங்கு சென்று அம்பலவாணரைக் கண்டு தொழுதார். திருக்களிற்றுப்படியின்கண் தாம் இயற்றிப் போந்த இந்நூலை வைத்துப்பணிந்து நின்றார். அனைவரும் இந்நூலின் அருமை பெருமைகளை அறிந்து கொள்ளும் வண்ணம், அத் திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இந்நூலை எடுத்து அம்பலவாணர் திருவடிகளில் வைத்தது. அது கண்டு மகிழ்ந்த தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் பிறரும் அதிசயித்து, இந்நூற்குத் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் வழங்கி மகிழ்ந்தனர் என்பது வரலாறு.

* 'என்றொருவன் சொன்னபடி' என்றதில் ஒருவன் என்றது திருவுந்தியார் இயற்றிய உய்ய வந்தாரையும், 'என்றொருவன் சொன்னான்' என்றதில் ஒருவன் என்றது திருவியலூர் ஆளுடைய தேவ நாயனாரையும், 'சொல்லக்கேள் யான்' என்றதில் யான் என்றது திருக்கடவூர் உய்ய வந்தாரையும் குறிக்கும். பாட்டனின் பெயர் பேரனுக்கு வைத்து வழங்கப்பெறும் மரபு நெறி பற்றி, இத் திருக்களிற்றுப்படியாரின் ஆசியர்க்கும் உய்ய வந்தார் எனப்பெயர் வழங்கப்பெற்றது. வேறுபாடு தெரிதற் பொருட்டுப் பின்னர்த் 'திருக்கடவூர்' என்னும் அடை மொழி புணர்க்கப் பெற்றது. 'திரு நீலகண்டர்' என்னும் பெயரையுடைய நாயன்மார்கள் இருவர் இருந்தமையால், அவ்விருவருள் வேறுபாடு விளங்குதற் பொருட்டு, ஒருவரைத் 'திரு நீலகண்டத்துக் குயவனார்' என்றும், மற்றொருவரைத் 'திருநீல கண்டத் தப் பாணனார்' என்றும் இடைத்தெரிவு தோன்றச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியமை, ஈண்டு நினைந்து இன்புறத் தக்கது.

### உந்தியும் களிறும் :

திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும், ஏனைய சித்தாந்த சாத்திரங்கள் பன்னிரண்டற்கும் முற்பட்டு, சிவஞான போதத்திற்கும்கூட முந்தித் தோன்றியவை. இவைகள் சிவஞான போதத்திற்குப் பிற்பட்டனவாக இருந்திருப்பின், சிவஞான சித்தியார் உண்மை விளக்கம் சிவப்பிரகாசம் முதலிய நூல்களில் ஆசிரியர் மெய்கண்டார்க்கு வணக்கப்பாடல்கள் அமைந்திருப்பதுபோல, இந்நூல்களிலும் அத்தகைய குறிப்புக்கள் அமைந்திருக்கும். அங்ஙனம் காணப்படாமையொன்றே உந்தியும் களிறும் ஏனைய மெய்கண்ட நூல்களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதற்குப் போதிய சான்றாகும். மேலும் ஏனைய மெய்கண்ட நூல்கள் போலத்தடைவிடை முறைகளிலோ, பரபக்கம் சுபக்கம் என்னும் நெறிகளிலோ, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் முதலிய வகைகளிலோ, அதிகரணம் முதலிய நூற் பிரிவுகளிலோ அமைந்திருக்கக் காணாமையும், இவ்விரு நூல்களும் மற்றைய மெய்கண்ட நூல்களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதனை வலியுறுத்தும். இவ்விரு நூல்களும் சிவானுபூதி பற்றிய செய்திகளை மாத்திரம் தமக்குரிய பொருளாக மேற்கொண்டு, இனிய எளிய பாடல்களால் இயற்றப் பெற்றுள்ளன.

### மெல்வினையும் வல்வினையும் :

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், மெய்கண்டார்க்கு முற்பட்டவர் எனினும், சேக்கிழார் சுவாமிகளுக்குச் சற்றுப் பிற்காலத்தவர் என்றும், பெரிய புராணத்தில் மிகவும் ஈடுபாடும் பயிற்சியும் பெற்று விளங்கியவர் என்றும் தெரிகின்றது.

பெரிய புராணத்தில், அரிவாட்டாய நாயனூர் வரலாற்றில் வரும் "ஊட்டியும் அரியா நின்றுர் உறுபிறப்பு அரிவார் ஒத்தார்" என்னும் வரியினை நினைவு கூர்ந்து, அதனைத் தழுவிய நிலையிலேயே,

> "ஊட்டி யறுத்தவர்க்கே
> ஊட்டி யறுத்தவரை
> நாட்டி உரை செய்வதென்னே? நாம்"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுட் பகுதி அமைந்திருத்தல், இங்கு எண்ணியுணரத் தக்கது.

பெரிய புராணத்தில் வரும் அடியார்களின் செயல்களை மெல்வினை வல்வினை என இருவகைப் படுத்தி எல்லாராலும் எளிதாகச் செய்யத்தக்க வழிபாட்டுச் செயல்கள் மெல்வினை (17) என்றும், சிறுத்தொண்டர் (18) சண்டேசுரர் (19) அரிவாட்டாயர் (20) முதலிய நாயன்மார்களின் செயல்களைப்போல எல்லாராலும் எளிதாகச் செய்தற் கியலாதன வல்வினை என்றும், இவ்விரண்டனுள் எதன்கண் நின் உள்ளம் இயல்பாகச் செல்லுகின்றதோ அதனையே கடைப்பிடித்து இறைவனை வழிபட்டு உய்க என்றும், திருக்களிற்றுப்படியார் செய்திருக்கும் விளக்கம் பெரிதும் போற்றுதற் குரியது.

### அகளமும் சகளமும் :

திருவுந்தியாரின் சொல்லையும் பொருளையும் முழுவதும் தழுவியே திருக்களிற்றுப் படியார் இயன்றுள்ளது என்பது யாவரும் அறிந்தது. அதற்கு ஒரு சான்று மட்டுமாதல் தாவிபுலாக நியாயம் (specimen) பற்றி ஈண்டுக் காண்டல் இன்றியமையாதது.

> அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
> சகளமாய் வந்ததென் றுந்தீபற
> நானுகந் தந்ததென் றுந்தீபற

என்னும் திருவுந்தியார் செய்யுள் இறைவனே ஆசிரியனாக வந்து உயிர்களுக்குத் தானாகும் தன்மை அருளுதலை யுணர்த்துகின்றது.

> "அகளமய மாய்நின்ற
> அம்பலத்தெம் கூத்தன்
> சகளமயம் போல்உலகில்
> தங்கி-நிகளமாம்
> ஆணவ மூல மலம் அகல
> ஆண்டனன்காண்
> மாணவக என்
> னுடலுய் வந்து"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுள், மேலைத் திருவுந்தியார் செய்யுளை முழுவதும் தழுவி அமைந்திருத்தல் காணலாம்.

திருவுந்தியார் அகளம் என்றதை 'அகளமயமாய் நின்ற அம்பலம்' எனவும், சகளம் என்றதைக் 'கூத்தன்' எனவும், யாரும் அறிவரிது அப்பொருள் என்றதைப் 'பாகத்து அருள்

வடிவும் தானும் ஆகிய அந்தப் பெருவடிவை' எனவும், தானாக என்றதைப் 'பேருலகில் தங்கி என்னுடனாய்வந்து' எனவும், தந்தது என்றதை 'திகளமாம் ஆணவமூலமலம் அகல ஆண்டனன் காண்' எனவும் திருக்களிற் றுப்படியார் விரித்துரைத் திருக்கும் பொருத்தமும் சிறப்பும், அறிந்து மகிழ்தற் குரியன.

### அம்மையப்பர் :

திருக்களிற்றுப்படியார் ஆசிரியருக்குச் சிவ பிரானின் திருவுருவங்களுள், அம்மையப்பர் (அர்த்த நாரீசுவரர்) திருவுருவத்தில் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் இருந்தன எனத் தெரிகின் றது. "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப் பர் என்றறிக" எனத் தம் நூலின் முதற் செய் யுளிலேயே, அவர் அம்மையப்பரை முதற்கண் குறிப்பிட்டுத் துதித்துத் தம் நூலைத் தொடங்கு கின்றார். மேலும் "பாகத்து அருள் வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப் பெரு வடிவை யார் அறிவார் பேசு" (5) எனவும், "ஆர்த்த துயர் அகல அம்பிகையோடு எவ் விடத்தும் காத்தல் அவன் கடனே காண்" (43) எனவும், "தீதுறுவா னுனல் சிவபதிதான் கைவிடுமோ மாதொரு கூறு அல்லனோ மற்று" (42) "யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும் மாதேயும் பாகன் இலச்சினையே" (82) எனவும், "எண்ணுறும் ஐம்பூத முதல் எட்டுருவாய் நின்றுனும் பெண்ணுற நின் றுடும் பிரான்" (83) எனவும், பல இடங்களில் இந் நூலாசிரியர் அம்மையப்பரின் திருவுரு வினைச் சிறப்பித்தோதுகின்றார்.

**மெல்வினையே என்ன**
**வியனுலகில் ஆற்றரிய**
**வல்வினையே என்ன வரும்**
**இரண்டும்-சொல்லில்**
**சிவதன்மம் ஆம், இவற்றிற்**
**சென்றதிலே செல்வாய்**
**பவகன்மம் நீங்கும் படி (16)**

### அகமார்க்கமும் சகமார்க்கமும் :

இங்ஙனமே இந்நூல் அகமார்க்கம் (அருள் வழி) சகமார்க்கம் (மருள் வழி) என இரு நெறி களைக் குறிப்பிட்டு, திருக்குறிப்புத் தொண்டர் அரிவாட்டாயர் ஏயர்கோன்கலிக்காமர் மூர்த்தி யார் மூர்க்கர் ஏனாதிநாதர் என்னும் நாயன் மார்கள், முறையே கருங்கற்பாறை நில வெடிப்பு வாட்படை சந்தனக்கல் சூதாடுகருவி கேடயம் என்பன கொண்டு தத்தம் உலகியற் செயல்களைச் செய்து போந்தன ரெனினும், அவற்றால் நேர்தற் குரிய வாதனைகளை அடைந்து வருந்தாமல் நீக்கிக்கொண்டமைக் குக் காரணம், அவர்கள் அனைவரும் அகமார்க் கம் (அருள்வழி) கடைப்பிடித்து ஒழுகியமையே யாகும் என்று விளக்கி யருள்கின்றது.

**கல்லில் கமரில்**
**கதிர்வாளில் சாணையினில்**
**வல்லுப் பலகையினில்**
**வாதனையைச்-சொல்லும்**
**அகமார்க்கத்தால் அவர்கள்**
**மாற்றினர்காண் ஐயா**
**சகமார்க்கத்தால்**
**அன்றோ தான்.**

இங்ஙனம் பெரிய புராணத்தில் வரும் நாயன்மார் வரலாறுகள் பல, இத் திருக்களிற் றுப்படியார் செய்யுளின்கண் குறிப்பிடப் பெற் றிருத்தல், அறிந்து மகிழ்தற் குரியது.

### நால்வர் பெருமக்கள் :

இந்நூலின் கண் திருஞானசம்பந்தர் (70), திருநாவுக்கரசர் (71) சுந்தரமூர்த்திசுவாமிகள் (72), மாணிக்கவாசகர் (73) என்னும் நால்வர் பெருமக்கள் செய்தருளிய அருளிச் செயல் களும், தனித்தனியே சிறந்தெடுத்து ஓதிச் சிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் இந் நூலாசிரியர்க்குத் திருமுறைகளின் பாலும், அவற்றை அருளிச்செய்த நால்வர் பெருமக் களின் மாட்டும், இருந்த எல்லையற்ற அன்பும் பக்தியும் நன்குணரப் படுகின்றன.

திருக்களிற்றுப் படியார் ஆசிரியர் ஆகிய ஆளுடைய தேவ நாயனர், சைவ சமயத்தின் பால் மிக்க பற்று வாய்ந்தவராக விளங்கினர். சைவ சமயத்தின் பெருமையை விளக்கமாகக் குறிப்பிடும் முறையில், இரண்டு நிகழ்ச்சிகளை அவர் எடுத்துக் காட்டுகின்றார். மாணிக்க வாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்துத் திருச்சாழல் பாடிய அருள்நிகழ்ச்சி ஒன்று, திரு ஞானசம்பந்தர் திருமயிலையில் அங்கம் பூம் பாவையாக்கிய அருள் நிகழ்ச்சி, மற்றொன்று.

இத்தகைய சிறந்த அருள் நிகழ்ச்சிகள் சைவ சமயத்தைத் தவிர, வேறு எங்கும் காணப்பட படவில்லை என்கின்றார்.

இன்றிச் சமயத்தின்
அல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து
நின்றவர்ஆர்?—இன்றிங்கே
அங்கம் உயிர்பெறவே
பாடும் அடியவர்ஆர்!
எங்கும்இலை கண்டாய் இது!

## திருக்குறளும் திருவாசகமும் :

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருக்குறளிலும் திருவாசகத்திலும் சிறந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்கின்றார். "சார் புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா-சார் தரும் நோய்" (34), "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும்" (40) என்னும் இரண்டு திருக்குறள் களை, அவர்தம் நூலின்கண் முழுதாக எடுத்தாண்டிருத்தல் காணலாம்.

இவ்வாறே "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என் ஒளுப்பில் என்னையும் ஆட் கொண்டருளி..." என்னும் திருவாசகத் திருப்பாடலையும் (52), "சிவனென யானும் தேறினன் காண்க" என்னும் திருவாசக வரியையும் (91), இந்நூலில் அவர் சிறப்புற எடுத்து ஆளுகின்றார்.

இதனால், நம்மனோர் திருக்குறள் திருவாசகம் போன்ற சிறந்த நூல்களின் அருமை பெருமைகளை யறிந்து கொள்ள முடிவதுடன், நம் முன்னோர்கள் பெரிதும் போற்றிப் பயின்று பயன் பெற்ற இந்நூல்களை நாமும் போற்றிப் பயின்று பயன்பெற வேண்டுவது, எத்துணை இன்றியமையாதது என்பதும் புலனாகின்றது.

## திருஞானசம்பந்தர் பாடல் :

இம்மட்டோ! "ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குணம் மூன்றாய்-மாறா மறை நான்காய்- வருபூதம் அவை ஐந்தாய் ஆறார் சுவை ஏழோசையோடு எட்டுத் திசை தானாய்-வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே" எனவரும் திருஞானசம்பந்தரின் சிறந்த இனிய பாடலைத் தழுவி,



ஈறுகி அங்கே
முதலொன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண்வகையாய்
மற்றிவற்றின்-வேறாய்
உடனாய் இருக்கும்
உருவுடைமை என்றும்
கடனாய் இருக்கின்றான் காண்.

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அமைந்திருக்கும் திறமும், நாம் அறிந்து மிகவும் மகிழற்பாலது.

## சிவஞான சுவாமிகள் :

திருக்களிற்றுப்படியார் என்னும் இச்சைவ சித்தாந்த சாத்திர நூலின் சிறப்பினை, வேறு பல வகைகளிலும் நாம் எண்ணி யுணர்தல் கூடும். சைவ சித்தாந்தப் பெருஞ்சான்றோர் களுள் தலை சிறந்த ஒருவர் ஆகிய ஆசிரியர் சிவஞான சுவாமிகள், தாம் இயற்றியருளிய சிவஞான போதப் பேருரையிற் பல இடங்களில், இந்நூலினின்று மேற் கோள்கள் எடுத்துக்காட்டியருள்கின்றார். ஒரு நூலாசிரியர்க்கு நாம் செய்யக்கூடிய மிகச்சிறந்த பெரியதொரு பாராட்டு, அவர்தம் நூலினின்று மேற்கோள் கள் எடுத்துக்காட்டுதலே யாகும். ("Quotation is the highest Compliment you can pay to an author"—Samuel Johnson.) இம்முறையில் நோக்கினால், சிவஞான சுவாமிகள் திருக்களிற்றுப்படியாரையும், அதன் ஆசிரியர் ஆகிய ஆளுடைய தேவ நாயனாரையும், எங்ஙனம் பாராட்டிச் சிறப்பித்துள்ளார் என்பது இனிது புலனாகும்.

## சற்குருவின் தன் வசனம் :

(1) தொன்று தொட்டுவரும் கேள்வியான் அனுபவம் உடைய தேசிகன் (ஞானாசிரியன்) திருவருள் பெற்றவர்க்கே உண்மை ஞானம் உண்டாகும். அத்தகைய ஞான தேசிகன் அருள் பெறுதார்க்குத் தெளிவற்ற மயக்க உணர்வே மேலிட்டு நிற்கும். அவர்களால் சிறந்த நூல்களின் செழும்பொருள்களை உள்ளவாறு அழுந்தி யுணர்ந்து நலம் பெறுதல் இயலாது. இக்கருத்தை விளக்க முற்படும் சிவஞான சுவாமிகள், தமது சிவஞானபோதப் பேருரையின் சிறப்புப் பாயிரத்தில், இதனை வலியுறுத்தும் சான்றாக,

சாத்திரத்தை ஓதினர்க்குச்
சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்கும்நலம்
வந்துறுமோ ?—ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத்
தாகம் தணிந்திடுமோ ?
தெண்ணீர்மை யாய்!
இதனைச் செப்பு!

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளை (6), எடுத்துக் காட்டி யருள்கின்றார். ஞானசிரிய னின் ஒரு சொல்லால் மட்டுமே நமக்குக் கிடைக்கக் கூடிய நன்மை, நாம் ஆயிரம் சாத்திரங்களைக் கற்றாலும் கிடைத்தல் அரிது. கடலின் தண்ணீரைக் குடிக்கக் குடிக்க நீர் வேட்கை மிகுமே யன்றித் தணியாமை போல, வறிதே நூல்களைப் பயிலப் பயிலச் சந்தேகங் கள்தான் மிகுதியாகிக் கொண்டிருக்கும். ஆத லின் ஒரு நல்ல ஞானசிரியனின் அருளுப தேசம் நமக்கு இன்றியமையாதது என்பது, இப்பாடலின் பொருள்.

## செவ்வகையே நின்ற சிவன் :

(2) இறைவன் உயிர்களோடு கலந்து உட னாய் நின்று, அவ்வுயிர்கள் விடயங்களை நுக ரும் வண்ணம் செய்தருள்கின்றான். எனினும், அங்ஙனம் செய்தலால் யாதொரு விகாரத்தை யும் இறைவன் அடைவதில்லை. “என்றான் சிவன் அசத்தை இன்று” எனச் சிவஞான போதமும், “மாயை மருவிடான் சிவன், அவன் கண் உறைதராது அசேதனத்தால்” எனச் சிவஞானசித்தியாரும் குறிப்பிடும் இக்கருத்தை விளக்கத் தலைப்படுங்கால்,

உன்னுதரந் தேகிடந்த
கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்றுநீ
உற்றனையோ?—மன்னுயிர்கள்
அவ்வகையே காண்! இங்கு
அழிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்ற
சிவன் பால்!

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளை (87), மேற்கோள் காட்டுகின்றார். நம்முடைய வயிற்றினுட் கிடக்கும் சில வகைக் கிருமிகளின் இன்ப துன்பங்களும் தோற்றக் கேடுகளும் நமக்கு எய்தாமை போல, இறைவன் உயிர்க ளோடு உடனாய்க் கலந்து நிற்பினும், அவற் றின் இன்ப துன்பங்களும் தோற்றக் கேடுகளு மாகிய விகாரங்கள், இறைவனைச் சார்தல் இல்லை என்பது, இப்பாடலின் கருத்து.

## மங்கையர்க் கரசியார் :

(3) அருவமாய்க் கட்புலனாகாத நிலையி லுள்ள இறைவனே, உருவமாய்க் கட்புலனாகும் நிலையிற் குருவாக எழுந்தருளிப் போந்து, சகலர்களாகிய நம்மனோரை ஆட்கொண்டரு ளுகின்றான். அங்ஙனம் இறைவனே குருவா கப் போந்து கட்புலனாகித் தோன்றி ஆட் கொண்டருளானாயின், உயிர்கள் அவனை ஒரு போதும் அறிந்து கொண்டு உய்தல் இயலாது. தாய்க்குக் குழந்தையினிடம் உள்ள அருவமா கிய அன்பு, முலைப்பாலும் கண்ணீருமாய்த் தோன்றி வெளிப்படுவது போல, நீருள் நிழல் போல உயிர்கண் விரவி நிற்கும் இறை வனே குருவாக எழுந்தருளி, உருவ நிலையில் வெளிப்பட்டு, உயிர்களை ஆட்கொண் டுய்வித் தருளுகின்றான்.

இல்லா முலைப்பாலும்
கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால்!
நீர் நிழல்போல்-இல்லா
அருவாகி நின்றானை
யார் அறிவார்? தானே
உருவாகித் தோன்றானேல்
உற்று!

எனவரும் சிவஞானபோதச் செய்யுளில், இக் கருத்தை விளக்கும் இடத்தில், முலைப்பாலும் கண்ணீரும் அன்பை விளக்கும் என்பதற்கு மங்கையர்க் கரசியாரின் மாண்பை விளக்குவ தாக அமைந்துள்ள,

சுரந்த திருமுலைக்கே
துய்ய சிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளைஎனச்
சொல்லச்-சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி
மாதேவி தாழ்ந்த
மனமுடையாள்
அன்பிருந்த வாறு!

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளை (54), சிவஞான சுவாமிகள் மேற்கோளாகச் சிறப்புற எடுத்துக்காட்டி யிருக்கின்றார்.

## இனிய செய்யுட்கள்:

திருக்களிற்றுப்படியார் பல இனிய எளிய சிறந்த செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. அவற்றுள் தலை சிறந்த ஒன்றிரண்டையாவது தெரிந்து கொள்ளுதல் மிகவும் பயன்தரும். பின் வரும் சிறந்த செய்யுட்கள் இரண்டும், இறைவனை வழிபட்டு அவன் அருள் பெறும் நெறிகளையும், முறை யினையும் அழகுற அறிவிக்கின்றன.

நல்ல சிவ தன்மத்தால்
நல்ல சிவ யோகத்தால்
நல்ல சிவ ஞானத்தால்
நான் அழிய—வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின்
அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன். (15)

தம்மிற் சிவலிங்கம்
கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர்
தாம் ஆட்டித்-தம்மை ஒரு
பூவாக்கிப் பூவழியாமற்
கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே உடல். (44)

முடிவுரை:

இந்நாளில் மேலை நாட்டு மக்களும், நம்முடைய நாட்டுத் தத்துவ நூல்களிலும் கொள்கைகளிலும் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு, அவற்றை ஆராய்ந்து கற்கவும், கற்று வியக்கவும் தலைப்பட்டு இருக்கின்றார்கள்*. இந்நிலையில், நாம் அவற்றை எங்ஙனம் போற்றிக் கற்றுப் பயனடைய முற்படக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பது, சொல்லாமலே விளங்கும். எனவே, திருக்களிற்றுப்படியார்போன்ற சிறந்த நூல்களை நாம் நன்கினிது கற்றுப்பயன் அடைய முயலுவோமாக!

[தருமை யாதீனத்தில் நடை பெற்ற 'திருநெறிய தெய்வத் தமிழ்' மாநாட்டில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம், 24-5-64 ஞாயிறன்று, நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவி எழுதியது.

—ஆசிரியர்.]

* "When we read with attention the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a Contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are Constrained to bend the knee before that of the East, and to see in this Cradle of the human race the native land of the highest philosophy."

—VICTOR COUSIN.

(வெண்பா)

அந்தமிலா நுண்மை அறிவுவளம் சான்றொளிரும்
செந்தமிழ்ச் சீர்ச்சைவ சித்தாந்தம், —நந்தமிழ்
நாட்டிற்கே நல்ல பெருஞ்செல்வம்! நாம் அதனை
மாட்சியிற்கற் றுய்வோம் மகிழ்ந்து!

—ஆசிரியர்.

# வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம்

## முன்னுரை :

சென்னை நகருக்கு மேற்கே ஆறு கல் தொலைவில், பூவிருந்த வல்லிக்கு அருகில், பெங்களூர்க்குச் செல்லும் நெடுஞ்சாலையில், கோயம்பேடு என்னும் ஒரு கிராமம் உள்ளது. அது தற்காலத்தில் ஒரு சிற்றூராகக் காட்சி யளிப்பினும் முற்காலத்தில் புகழ் பெற்ற சிறந்த இடமாக விளங்கி யிருந்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

## சுயம்பு லிங்கம் :

அழகிய காட்சியும், அமைதியான சூழ் நிலையும் வாய்ந்து விளங்கும் இச்சிற்றூர், ஒரு சிறந்த தலமும் ஆகும். இங்கே ஒரு சிவ பிரான் கோயிலும், ஒரு பெருமாள் கோயிலும் எழிலுற அமைந்து விளங்குகின்றன. இவ் வூர்ப் பகுதியின் இயற்கை எழில்நலம் கண்டு வியந்து மகிழ்ந்த சிவபெருமான், இந்த இடத்தை மிகவும் விரும்பி, இங்கே ஒரு சுயம்பு லிங்கமாகத் தோன்றித் திருக்கோயில் கொண் டருளினர் என்பது தலவரலாறு.

இச் சுயம்பு லிங்கம், பிற கோயில்களிற் போலக் கிழக்கு அல்லது மேற்குத் திசை நோக்கி இராமல், வடக்குத் திசை நோக்கி விளங்குகின்றது. இஃது இங்கு ஒரு தனிச் சிறப்பான நிலை எனலாம். இலிங்கம், ஆவு டையாருக்கு மேலே மூன்று அல்லது நான்கு அங்குல உயரம் மட்டுமே உடையதாக இருக் கின்றது. அதனல், குறுங்காலீசுவரர் எனவும் சுவாமிக்கு இங்கு ஒரு பெயர் உண்டு. அம்பி கையின் பெயர் தர்ம சம்வர்த்தினி (அறம் வளர்க்கும் செல்வி) என்பது.

## வான்மீகி முனிவர் :

மோன ஞான முனிவர்கள், பற்பலர் வாழ்ந்த அற்புதம் மிக்கது, நம்முடைய நாடு. அம் முனிவர் பெருமக்களுள், வான்மீகி முனிவர் தலைசிறந்த ஒருவர். அவரைப்பற்றிக் கேட்டறி யாதவர், நம் நாட்டில் ஒருவரும் இரார். வட மொழியில் "ஆதிகாவியம்" என அறிஞர்கள் புகழ்ந்து போற்றும் இராமாயணம் என்னும் அருமபெறல் நூலைப் பாடி யருளிய பெருங்கவி ஞர் பிரான், வான்மீகி முனிவர் என்பது அனை வரும் அறிந்த தொன்று. தமிழில் இராமாயணம் பாடிய கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பர் பெரு மான்,

வாங்கரும் பாதம் நான்கும்
வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை
அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேச லுற்ருன்
என்னயான் மொழிய லுற்றேன்

என்று, மிகவும் புகழ்ந்து போற்றிப் பாராட்டும் மாட்சிமை மிக்கவர், வான்மீகி முனிவர்.

## தல வரலாறு :

இத்தகைய பெருஞ்சிறப்பு மிக்க வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம், அவரது ஆச்சிரமம் அமைந்திருந்த இடம், கோயம்பேடு என்னும் இச் சிற்றூரே யாகும் என்று தலவரலாறும், செவிவழிச் செய்தியும் கூறுகின்றன.

மன்னவன் இராமன் மானபங் கத்தை
மனத்திடை வைத்திலன் வானேர்க்கு
இன்னல்செய் தொழுகும் இராவணன்கொடு
போந்திடைவிடா தீரறு திங்கள்
தன்னெடு நகரி தனிற்சிறை வைத்த
தையலைத் தாரமாய்க் கொண்டு
பின்னையும் வாழுதல் பேரிழுக் கென்று
பேசுவார் பெருநிலத் துள்ளோர்

என்று நினைத்த ஸ்ரீ இராமபிரான் இட்ட கட் டளையின்படி, இலக்குவன் சீதைப் பிராட்டி யைத் தேரேற்றிக் கொணர்ந்து விடுத்துச் சென்ற கானகப் பகுதி, இவ்விடமே யாகும் என்பர் பெரியோர். கருவுற்ற நிலையில் இருந்த சீதைப் பிராட்டி கானகத்தே தனித்திருந்து கருத்தழிந்து வருந்திப் புலம்பிக்கொண்டிருந்த தைக்கண்டு, அவ்வம்மைக்கு ஆறுதல் மொழி கள் பல கூறி,

அனகனும் இராமன் தேவி
என்றும், நீ அமலை என்றும்,
சனகன்மா மகள்நீ என்றும்,
சமாதியில் உணர்ந்தேன்; தக்க
உனை அவன் காட்டில் விட்டான்
அல்லன்; என் இடமே விட்டான்
எனநினை; யாங்கள் வைகும்
இடத்திலெம் மோடும் போதி!

என்று, வான்மீகி முனிவர் தம்முடன் அழைத்துச் சென்று பாதுகாத்ததும், பிராட்டியார் பெற்றெடுத்த குசன்-லவன் என்னும் எழிற் புதல்வர்கள் இருவரையும் வளமுற வளர்த்து, அவர்களுக்கு வான்மீகி முனிவர் அருங்கலைகள் பலவற்றையும் நிரம்ப கற்றுக்கொடுத்து அருள் புரிந்ததும், இவ்விடமே யாகும் என்று தலவரலாறு சாற்றுகின்றது.

மேலும், ஸ்ரீராமபிரான் அசுவமேத யாகம் செய்து, திக்கு விசயம் செய்யுமாறு விடுத்த குதிரையைக் குசலவர்கள் தடுத்து நிறுத்தியதும், அதன் விளைவாகத் தம்முள் ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள இயலாத நிலையில், ஸ்ரீ இராமபிரானும் குசலவர்களும் எதிர்த்து நின்று போர் புரிந்ததும், பின்னர் வான்மீகி முனிவரால் உண்மை யுணர்ந்து, இராமனும் சீதையும் குசலவர்களும் ஒன்று கூடி இன்ப முற்றதும், ஆகிய செயல்களெல்லாம் நிகழ்ந்த இடம் இதுவே என்று, தலவரலாறு எழிலுற விளக்குகின்றது.

## குசலவபுரி ஈசுவரர்:

தம்முடைய தந்தையாகிய இராமனைத் தாமே எதிர்க்க நேர்ந்த குற்றம் தீரும் பொருட்டுக் குசலவர்கள், இங்கே எழுந்தருளியுள்ள சிவ பெருமானை வழிபட்டனர். அதனால் இவ்வூருக்குக் குசலவ புரி என்றும், இறைவனுக்குக் குசலவ புரி ஈசுவரர் என்றும் பெயர் வழங்குவதாயிற்று. குசலவர்கள், இராமன் விடுத்த அசுவமேதயாகக் குதிரையினைத் தடுத்து நிறுத்திய வரலாற்றைக் குறிக்கும் சிற்பம் ஒன்றும், இக் கோயிலில் அமைக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்தற் குரியது.

## வைகுண்டவாசப் பெருமாள்:

குசலவ புரீசுவரர் கோயிலை அடுத்து, மிக அருகில் அமைந்துள்ளது பெருமாள்கோயில். அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளுக்கு ஸ்ரீவைகுண்டவாசப் பெருமாள் என்பது பெயர். இவர் வான்மீகி முனிவரால் வழிபடப் பெற்ற மாட்சிமை யுடையவர். வால்மீகி முனிவர் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்ததற்கு அடையாளமாக, இக்கோயிலில் ஸ்ரீவைகுண்டவாசப் பெருமாள் மூலஸ்தான மூர்த்தியாக விளங்குவதுடன், இராம இலக்குவர் சீதை லவகுசர் வான்மீகி ஆகியவர்களின் உற்சவ விக்கிரகங்களும் சிறப்புற அமைந்து திகழ்கின்றன. ஸ்ரீமஹா கனகவல்லித்தாயார் என்பது இங்குள்ள பிராட்டியினுடைய பெயர்.

## வான்மீகரும் தமிழ்நாடும்:

வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம், கோயம் பேடு என்று தலவரலாறு கூறுவது, ஒரு சிலருக்கு வியப்பை விளைவிக்கலாம். எனினும், அங்ஙனம் நிகழ்ந்திருத்தலும் கூடும் என நாம் அனுமானித்தற்குப் போதிய பொருத்தம் உளது என்பதில் ஐயமில்லை.

(1) வான்மீகி முனிவர், தமது காவிய நூலில் ஆங்காங்கே தமிழ் நாட்டைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கிஷ்கிந்தையில் இருந்து சுக்கிரீவன், சீதைப் பிராட்டியைத் தேடி வரும் பொருட்டு வானர வீரர்களை நாற்றிசைகளிலும் செல்லுமாறு ஏவுங்கால், தென்றிசைக்கண் செல்லுதற் குரியாரை நோக்கிக் கூறுவனவாக வரும் இராமாயணப் பகுதியில், வான்மீக முனிவர் 'சோழதேசம்-கேரளத்தோடு கூடிய பாண்டிய தேசம்' (தமிழ் நாடு) பற்றிக் குறிப் பிட்டிருக்கின்றார்.

(2) பாண்டிய நாட்டுத் தலைநகராக விளங்கியிருந்த கபாடபுரம், "முத்து மயமான மணிகளால் அலங்காரமானதும், பாண்டியர்க்குத் தகுதியும் உரிமையும் உடையதுமான கபாடபுரம்" என வான்மீகரால் புகழ்ந்து போற்றப் பட்டுள்ளது.

(3) சோழ நாட்டுச் சிவ தலங்களுள் ஒன்றாகிய திருவெண்காடு (சுவேதாரணியம்) பற்றியும், அங்குச் சிவபிரான் 'கோள்வித்தனைய கூற்றம் தன்னை மார்க்கண்டேயர் பொருட்டு மாள்வித்த வரலாறு பற்றியும், வான்மீகி முனிவர் தம்முடைய நூலில் வாய்ப்புறப்பாடியருளி யிருக்கின்றார். "சுவேதாரண்யத்தில் உருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்தது போல, கரன் என்னும் அரக்கன்,

ஸ்ரீராம பிரானுடைய சரத்தின் அக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான் '' என்பது வான்மீகி இராமாயணம்.

(4) வான்மீகி முனிவர் தமிழ் நாட்டில் ஒரு சில காலம் வாழ்ந்தவர். தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்திருந்தவர். இவ் வுண்மை, அயோத்தியா காண்டத்தில் ஓரிடத்தில், பரதன் வாய்மொழியாக வைத்து, " நம் யுத்த வீரர்கள் மேகங்களைப் போன்று கறுத்த கேடயங்களுடன் தென்னாட்டவரைப் போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்" எனப் பாடியிருத்தலாற் புலனாகின்றது.

(5) இங்ஙனமே ஆரணிய காண்டத்தில், மாரீசன் இராமனது பெருமையை இராவணனுக்கு எடுத்துரைக்கும்போது, "இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால், ரகாரத்தில் தொடங்கும் ரத்னம் ரதம் என்ற பெயர்கள் கூட எனக்குப் பெரும் பயத்தை யுண்டாக்குகின்றன" என்றதாக வான்மீகி கூறுகின்றார். இவ்விடத்தில் ரகாரத்துக்கு வடமொழியில் சிறப்பாக விதிக்கப்பட்ட 'இபம்' என்னும் சாரியையை விட்டு "ரேபாதீநி" எனக் கூறாமல், தமிழர்கள் "ரகாரம்" எனக் கூறுமாறு போல, "ரகாராதீநி" என வான்மீகி முனிவர் கூறி யிருத்தல், வான்மீகி முனிவர் செந்தமிழ் நாட்டு வழக்கையுணர்ந்த சிறப்பினர் என்று புலப்படுத்தும்.

(6) சங்க இலக்கியங்களுள் தலை சிறந்த புறநானூறு என்னும் பழந்தமிழ்ப் பெருநூலில். "தவமானது பெருஞ்சிறப்பை யுடையது; வையத்தையும் தவத்தையும் தூக்கி நிறுத்தி ஆராய்ந்து அளந்தால், வையம் (உலகம்) தவத்துக்கு ஐயவி (வெண்சிறு கடுகு) அளவும் ஈடாகாது'' எனத் தவ வொழுக்கத்தின் சிறப்பை விளக்கும் முறையில்,

> பரிதி சூழ்ந்தஇப் பயங்கெழு மாநிலம்
> ஒருபகல் எழுவர் எய்தி யற்றே;
> வையமும் தவமும் தூக்கின், தவத்துக்கு
> ஐயவி அனைத்தும் ஆற்றாது; ஆகலின்
> கைவிட் டனரே காதலர்; அதனால்
> விட்டோரை விடாஅள் திருவே
> விடாஅ தோர்இவள் விடப்பட் டோரே!
>
> —புறநானூறு, 358.

என வரும் செய்யுள், வான்மீகி முனிவர் பாடியதாக வழங்கி வருகின்றது. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பொருளதிகாரம், புறத்திணை இயலில் வான்மீகி முனிவர் தலைச்சங்கத்துத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் என்று குறிப்பிடுகின்றார்.

இவைகளை யெல்லாம் ஒரு சிறிது எண்ணுங்கால், எல்லாக் காலத்திலும் நிலைபெற்று-எல்லா இடங்களிலும் சென்றுலவி வரும் சிறப்புடைய முனிவர்களுள் ஒருவராகிய வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம், தம் கோயம்பேடும் ஆகலாம் என்று, நாம் கொள்ளுதலில் இழுக்கொன்றுமில்லை.

## பெயர் விளக்கம் :

கோயம்பேடு என்னும் கிராமம், பிராசேதாசர் (வால்மீகி முனிவர்) ஆச்சிரமமாக விளங்கியதனால் பிராசேதாசபுரம் என்றும், இராமன் தன் புதல்வர்கள் ஆகிய குசலவர்களைக் கண்டு மகிழ்ந்து அவர்களுடன் சில காலம் தங்கியதனால் இராகவபுரம் என்றும், கோயட்டி என்னும் ஒரு குருட்டு நாரைப் பறவை வான்மீகர் போன்ற முனிவர்களின் தொடர்பால் மீன்களைப்பற்றி யுண்ணுமல் தவ வொழுக்கமும் விரதமும் கடைப்பிடித்து இறையருள் பெற்று உய்ந்ததனால் கோயட்டிபுரம் என்றும், குசலவர்கள் வழி பட்டதனால் குசலவபுரம் என்றும் பெயர் பெறும். கி. பி 15 ஆம் நூற்றாண்டில் விளங்கிய அருணகிரிநாதர் "கோசை நகர் வாழவரும் ஈச! அடியார் நேச! சருவேச! முருகா! அமரர் பெருமாளே!'' என இங்குள்ள முருகனைத் தம் திருப்புகழ்ப் பாடலில் துதித்து வழிபட்டுள்ளார்.

## முடிவுரை :

இங்குள்ள கோயில்கள், கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜன் என்னும் ஜெயங்கொண்ட சோழனாலும் (கி. பி. 985-1014), கி. பி 11 ஆம் நூற்றாண்டில், திரிபுவன சக்கரவர்த்தி என்னும் மூன்றாம் குலோத்துங்க சோழனாலும் (கி. பி. 1070-1120), நன்கினிது பரிபாலிக்கப்பெற்று வந்தது எனக் கல்வெட்டுகளாற் புலனாகின்றது. விஜயநகர் அரசர்களில் ஒருவரான புக்கராயர் (கி. பி. 15 ஆம் நூற்றாண்டு) என்பவர், இந்தத் தலத்தில் மிக்க ஈடுபாடும் அன்பும் கொண்டிருந்தார். சுமார் ஆயிரம் (1000) ஆண்டுகளுக்கும் முற்பட்ட இத்தலத்திற்கும், கோயில்களுக்கும் சென்று தரிசித்து, அன்பர்கள் அனைவரும் நலம் பெற்று மகிழ்ந்து உய்வார்களாக!

—ஆசிரியர்.

# சேக்கிழாரும் கல்வெட்டுக்களும்

டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., Ph.D.

## சேக்கிழார்-சுந்தரர்-நாயன்மார் காலம்

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியவர். திருத்தொண்டர் என்பவர் சுந்தரர். அச்சுந்தரர் காடவர்கோன் கழற்சிங்கன் காலத்தவர். கழற்சிங்கன் மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ வேந்தன். அவன் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு (கி. பி 840-865)1. சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் தம் காலத்துச் சிவனடியார் பன்னிருவரையும், தமக்கு முற்பட்டவர் ஐம்பதின்மரையும் சேர்த்துப் பாடியுள்ளார். அவர்கள் காலம் ஏறத்தாழக் கி. பி. 350-865 என்னலாம்.2 சுந்தரரையும் அவரால் பாடப்பட்ட நாயன்மாரையும் பற்றிப்பெருநூல் செய்த சேக்கிழார் காலம் இரண்டாம் குலோத்துங்கன் காலமாகும் (கி. பி. 1133-1150) 3

## காவியத்துக்குரிய மூலங்கள்

சேக்கிழார் தம் காப்பியத் தலைவரான சுந்தரர்க்கு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் பிற்பட்டவர்; காலத்தால் முற்பட்ட கண்ணப்பர்க்கு ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவர். எனவே, தமக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டு வாழ்ந்த நாயன்மார் அறுபத்துமூவர் வரலாறுகளை அவர் பெரியதோர் புராணமாகப் பாடினார் என்பது இங்கு அறியத்தகும். அவர் அங்ஙனம் பாடற்கமைந்த மூலங்கள் யாவை?

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் பாடிய முதல் எட்டுத் திருமுறைகள், ஒன்பதாந் திருமறையில் சில பதிகங்கள், திருமூலர் பாடிய திருமந்திரம், காரைக்கா லம்மையார் முதலியோர் பாக்கள், திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, சம்பந்தர் மீது பாடிய ஆறு சிறுநூல்கள், அப்பர் திரு ஏகாதச மாலை ஆகிய நூல்களைக்கொண்ட பதினொன்றாம் திருமுறை ஆகியவையே பெரிய புராணத்திற் கமைந்த மூலங்கள் என்னலாம்.

இந்த மூலங்களைக்கொண்டு மட்டும் சேக்கியார் நூல்பாடி யிருப்பின், நாயன்மார் வரலாறுகளைப் பல விவரங்களோடு கூறியிருத்தல் இயலாது. சுந்தரர் முதலிய நாயன்மார் வாழ்ந்த காலம் பல்லவர் காஞ்சியில் இருந்து தமிழகத்தின் பெரும்பகுதியை ஆண்ட காலமாகும் (கி.பி. 300-900). பல்லவர் சைவ வைணவ சமயங்களை வளர்த்தவர்; கற்களைக் குடைந்து கோவில்களாக அமைத்தவர்; கற்கோவில்களையும் அமைத்தவர். பல்லவர்க்குப் பின் வந்த சோழப் பேரரசர் வழிவழிச் சைவர்; ஆதலால் பாடல் பெற்ற கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர்; நாயன்மார் திருவுருவங்களை அமைவித்தனர்; அவர்கள் வாழ்ந்த ஊர்க் கோவில்களில் அவர்கட்குச் சிறப்புப் பூசைகளும் விழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தனர். சில கோவில்களில் திருமுறைகள் ஓதப்பட்டன. முதலாம் இராசராசன் நம்பியைக் கொண்டு திருமுறைகளை வகுக்கச் செய்தான். இத்தகைய செயல்களால் கோவிற் சுவர்களில் நாயன்மார் பற்றிப் பல கல்வெட்டுக்கள் எழுந்தன. சில கோவில்களின் கருவறைச் சுவர்களில் நாயன்மார் வாழ்க்கைக் குறிப்புக்கள் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோவிலில் சுந்தரர் வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்துக்கோவிலில் சண்டேச பதம் உணர்த்தும் சிற்பம் அமைக்கப்பட்டது.

சேக்கிழார் அநபாயன் எனப்பட்ட இரண்டாம் குலோத்துங்கனிடம் முதல் அமைச்சராயிருந்தவர்; அதனால் நாடு முழுமையும் அரசாங்க மரியாதையுடன் சுற்றிப்பார்க்கும் வசதி பெற்றவர்; நாயன்மார் சிலருடைய வழியினரான சிற்றரசரைக்கண்டு அவர் முன்னோர் வரலாறுகளைக் கேட்டறியும் வசதி பெற்றவர். இத்தகைய பலவழிகளிலும் முயன்று அறுபத்து மூவர் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்த பின்பே சேக்கிழார் பெரிய புராணம் பாடினார் என்பது ஆராய்ச்சியாற் போந்த உண்மையாகும்.4

---

1 டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரிய புராண ஆராய்ச்சி, பக்-43-61.

2 ஷை, பக். 79-97, 3 ஷை, பக். 18-28.

4. இவற்றைத் தெளிவாக அறிய விரும்புவோர் இக்கட்டுரையாசிரியர் எழுதியுள்ள பெரியபுராண ஆராய்ச்சியைக் காணலாம்.

சேக்கிழார் நாயன்மார்பற்றிய கல்வெட்டு களைப்படித்தே பல செய்திகளைத் தம் காவியத் துள் பாடியுள்ளார் என்பதற்குப் பல சான்றுகள் மட்டும் இங்குக் காட்டப்பெறும்.

## மநு நீதிச் சோழன்

(1) மநுநீதிச் சோழனைப்பற்றிச் சிலப்பதி காரம் (காதை20, வரி 53-55)

"வாயிற் கடைமணி
நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர்
நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை
ஆழியில் மடித்தோன்,"

என்று கூறியுள்ளது. வேறு நூல்களில் இவ் வேந்தனைப் பற்றிய விவரமான குறிப்புக்கள் இல்லை. அங்ஙனம் இருப்பச் சேக்கிழார் இவ னது வரலாற்றை ஏறத்தாழ 35 பாக்களிற் பாடியுள்ளார். அரசன் கன்றைக்கொன்ற தன் மகனைத் தேரூர்ந்து கொல்லும்படி அமைச்சனை ஏவியது—அவன் அ... செய்யாது தற்கொலை செய்து கொண்டது-இறைவன் இறந்த பசுக் கன்றையும் அமைச்சனையும் மன்னன் மகனை யும் எழுப்பினமை என்னும் செய்திகள் சேக் கிழார்க்கு எங்ஙனம் கிடைத்தன?

சேக்கிழார் காலத்து அநபாயன் தந்தை யான விக்கிரம சோழனது (கி. பி. 1120-1135) 5 ஆம்ஆட்சியாண்டில் (கி. பி. 1124-இல்) திரு வாரூர்ப் புற்றிடங்கொண்டார் கோவில் இரண் டாம் திருச்சுற்றின் வடபுறச் சுவரில் பெரிய கல் வெட்டு வெட்டப்பட்டது. அது மநு நீதிச் சோழன் வரலாற்றைச் சிவபெருமான் கூறிய தாக மேலே கூறப்பட்ட விவரங்களோடு கூறுகிறது. அதன் ஒரு பகுதியைக் கீழே காண்க:

"மநு தன் புத்ரன் ஏறிவருகிற தேரில் பசு வின் கன்றகப்பட்டு ப்ரமாதப்பட அதின் மாதா வான சுரபி கண்டு து:க்கித்து மநுவின் வாசலில் மணியை யெறிய அது கேட்டு மநு தன் மந் திரி இங்கணாட்டு பாலையூருடையான் உபய குலாமலனைப் பார்த்து நீ சென்று இதனை யறிந்து...வாயிற் புறத்து ஒரு பசுமணி எறியா நின்றது என்று சொல்ல, அது கேட்டு மநு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக்கிடந்த.. படி வினவி தன் புத்ரன் ஏறின தேரிலே பட்டமை அறிந்து, அக்கன்றுக்கு நேராகத்தன் புத்ரன் ப்ரியவ்ருத்தனைத் தேரிலே ஊர்ந்து குடுக்க வென்று உபயகுலாமலனுக்குச் சொல்ல, அவன் சந்தாபத்தோடும் புறப்பட்டுத்தன் செவிகளைத் தரையிலே குடைந்து கொண்டு து:க்கிதனாய், மநு தானே புறப்பட்டுத் தன் புத்ரனைத் தானே தேரிலே ஊர்ந்து குடுக்க, அப்போதே நாம் அவனை அநுக்ரகித்து கன்றுக்கும் மந்திரிக்கும் மநுபுத்திரனுக்கும் ஜீவன் குடுக்க, அது கண்டு மநு சந்தோஷித்துக் கன்றினை எடுத்துக் கொண்டு பசுவுக்குக் காட்டிக்குடு...அபிஷேகம் பண்ணி இவனுக்கு உபயகுலாமலன் மகன் சூரி யனை மந்திரி யாக்கி இவனுக்குத் தன் புத்ரன் மாளிகை...மங்கல...மூரும் குடுத்து மநுவும் உபயகுலாமலனும் தபசினைத் தலை நின்ற மையில்...."5

## கயிலாசநாதர் கோவில் கல்வெட்டு

(2) காஞ்சி-கயிலாச நாதர் கோவிலைக் கட் டிய இராஜசிம்மனைப்பற்றி, "காடவர் கோமான் கச்சிக் கற்றளி எடுத்து முற்ற மாடெலாம் சிவ னுக்காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய் தான்" —(பூசலார் புராணம், 9.) என்று சேக்கிழார் கூறியுள்ளார். சேக்கிழார் வாழ்ந்தகாலம் கி. பி. 1135-50.

முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி. 1170-1122) இக்கயிலாசநாதர் கோவில் மூடப்பட்டது. அதன் சொத்து விற்கப் பட்டது. அதன் திருவிருப்பும் திருமடை விளா கமும் பக்கத்தில் உள்ள அனேயபதங்காவுடை யார் கோவினுக்குக் கொடுக்கப்பட்டன. கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில்தான் காஞ் சியைக் கைப்பற்றிய கம்பணவுடையார் காலத் தில் கயிலாசநாதர் கோவில் திறக்கப்பட்டது-அதன் சொத்து மீட்கப்பட்டது என்று கயிலாச நாதர் கோவில் கம்பணவுடையார் காலத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.6

எனவே, அநபாயனுக்குப் பாட்டனான முதற் குலோத்துங்கன் காலத்தில் மூடப்பட்ட கயிலாசநாதர் கோவில் தன் செல்வத்தையும் பொலிவையும் ஏறத்தாழ 250 ஆண்டுகள் இழந் திருந்தது; மூடுபட்டுக்கிடந்தது; சேக்கிழார் காலத்திலும் அதே நிலையில்தான் இருந்தது.

[502-வது பக்கம் பார்க்க.

5 A. R. E. 164 of 1894; G. I. I. vol 5, 456.

6 S. I. I. I. 86.

# பறவைகள் செய்த பாக்கியம்

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை.

திவ்வியகவி — பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் - "சடகோபன் சொற் பெற்று உயர்ந்தன" என்று கூறும் வாயிலாக, அரங்கனுடைய திருத்தோள்களும் (திருவுள்ளமும்) ஆழ்வார் அமுதமொழியைக் கேட்டுத் தடித்துவிட்டன என்கிறார். ஆம்! உண்மையே. தமிழே அமுதம். அந்த அமுதமே ஆழ்வார் திருவாக்கிலிருந்து விரஜை நதியின் நீர்போல் பெருகி வரும்பொழுது, வைகுண்டத்திலும் கிடைக்காத திவ்ய அமுதமாக அரங்கனுக்கு ஆகிவிட்டது. வேதங்கள் ஒன்று சேர்ந்து கடல்வண்ணனைக் காணப்புறப் பட்டனவாம். காண முடியவில்லையாம். தளர்ந்து தயங்கித் திரும்பிவிட்டனவாம். "யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்யமனஸாஸஹ" என்று இதே கருத்துடன் மறைகள் கூறுகின்றன. அம் மறை அத்துடன் நிற்காமல், "தஸ்ய தீரா: பரிஜாநந்தியோனிம்" (அவன் தத்துவத்தை உள்ளபடி அறிய மயர்வற நதிநலம் அருளப் பெற்றவர்களால் தான் முடியும்) எனவும் வாய் மணக்கப் பேசுகிறது. வேதவாக்கியத்தில் "தீரா:" என்று கூறிய சொல் நம் நம்மாழ்வார் பக்கலிலே சாலவும் பொருந்தி நிற்பதில் ஐயமுண்டோ? "வந்தாய் போலே வாராதாய், வாராதாய் போல் வருவானே" என அகம் குழைந்து பேசினவர் ஆழ்வாரன்றோ? கரை புரண்டோடும் மடை வெள்ளம் போல் ஆழ்வாரின் அடங்காப் பக்திவெள்ளம், காதல் வெள்ளமாகக் கடலாழி வண்ணனை நோக்கித் தாவுகிறது.

கட்கிலியான எம்பெருமானுடன் "ஆராவமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாயே நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!" என்றாற் போல, கலந்து கரைந்து அனுபவிக்கிறது. கண்ணன் நெஞ்சம் நெகிழ்ந்து தம் வடிவழகை ஆழ்வார் திருமுன் காட்டுகிறார். கோபியர் கொஞ்சும் வஸந்தவண்ணனை, நேரில் கண்டதும், தம் திருக் கைகளால் தடவியும், திருக் கண்களால் ஒற்றியும், திருவுள்ளத்தால் பால் பாயஸம் போல் பருகுகிறார். தேன் உண்ட வண்டு போல் ரீங்காரம் செய்து பாடுகின்றார். ஆழ்வாரின் பகவத் விஷயக்காதலுக்கு, மனிதர் வகுத்த இலக்கணம் ஏது? அதுவே அதற்கு இலக்கணம். "கட்டுரைக்கில் தாமரை நின் கண், பாதம், கை ஒவ்வா; சுட்டுரைத்த நன் பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வா" என்று திருவாக்கு இட்ட ஆழ்வார், அவனைப் பற்றிக் கூறும் நிலைகளுக்கெல்லாம் மண்ணில் உள்ள பொருள் பொருந்தா என்றே திருவுள்ளம் கொண்டார் எனலாம். ஆழ்வார் அனுபவ ஸாக்ஷாத் காரமாம் ஞானக் கண்ணால் அவனை அனுபவிக்கிறார். அந்த அனுபவம் அவர் விடாயைத் தணிக்க முடியவில்லை. உடனே வெளி உறுப்புக்களாலும் அவன் அனுபவத்தில் பேராசை கொண்டார். துடிக்கிறார். ஆம்!

காதல் வளர்ச்சி, கடலையும் கலக்க வல்ல தன்றோ!

**"அநர்சனே தர்சன மாத்ரகாமா: த்ருஷ்ட்வா பரிஷ்வங்க ரஸைக லோலா: ஆலிங்கி தாயாம்புனராய தாக்ஷ்யாம் ஆசாஸ்மஹே விக்ரஹயோ: அபேதம்||** (காதலன் முதலில் நினைத்த பொருளைக் காண விரும்புவான். கண்ட பின்பு அதனை அணைய விரும்புவான்) என்ற வாறு காதல் செயலை ஒரு கவிஞன் கூறி ஞன். கண்ணன் புருஷோத்தமன். ஆழ்வாரும் ஆண்மகன். ஆணை ஆண் காதலிக்க முடியுமா? என்றெல்லாம் பகவ தனுபவருசி ஏற்படாதாற்குத் தோற்றும். கம்பன் இராமனைப் பார்த்து " கண்ணில் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவும் தோளிஞய்"என்றல்லவோ கவி புனைந்தார். அவ்வண்ணமே ஆழ்வாரும் "அப்போதைக்கு அப்போது என் ஆரா வமுதமே" என்று ஆர்ப்பரிக்கும்படியான அழகன் விஷயத்தில் பெண் உடை உடுத்திக்கொண்டார். பெண் பேச் சாகவே பேசி நின்ருர். ஆழ்வாரின் ஆற்ருமை மிஞ்சிவிடவே கண்ணில் கண்ட பொருளை எல்லாம் எம்பெரு மானிடம் தொடர்பு கொண்டதாகவே நினைக்கிருர். அது பறவையோ, அது பசும் கொடியோ? எது வாயினும் சரி, அஃறிணைப்பொருள் ஆயிற்றே என்ற எண்ணமின்றி அவைகளுடன் பேசவும், தூதுவிடவும் தலைப்படுகிருர் ஆழ்வார்.

ஆகா! பறவைகள் செய்த பாக்கியம் தான் என்னே! ஆழ்வாரல்லவா அவை களை உகந்தார். மனிதர்களுக்குத் தம் பேச்சைக் கொடுக்க விரும்பாத ஆழ்வார் பறவைகளுடன் பேசிய பெரும் பேறு தான் என்னே! தூது விடுதல் என்பது தமிழ்ப் பிரபந்தவகைகளில் ஒன்று. இவ் வாறு தூதுவிட்டுத் தூமணி வண்ணனை ஆட்கொண்டவர்களில் நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் சிறப்பாகப் போற் றப்படுகிறவர்கள். " ஊடல், உணர்த்தல், புணர்தல்" என்று தமிழ் நூல்கள் காமப் பயனுகக் கூறுகின்றன. தலைவன் முகம் காட்டாமல் இருக்கும் பொழுது கிலேயித் துக் கிடப்பதைத் தான் ஊடல் என் பார்கள். "தலைவனே! உன்னுடன் கூடவே கருவியென இயற்கைப்பொருளை விரும்பினேன். என்காதல் அடங்கும் முன்பு அடுத்துவா" என அவன் பால் தூது விடும் நிலையையே உணர்த்தல் என்பார்கள். தூது விடுவதும் இதன் உறுப்பாகும். பிறகு இருவரும் கூடிப் புணர்தலையே புணர்தல் என்றும் அழைக்கிருர்கள் தமிழர். ஆகவே காமப் பயன் இடை நிலையாகிய உணர்த்துதலில் ஆழ்வார் விழைகிருர். உண்மையில் நோக்கிஞல் "இறைக் காதல்" விஞ்சிய வர்கள் அவனுடன் கூடும் பொழுதும், கையில் அகப்பட்ட கனி தவறிவிடுமோ என்ற ஐயத்தால் துன்பம். பிரிந்த பொழுதும் துன்பம் தான். எம்பெரு மானுக்கு வாழ்க்கைப் பட்டவர்களுக்கு எந்நிலையிலும் துன்பம் தான். "நீ ஆள் அவளை யாள மாட்டாயே" என்னும் ஆழ்வார் திருப்பாசுரத்திற்கு இக் கருத் துடனேயே பெரியோர்கள் உரையிட் டார்கள்.

அகத்துறையில் வரும் பேச்சுக்கள் எல்லாம் தாமானபேச்சு (தலைவிப்பேச்சு), தாய்ப்பேச்சு, தோழிப்பேச்சு என மூன்று வகையில் இருக்கும். ஆழ்வார் தாமான பேச்சுப் பேசுவதில் முற்படுகிருர். தூது விட்டாவது மாயனை மயக்கித் தன்பால் அழைக்க விரும்புகிருள் ஸ்ரீ பராங்குச நாயகியான ஆழ்வார். வடமொழியிலும் "ஸந்தேசகாவ்யம்" என்ற பெயரால் பல விடு தூதுகள் உள்ளன. ஆங்கிலத்திலும் இம் முறை சில இடங்களில் கையாளப்

படுவதுண்டு. "மந்திரம் தூது செலவிகல் வென்றி" எனத் தண்டியலங்காரமும் காவிய உறுப்பால் விடுதூதைச் சேர்த்துளது. திருவாய்மொழியில் தூதுவிடும் இடங்கள் சில உள்ளன. முதன் முதலில் திருவாய் மொழி முதல்பத்து நான்காம் திருவாய் மொழியை எடுத்துக் கொள்ளலாம். இந்தத் திருவாய் மொழியில் ஆழ்வார் நாரை, குயில்கள், அன்னப் பறவைகள், மகன்றில்கள், குருகுகள், வண்டு, கிளி, நாகணவாய், வாடை, மனம், எனப் பத்துப் பொருள்களைத் தூது விட்ட நிகழ்ச்சிகள் காணக்கிடக் கிடக்கின்றன.

"ஆசார்ய ஹ்ருதய சூர்ணையில் 3ம் ப்ரகரணத் தொடக்கத்தில் "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி க்ஞான கர்மங்களைச் சிறகென்று குரு, ஸப்ர்ஹ்ம சாரி புத்ர, சிஷ்யஸ் தானே பேசும்" எனக் கூறப்பட்டிருக்கிறது. அதன் உரையில் "ஞானமும், கர்மமும் இரு சிறகுகளாக ஆக்கிப் பறவைகளை பகவத் விஷயத்தில் சேர்த்துவைக்கும் ஆச்சாரியர்களாகப் பேசுவார்கள்" எனவும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இங்குப் பறவைகளை ஆழ்வார் தூது விடுவதாவது என்னென்னில், ஆழ்வார் ஆசார்யர்களைச் சரண்புகுகிறார் என்றே உள்ளர்த்தமாகும்.

"அஞ்சிறைய மடநாராய்!
அளியத்தாய்! நீயும் நின்
அம்சிறைய சேவலுமாய்,
ஆ! ஆ! என்று எனக்கு அருளி
வெம்சிறை(ப்)புள் உயர்த்தார்க்கு
என்விடுதூதாய்(ச்) சென்றக்கால்
வன்சிறையில் அவன் வைக்கில்
வைப்புண்டால் என் செய்யும் ஓ!"

(1) அளியத்தாய் = அடியேனிடம் அளிமிகுந்த (2) அம் சிறைய மடநாராய்=அழகான சிறகுகளை உடைய மடப்பம் மிகுந்த நாரையே! (3) நீயும் நின் அம் சிறைய சேவலுமாய் = நீயும் உன்தலைவனுடன் (4) ஆ! ஆ! என்று எனக்கு அருளி = என்தன்மை கண்டு ஐயோ! ஐயோ! என இரக்கம் கொண்டு (5) வெம்சிறைப்புள் உயர்த்தார்க்கு = பகைவர்கள் கண்டு நடுங்கும் படியான பயங்கரமான சிறகுகளையுடைய கருடக் கொடியைக் கொண்ட திருமாலுக்கு (6) என் விடுதூதாய்ச் சென்றக்கால் = எனக்குத் தூதாகச் சென்றால் (7) வன் சிறையில் அவன் வைக்கில் = (ஒருக்கால் உனக்குமுகம் தாராமல் அவமதிப்பு) என்னும் சிறையில் உன்னையிட்டால் 8. வைப்பு உண்டால் = அப்பொழுது நீயும் பிறர்களுக்காக அந்தச் சிறையில் இசைந்திருந்தால் (9) என் செய்யும் = அவ்வாறு தியாக உணர்ச்சியுடன் சிறையில் இருப்பது குற்றமாகுமா? ஆகாது. அது நற்றமே,

(பொழிப்புரை) நாரணன் பேர் தாங்கிய நாரையே! எனக்காக நீ உன் தலைவனுடன் பறந்து சென்று, பரந்தாமனிடம் என்னிலையை அவன் உள்ளம் நைய எடுத்துரைப்பாய்.ஒருக்கால் அவன் என்னிடம் உள்ள வெறுப்பால் உன்னை அலக்ஷியம் செய்தால் அதையும் பொறுத்துக் கொள். பிறர் நலம் பேணுவது குற்றமாகாது.

இந்தத் திருப்பாசுரத்திற்கு "ஈடு" இட்ட ஈடு இல்லா உரையின் அழகு அழியா அழகாகும். ஈட்டில் உள்ள தொண்டர்க்கு அமுதமான உரை நயங்களை ஆன்றோர்களிடம் அடிபணிந்து, பல ஆண்டுகள் பணிவிடை செய்து, உள்ளார் முன் இல்லார் போல் இருந்து கேட்டறிய வேண்டும். நம் நாடு செய்த பாக்கியத்தால் திவ்விய ப்ரபந்த உரைகளில் நீந்தி

விளையாடும் அரும்பாக்கியம் செய்த பெரியோர்கள் இன்றும் இருக்கிறார்கள். அடியேன் இந்தக் கங்கை ப்ரவாஹத்தில் வாய் வைப்பது, தாகம் கொண்ட நாய் கங்கை நீரில் வாய் வைத்தது போலத் தான். இருப்பினும் நாய்வாய் பட்டதால் கங்கையை இகழ் வாருண்டோ? பெரியோர்கள் மன்னிக்க வேண்டும். திருவாய் மொழிக்குத் தனிச் சிறப்பாக அமைந்த உரைகள் அனைத்துமே ஆராத அமுதமாகும். பகவத் விஷயம் என்னும் பெயர் கொண்ட ஈடு முப்பத்தாறுயிரப் படியை அருளிச் செய்த மகான் "நம் பிள்ளை" என்பவர். இவருக்கு நஞ்சீயர் இத்திருநாமத்தை இவர் குணங்கட்கு இட்டார் என்பார்கள்.

அஞ்சிறைய மட நாராய்: நாராயணன் என்ற பகவானுடைய திருப்பெயரில் உள்ள நா+ரா=என்ற இரண்டு எழுத்துக்கள் "நாராய்" என்று விளிக்கும் பொழுது இருப்பதால் இப்பறவையை முதன் முதலில் ஆழ்வார் பொறுக்கினார் போலும். நாரைக்கும் நலம் மிகுந்த ஆசார்யர்களுக்கும் உள்ள ஒற்றுமையைப் பலபடியில் ஸ்ரீ காஞ்சிபுரம் அண்ணங்கராச்சாரியார் சுவாமிகள் தமக்கே உரிய உயர் நடையில் எடுத்துப் பேசுவார். நாரையின் நிறம் வெளுப்பு, ஆசார்யர்கள் உள்ளமும் தூய வெண்மை. குளக் கரையில் ஓடுமின் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் நாரை. ஆசார்யர்களும் உலகியல்களில் இருந்து கொண்டே பெருமானை மோக்ஷம் என்ற உறுதிப் பொருளையே எதிர்பார்த்திருப்பார்கள். நாரைகள் கூட்டம் கூட்டமாக வசிக்கும். அடியார்களும் கூட்டம் கூட்டமாகவே கேசவன் குணம் பாடி நிற்பார்கள். நாரைக்கு மேகத்தைக் கண்டால் மகிழ்ச்சி. அடியார்களுக்கும் மேக வண்ணனைக் கண்டால் மனமகிழ்ச்சி. இப்படிப் பல துறைகளில் அடியார்களின் தன்மை பெற்றது நாரை. நாரையை விளிக்கும் பொழுது. "அழகிய சிறகுகளை உடைய நாரையே" என ஆழ்வார் அழைத்ததிற்கு ஈட்டில் அருமையான உவமானம் கூறப்பட்டுள்ளது. "சிறு குழந்தை தாயின் மடியில் படுத்திருக்கும் பொழுது, தாயின் உடல் உறுப்புக்கள் எல்லாம் இருக்க; தனக்குப் பால் தந்து பயன்படும் தாயின் முலைகளிலே முதலில் வாய் வைப்பது போல், ஆழ்வாரும் இப்பறவையை நாரணன் பால் எடுத்துச் செல்வது சிறகான தாலே அதையே முதன் முதலில் நோக்குகிறார்" என்றுள்ளது. "ப்ரஜை தாயினுடைய அவயவங்கள் எல்லாம் கிடக்க, முலையிலே வாய் வைக்குமா போலே, கமநஸாதனமான சிறகிலேயாயிற்று முற்படக் கண்வைத்தது" என்பது. அவ்விடத்திய ஈட்டு வாக்கியம். ❋

---

## ஆணையர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

20-5-64 ஸ்ரீகன்னியாகுமரி அம்மன் கோயிலில் வெள்ளிக்கதவுகள்-வெள்ளி நிலைப்படி திறப்புவிழா.

21-5-64 மதுரை, ஸ்ரீ கூடலழகர் கோயிலில், ஸ்ரீ வி. கே. ஸ்ரீ நிவாசாச்சாரி அவர்களின் மகாபாரதம்—சொற்பொழிவுத் தொடக்கவிழா.

22-5-64 பழநி (1) தேவஸ்தான சத்திர அலுவலகக் கட்டிடத்திறப்பு விழா.
(2) நூல் நிலையம்—அடிக்கல் நாட்டு விழா.
(3) பணியாளர்கள் குடியிருப்பு—அடிக்கல் நாட்டு விழா.
(4) முடிகாணிக்கை நிலையம்—அடிக்கல் நாட்டு விழா.

22-5-64 திண்டுக்கல், ஸ்ரீ காளத்தீசுவரர் கோயிலில் நூல்நிலையத் திறப்பு விழா.

26-5-64 திருச்சி தேசியக் கல்லூரித் திடலில் ஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் பாகவத உபன்யாசத் தொடக்க விழா.

# ஒரு நம்பி

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நாவுக்கரசர் தம் மனையில் திருவமுது கொள்ள இசைந்த பொழுது, அப்பூதியடிகள் தம் துணைவியாரை நோக்கி, 'நமக்குக்கிடைத்த பேறுதான் என்னே! இது நம் சிவபெருமான் திருவருளால் கிடைத்ததே; இனி நாம் உய்ந் தோம்' என்று சொல்லி, அரசர் திருவமுது கொள்வதற்கு ஏற்ற வகையில் அதனை இருவரு மாக அமைக்கத் தொடங்கி, மிக விரைவில் சிறப்பாகச் செய்து முடித்தனர். பின்பு, தம் முதல் மகன் மூத்த திருநாவுக்கரசை அழைத்து நம் நாயனார் திருவமுது கொள்வதற்குப் பொருத்தமான வாழைக் குருத்து ஒன்றை நம் தோட்டத்திற் சென்று விரைவிற் கொண்டுவா, என்று விடுத்தார்கள்.

மகன், 'என் தாய் தந்தையர் என்மேல் உள்ள அன்பினால், எனக்கு இப் பணியை இட் டார்கள்' என்று மிக்க மகிழ்ச்சியோடு வாழைத் தோட்டத்துட் புகுந்து, பெரிய செழிப்பான வாழைக் குருத்தாகத் தேடி, அத்தகையது ஒன்றைக் கண்டு. அதனை அரிவாள் கொண்டு அரிந்தான். அரியும் பொழுதில் அதில் இருந்த பெரிய பாம்பு ஒன்று அவன் கையில் தீண்டி விட்டது. அதனோடு நில்லாமல் அப் பாம்பு அவன் கையில் நன்கு சுற்றிக் கொண்டு கோபத்தினால் மிகவும் சீறிற்று. மகன் யாது செய்வான்! திடுக்கிட்டு நடுங்கித் தனது வலி மையால் அதனை உதறித் தள்ளிவிட்டு, வாழைக் குருத்துடன் ஓடினான். 'பாம்பின் விடத்தினால் யான் இறத்தல் திண்ணம்; ஆயி னும், அதற்குள் அவ் வாழைக் குருத்தை என் தாயிடம் நான் கொடுக்க வேண்டும்; நாயனார் திருவமுது கொள்வதற்கு இடையூறாக, என் னைப் பாம்பு தீண்டிய செய்தியை ஒருவருக்கும் சொல்லவும் மாட்டேன்' என்று எண்ணினான்.

மூத்த திருநாவுக்கரசு, மூத்த திருநாவுக் கரசே யன்றோ! என்னே அச் சிறுவனது பேரன்பு! 'தந்தை யறிவே மகனறிவாகும்' என்பது நல்லோரிடத்துத் தவறாது காணப்படு வதேயாம். அப்பூதியடிகளாரது மகனல்லனோ அவன்? அவனது பண்பு வேறு எவ்வாறு இருக்கும்?.

அதனால், அவன் நினைத்தபடியே அதி வேகமாக ஓடி வந்தான். 'ஓட்டத்தின் வேகத் திற்கு ஏற்ப, விடமும் வேகமாய் ஏறும்' என் பதை அச் சிறுவன் அறியான். ஆகவே, அவன் வேகத்திலும் விடத்தின் வேகம் முற் பட்டு நின்றது. மகன் பற்களும், கண்களும், மேனியும் விடத்தால் கருகிப்போக, வாய் குழறி, வாழைக் குருத்தைத் தாயார் முன்னே வைத்து விட்டு மயக்கமுற்றுக் கீழே விழுந்தான்.

தாயாரும் தந்தையாரும் கண்டு, 'என்ன இது!' என்று மனம் திடுக்கிட்டு வருந்தி, மகனை உற்று நோக்கினர். அவன் கையில் கடிவாயி னின்றும் உதிரம் வடிவதையும், மற்றைய உடற் குறிகளையும் கண்டு, 'பாம்பு கடித்து, விடம் தலைக்கேறிவிட்டது' என்று தெரிந்து கொண்ட னர். மகனது ஆவியும் பிரிந்தது. மகனிடத் தில் உள்ள பிரியத்திலும் மாதவரிடம் அவர் களுக்கு உள்ள பிரியம் மேலிட்டது. அதனால், இறந்த மகனை ஒரு பாயில் வைத்துச் சுருட்டி, இல்லத்திற்கு வெளியில் ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு, அடியவரை அமுதுண்ண அழைத்தனர்.

அப்பர் பெருமானார் எழுந்தருளிவர, அப் பூதியடிகளாரும் அவர் மனைவியாரும் அவருக் குப் பாதபூசை செய்து, ஆசனத்தில் இருக்கச் செய்தனர். இலையை இடுமுன் நாயனார் அப் பூதியடிகளுக்கும், அவர் மனைவியாருக்கும் விபூதி அளித்து, 'மூத்த திருநாவுக்கரசு எங்கே? என்று கேட்டார். இருவரும் ஒன்றும் சொல்ல இயலாதவர்களாய், 'அவன் இச் சமயத்திற்கு

உதவமாட்டான்' என்றனர். அஃது, 'அவன் இன்றியமையாத தொரு கருமத்தின் பொருட்டு வெளியே சென்றிருக்கிறான்' என்ற பொருளைத் தருவது இயல்பாயினும், இறைவனது அருள் காரணமாக, நாவுக்கரசரது திருவுள்ளத்தில் ஒரு கலக்கம் உண்டாயிற்று. அதனால், அவர் அதனை ஏற்றுக் கொள்ள உடன்படாதவராய், 'இவ்வமையத்தில் நீங்கள் இவ்வாறு கூறுவதை என் மனம் ஏற்றுக்கொள்ளாது; உண்மையைத் தெளிவுபெறச் சொல்லுங்கள்' என்று கேட்டார். அதற்குமேல், அவ்விருவரும் பொய் கூற மாட்டாதவர்களாய், நிகழ்ந்ததைச் சொல்லினர்.

நாவுக்கரசர் கேட்டு, 'பெரியவர்களே, நல்ல காரியம் செய்தீர்கள்; இவ்வாறு செய்தவர் இன்றுவரை இவ்வுலகத்தில் யாரேனும் உளரோ? நீங்கள்தாம் செய்தீர்கள்; வாருங்கள்' என்று சொல்லி எழுந்து சென்று, இறந்த மகனை அங்குள்ள திருக்கோயில் முன்பு கொண்டுவந்து இடச் செய்து, சிவபெருமானது திருவருளை வேண்டி, 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று தொடங்கி, ஒவ்வொரு பாட்டிலும் இறைவனது திருவருட் கூறுகளை எல்லாம் முறையாகப் பத்துவரையிலும் வைத்துப் பதிகம் பாடிய பொழுது, பாம்பின் விடமும் மகன் உடலிலிருந்து முறையாக இறங்கிப் பத்துப் பாடல்களும் நிரம்பிய பொழுது, முற்றிலும் நீங்கிற்று. மகன், உறக்கம் நீங்கி எழுந்தவன் போல் உணர்வு பெற்று எழுந்து திருநாவுக்கரசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றான். நாவுக்கரசர் தாம் விரும்பியபடி அவனுக்குத் திருநீறளித்துப் பின்பு மற்றைய பிள்ளைகட்கும் திருநீறளித்தருளினார்.

நாவுக்கரசர் அப்பூதி அடிகளார் மகனை உயிர்ப்பித்ததைக் கண்ட அனைவரும், சிவபெருமானுக்குச் செய்யும் திருத்தொண்டினது பெருமையை அறிந்து, அதனையே போற்றினார்கள். அஃதாவது, 'நாவுக்கரசர் அப்பூதி அடிகளார் தம் மகனை எழுப்பியது' ஆண்டவன் அருளேயாம். 'ஆண்டவனது அருள் அவரைப் போல அவன் திருவடிக்குச் செய்யும் தொண்டினாலே கிடைப்பதாகும். அவ்வருள் கிடைத்தால் அதனால் ஆகாதது ஒன்றுமில்லை' என்று உலகத்தார் அனைவரும் நன்கு உணர்ந்தனர்.

ஆகவே, அப்பர் பெருமானார் அப்பூதியடிகளார் இல்லத்திற்கு அருமையாக வந்திருந்து அந்த ஒரு நன்னாளிலே, அவரிடத்து அளவு கடந்த அன்புடன் அவரை வரவேற்று, அவருக்குத் திருவமுது படைத்தலில் அளவற்ற ஆர்வங் கொண்ட அடிகளார்க்கு, அளவிட ஒண்ணாத் துன்பத்தை உண்டாக்குகின்ற ஒரு பெருந் தீங்கு அவர் மனையில் நிகழ்தல் பொருந்துமோ? என்று ஐயுற வேண்டுவதில்லையாம். ஏனெனில், அப்பூதியடிகளாருக்கு நாவுக்கரசரிடம் அவரைக் காணாமலே அளவற்ற ஆர்வம் உண்டாயினமைக்குக் காரணம், அவர் இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டில் கொண்டிருந்த உறைப்பும், அவ்வுறைப்புக்கேற்ப அத் திருத்தொண்டின் பெருமையை உலகம் அறியுமாறு, இறைவன், சமணர் செய்த தீங்குகளினின்றும் அவரைக் காத்த திருவருளுமே யாகலின், அவற்றை இன்னும் அப்பூதியடிகளாரும் பிறரும் நேரே கண்டு பெரிதும் இன்புற்று, அந்நெறியிலே நின்று இனிது வாழ்தற் பொருட்டே அந் நிகழ்ச்சி நிகழ்ந்தது என்பதனையே சேக்கிழார்,

"பிறிவுறும் ஆவிபெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார்"

என, நன்கு விளக்கினாராகலின். ஆகவே, 'இறந்தவன் எழுந்தது நம்மாலேதான்' என்றோ, 'நாமே எல்லாம் செய்ய வல்லோம்' என்றோ 'நாவுக்கரசரும் நினைத்திலர்; பிறரும் நினைத்திலர்; 'எல்லாம் செய்ய வல்லது ஆண்டவன் அருளே; அவன் இச்சைப்படியே, நிகழ்வன அனைத்தும் நிகழும்' என்றே இந் நிகழ்ச்சியால் அனைவரும் நன்குணர்ந்தனர் என்க. இவ்வாறு இறைவன் திருவருட் பெருமையை உலகிற்கு உணர்த்த வந்தவர்களே நம் சைவ சமய ஆசாரியர் அனைவரும்; அன்றிப் பிறர்போலத் தம் பெருமையை உணர்த்த வந்தவர் அல்லர் என்பதை நன்குணர்ந்து கொள்க.

மகன் உயிர் பெற்றெழுந்தபோது அப்பூதி அடிகளாரும், அவர்தம் மனைவியாரும் அதற்கு மகிழ்ச்சி யடைதலில் தலைப்படாமல், இனிது சமைக்கப்பட்ட உணவை, அவ்வினிமை கெடாமல் காலத்தில் நாயனாருக்குப் படைக்க முடியாதபடி இவனால் சிறிது இடையூறு நேர்ந்துவிட்டது என்று மனம் வருந்தி, அச்

செயலில் விரைந்து நின்றனர். அதனையறிந்த நாவுக்கரசர், அவர்களது மனம் மகிழுமாறு அவர்களது இல்லத்திற் சென்று முன்பு இட்ட ஆசனத்தில் அமர்ந்து, அப்பூதியடிகளாரையும், பிள்ளைகளையும் உடன் இருந்து உண்ணுமாறு கட்டளையிட்டு, அனைவர்க்கும் அம்மையார் முறைப்படி உணவு படைக்க, அனைவர்களுடன் திருவமுது செய்தருளினார். பின்னும் அங்ஙனமே பல நாட்கள் அப்பூதியடிகளார் தம் இல்லத்தில் அவரது வழிபாடுகளை ஏற்று இருந்தருளினார்.

பின்பு நாவுக்கரசர் முன்போலத் தமது யாத்திரையை மேற்கொண்டு, திருப்பழனத்திற்குச் செல்ல, அப்பூதியடிகளாரும் உடன் சென்றார். நாவுக்கரசர், திருப்பழனப் பெருமானை வணங்கி, "சொன்மாலை பயில்கின்ற" என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அதன் இறுதித் திருப்பாடலில், அப்பூதியடிகளாரை, 'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி' என்றும், 'இறைவனது திருவடிகள் அவரது முடியின்கண் சூடும் மலராய் உள்ளன' என்றும் அருளிச் செய்தார். இதுவே, அப்பூதியடிகள் நாவுக்கரசரது திருப்பெயரை எல்லையற்ற அன்போடு எப்பொழுதும் எங்கும் சொல்லி வந்ததனாற் பெற்ற பயன், என்று சேக்கிழார் தெளிவிக்கின்றார்.

'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வான வூர்தி எய்துப' (புறம்-27) என்பது சான்றோர் கொள்கை. நிறைமொழி மாந்தரது வாழ்த்து, அவ் வாழ்த்தின் பயனை எல்லாம் முற்றத் தரும் என்பது பெரியோர் அனைவர்க்கும் உடன்பாடு. அவ்வாற்றால், 'இறைவனது திருவடி அப்பூதியடிகளாரது முடியில் அணியும் பூக்களாய் மலரும்' என்ற நாயனாரது வாழ்த்து, அடிகளார்க்கு அப் பயனைத் தந்தே விடுதல் ஒருதலையன்றோ! மாணாக்கர்களது முடியில் இறைவனது திருவடியை மலரச் செய்தலே ஆசாரியர்களது செயல் என்பது வெளிப்படை. அதனை அப்பர் பெருமானார், தம்மைஆசிரியராக அடைந்த அப்பூதியடிகளார்க்குச் செய்யத் தவறவில்லை என்க. தீட்சா முறையில், மாணாக்கரது முடியில் சூட்டப்படும் ஆசாரியர் திருவடியை இறைவனது திருவடி என்னாது, வேறாகக் கூறுவார் எவரேனும் உளராயின், அவர்க்கு நாம் சொல்லக் கடவது ஒன்றில்லை. தீட்சா முறையில் தம் திருவடி வாயிலாக இறைவனது திருவடியைச் சூட்டுவிக்கின்றதனைத் திருப்பதிக நெறியில், நாயனார் தம் சொல் மாலையாற் செய்தனர் என்க. இதனையே சேக்கிழார்,

'இப்பூதி பெற்ற நல்லோர் (அப்பூதியடிகள்) எல்லையில் அன்பால் என்றும் திருநாவுக்கரசர் பாதம் செப்பு வூதியம் கைக்கொண்டார்' என்று உற்றுணர்ந்து அருளிச் செய்தார். எனவே, இறைவன் திருவடி தமது சென்னியில் மலரும்நிலை, அப்பூதியடிகளார்க்கு முன்பு இருப்பினும் இல்லா தொழியினும் நாவுக்கரசரது நன்மொழியாலே அப்பயன் பெறப் பட்டதாதல் ஒருதலை. இறைவனை நோக்கி, பெருமானே நின் சேவடியை அப்பூதியார்தம் சென்னியிற் சூட்டுக' என, நேரே கூறுது, இங்ஙனம் கூறினும், அவ்வாறு கூறுதலே திருவுள்ளம் என்பதும், அதனை அவர் மனத்தானும் மனத்திருந்து கருத்தறிந்து முடிப்பானும் ஆகிய இறைவன் தவறுது முற்றுவித்தனன் என்பது, "குரும்பை ஆண்பனை யீன் குலை ஒத்தூர்" என அருளிச் செய்த திருஞான சம்பந்தரது கருத்தறிந்து, இறைவன் ஆண்பனைகளை யெல்லாம் பெண்பனைகளாக்கிய வரலாற்றான் அறிந்து கொள்க.

சிவநெறியின் சிறப்புணர்த்தும் வரலாறுகளுள் அப்பூதியடிகளது வரலாறு ஒன்றும். அஃது எங்ஙனம் எனின், 'வருணாச்சிரம தன்மமே எவ்வகையிலும் நன்னெறியாய் அமையும் என்பது வைதிக நெறி. 'சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் கொள்ளும் அன்பே நன்னெறி; அந்த அன்பினையுடையவர் வருணாச்சிரம நெறியிற் பிறழினும் குற்றம் இன்று' என்பது சைவநெறி. வேளாண்குலப் பெரியாராகிய நாவுக்கரசரை, அந்தணர் குலப் பெரியாராகிய அப்பூதியடிகள் தமக்கு ஆசிரியராகக்கொண்டு யாவரும் அடைதற்கரிய பெரிய பேற்றினைப் பெற்ற வரலாறன்றோ இவ் வரலாறு!

இன்னும், 'சிவனைத் தலைப்பட்ட பெரியார் சிவனின் வேறல்லர்' என்னும் ஒரு பேருண்மையினையும் உணர்த்துவது இவ்வரலாறு என்பதனைச் சிவப்பிரகாசர் தமது நால்வர் நான்மணி மாலையில் விளக்கினார். அஃதாவது, சிவபிரானிடத்து அன்பு செய்தவர்களது வரலாற்றைத் தொகுக்க வந்த நம்பியாரூரர், திருநாவுக்கரசரிடத்து அன்பு செய்த அப்பூதியடிகளாரையும்

# தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

**ஸாக்ஷாந் நா ராயணோ தேவ: க்ருத்வா மர்த்ய மயீம் தநும், மக்நா நுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா.''**

என்கிற ப்ரமாணப் படியும், ஞானிகளின் அவதாரமும் பகவதவதார விசேஷமேயன்றோ. ''சேமம் குருகையோ செய்ய திருப்பாற் கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ? தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்குமுளவோ பெருமானுனக்கு'' என்று நம்மாழ்வாரை நோக்கி ஒரு பரம பக்தர் பணித்த பாசுரமும் இங்கு அநுஸந்திக்கப் பொருந்தும். ப்ராஸங்கிகமான விது நிற்க.

இனி அவதாரப்ரயோஜநம் சொல்லுகிற (4—8)

**பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய சதுஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே**

என்கிற ச்லோகத்தைப் பற்றி யாராய்வோம். ''துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து'' என்றும் ''நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய்'' என்றும் சொல்லுகிறபடியே கர்மவச்யர்களான ஸம்ஸாரிகளும் படாத கஷ்டங்களைப் பட்டு இந் நிலவுலகில் எம்பெருமான் வந்து அவதரிக்க வேணுமோ? ஸத்ய ஸங்கல்பனான தான் தன்னுடைய ஸங்கல்ப சக்தியைக் கொண்டே எதுவும் செய்யலாமன்றோ? எத்தனை ஸாதுக்களை ரக்ஷிக்க வேணுமானாலும் எத்தனை துஷ்டர்களைச் சிக்ஷிக்க வேணுமானாலும் தன்னுடைய அவ்யாஹத சக்திகமான ஸங்கல்பத்தினாலே செய்து தலைக்கட்ட என்ன தடை? ஸாது பரித்ராணத்திற்காகவும் துஷ்க்ருத விநாசத்திற்காகவும் தர்ம ஸ்தாபனத்திற்காகவும் அவ்வப்போதுகளில் நானே வந்து பிறக்கிறேனென்கிறானே, எதற்காகப் பிறக்க வேணும்? என்று பிரபலமான ஆக்ஷேபம் தோன்றக்கூடியதிங்கு. இதற்கு சங்கர பாஷ்யத்தில் யாதொரு பரிஹார

---

அத்தொகையுள் அருளிச் செய்தமையை ஓர்ந்துணர்தல் வேண்டும் என்னுங் கருத்தமைய ஒரு செய்யுளைச் செய்துள்ளார்.

'சிவபிரானது திருப் பெயராகிய திருவைந்தெழுத்தை எப்பொழுதும் ஓதுதலே சிவனடியாரது செயல். ஆயினும் அப்பூதியடிகள் திருநாவுக்கரசரது திருப்பெயரையே எப்பொழுதும் ஓதி, அந்தம் இல் இன்பத்து அழிவில் வீட்டைப் பெற்றார்' என்றும் மற்றொரு செய்யுளிற் குறித்தார். இதுபற்றியே அடியவரது பெயர்களும், 'பஞ்சாக்கரம்' எனப் பெரியோர்களால் வழங்கப் பெறுகின்றன. அப்பெயர்கள் ஐந்தெழுத்தினாலேயே அமையவேண்டும் என்னும் கட்டளை இல்லை. அவற்றை ஓதுவார்க்கு வரும் பயன், அஞ்செழுத்தை ஓதுவார்க்கு வரும் பயனே யாம் என்பதே கருத்தாகும். 'ஞான சம்பந்தர் என்னும் நாம மந்திரம்' என்று சேக்கிழாரும் அருளிச் செய்தார்.

இத்தகைய ஆசாரிய பத்தி அடியார் பத்திகளை, ஒரு நம்பி அப்பூதியடிகளது திருவடிகளை வணங்கி நாமும் பெற்று நலனடைவோமாக,

மும் காணக்கிடைக்கவில்லை. மத்வபாஷ்யத்தில் 'பகவான் ஸாது பரித்ராணுதிகளை அவதரித்தே செய்தாக வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; ஆனாலும் விளையாட்டாக அவதரிக்கிருன். ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் "லோகவத்து லீலா கைவல்யம்" என்று சொல்லப் பட்டிருக்கிற தன்றோ?" என்று எழுதப்பட்டுள்ளது. ஸாது பரித்ராணுதிகளுக்காக நான் வந்து பிறக்கிறே னென்று மூலத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருக்க, அதற்குக் கண்டனம் செய்கிருப்போல் இந்த பாஷ்யம் அவதரித்திருக்கின்றது. "லோகவத் து லீலா கைவல்யம்" என்கிற ப்ரஹ்ம ஸூத்ரமானது பகவான் செய்கிற ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றினதே யொழிய பகவதவ தாரத்தைப் பற்றிய தன்றென்பது நிர்விவாதம். அதை இங்கெடுத் தெழுதுவது அப்ரஸக்தம். இதை வித்வான்கள் பராமர்சிக்க வேண்டும். ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்திலுள்ள இன்சுவைப் பொருள்களை யநுபவிப்போம்.

ப்ரஹ்ம ஸூத்திரத்தில், "அந்தஸ்தத்தர் மோபதேசாத்" (1-1-21) என்கிற ஸூத்ரத் தின் ஸ்ரீபாஷ்யத்தில் 'பரித்ராணுய ஸாதூநாம்' என்கிற இந்த ச்லோகத்தை ப்ரஸக்தாநு ப்ர ஸக்தமாக வுதாஹரித்து. ஸாதுக்கள் இன்னு ரென்பதை நன்கு விவரித்து அவர்களைப் பரித் ராணம் பண்ணுவது இன்னவித மென்பதையும் நன்கு விளக்கி, இப்படிப்பட்ட ஸாது பரித்ரா ணத்திற்காகவே முக்கியமாக அவதாரம் செய் தருளிற் றென்றும், துஷ்ட நிரஸநமானது ஸங் கல்பத்தாலுங் கூட ஸாத்யமாகக் கூடிய தாத லால் அவதாரத்திற்கு அது ப்ரதாநோத்தேச்ய மன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஸாது பரித்ராணம் மாத்திரம் ஏன் ஸங்கல்பத்தினு லாகக் கூடாது? "ஸாதவ: பரித்ராதா பவந்து" என்று ஸங்கல்பித்தால் ஆகமாட்டாதோ? என்று ஆக்ஷேபமுதிக்கக் கூடும். இதற்குப் பரிஹாரம் கீதா பாஷ்யத்தில் நன்கு உள்ளது. அதை விவரிக்கிறோம்.

'ஸாதூநாம் பரித்ராணுய' என்றதில் ஸாதுக்களாவார் இன்னுரென்பதை விவரிக்கிற முகத்தால் அவர்களுடைய பரித்ராணம் ஸங் கல்ப ஸாத்யமாகா தென்றும், கண் காணவந்து தோன்றியே செய்யத் தக்கதா மென்றும் தெளி வித் தருளுகிருர் ஸ்ரீ ராமாநுஜர். ஸ்ரீ வைஷ்ண வாக்ரேஸரர்களான நம்மாழ்வார் போன்ற பரம பக்தர்களையே திருவுள்ளத்திற் கொண்டு பல பங்க்திகள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. "எங்கே காண்கேன் ஈன்துழாயம்மான் தன்னை யானென்றென்று" என்றும் "காண வாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து" என்றும் "கூராராழி வெண்சங்கேந்திக் கொடி யோன் பால் வாராயொரு நாள்" என்றும் 'தாமரைநீள் வாசத் தடம்போல் வருவானே! ஒருநாள் காணவாராயே" என்றும் கதறு கின்றவர்களாய் "ஒரு பகலாயிர மூழியாலோ" என்றும் "தெய்வங்கா ளென்செய்கேன் ஓரிரவு ஏழூழியாய்" என்றும் "ஊழியில் பெரிதால் நாழி கையென்னும்" என்றும் ஒரு நொடிப் பொழு தை கல்பஸஹஸ்ரமாக நினைப்பவர்களாய், "காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக்குரல் மேலுமெழா மயிர்கூச் சுமறு" என்றும் "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும் "உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்து உடம்பெலாம் கண்ணநீர் சோர" என்றும் ஸர்வாவயவ சைதில்ய முடை யவர்களா யிருப்பவர்கள் ஆழ்வார்களைத் தவிர்த்து வேறு யாருமிலரே. அவர்களின் ஸ்ரீ ஸூக்திகளையே யன்றோ ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத் தில் மொழி பெயர்த்திருக்கிருர். அவர்கள் தன்னைக் காணவேணு மென்றும், தன்னோடு பேச வேணுமென்றும், தன்னைத் தழுவ வேணு மென்றும் காதலித்தால், எம்பெருமான் நேராக வந்தாலொழிய அவர்களின் காதல் நிறைவேரு தன்றோ. ஸங்கல்பம் இங்கு என்ன பண்ணக் கூடும்? "மழுங்காத வைநுதிய சக்கர நல்வலத் தையாய் தொழுங் காதல் களிறளிப்பான் புள் ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க்களித் தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" (3-1-9) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையே ஸ்ரீ ராமாநுஜர் நிதியாகக் கொண்டு பாஷ்யம் செய் தருளி யிருக்கிருர். ஆக 'பரித்ராணுய ஸாதூ நாம்' என்ற விடத்தில் ஸாது பதத்தினுல் விவ க்ஷிதர்கள் ஆழ்வார்கள் போன்றவர்களென்றும் அவர்கள் எம்பெருமானை நேரில் கண்டாலல் லது தீராத காதலை யுடையவர்க ளாகையாலே அவர்களுக்காக வந்து, தோன்றியேயாக வேணுமென்றும், அவர்களுடைய காதல் ஸங் கல்பத்தினுல் ஒருகாலும் தீர்க்க முடியா தென் றும் காட்டி, சங்காபரிஹாரம் நன்கு செய்தருளி னுராயிற்று.

## ஐந்தாம் அத்தியாயம்.


இதில் 'வித்யா விநய ஸம்பந்நே' என்பதை விசேஷணமாகக் கொண்டு 'ப்ராஹ்மணே' என்கிற விசேஷ்யத்தில் இதை அந்வயித்து, வித்யா விநயங்களோடு கூடியிருக்கிற உத்தம ப்ராஹ்மணனிடத்தில் என்பதாக பொருள் விவரித்தார் சங்கராசாரிய ஸ்வாமிகள். ஒரு விதமான அர்த்தமும் செய்திலர் மத்வாசாரியர். ஸ்ரீ ராமாநுஜரோ வென்னில் 'வித்யா விநய ஸம்பந்நே' என்பதைத் தனி விசேஷ்யமாகவும், 'ப்ராஹ்மணே' என்பதைத் தனி விசேஷ்யமாகவுங் கொண்டு, பாஷ்யமிட்டருளினர். வித்யா விநய ஸம்பந்நனான உத்தம ப்ராஹ்மணனொருவன்; அவனிடத்திலும், அவையொன்றுமில்லாத கேவல பிராமணனொருவன் அவனிடத்திலும் என்று, இரண்டு வார்த்தையாக ஸ்ரீ ராமாநுஜர் திருவுள்ளம் பற்றினபடி. இதுதான் மிகவும் உசிதமானதென்று தாத்பர்ய சந்த்ரிகையில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. எங்ஙனே யென்னில், கவி, ஹஸ்திநி, சுநி, ச்வபாகே என்று மேலுள்ளவற்றில் ஒரு விசேஷணமுமிடப்படவில்லை. அப்படியிருக்க 'ப்ராஹ்மணே' என்பதில் மட்டும் விசேஷணாவச்ய கதையில்லை. அன்றியும், வித்யா விநய ஸம்பந்நனான ப்ராஹ்மணனைச் சொல்லி இவனுக்கு எதிரிடையான நபரை நிர்தேசியாமலிருப்பது குறையுமாகும். ஆகவே வித்யா விநய ஸம்பந்நனிடத்திலும் கேவல ப்ராஹ்மணனிடத்திலும் என்று தான் பொருள் கொள்ளப் பொருந்தும் என்று இந்த ச்லோகத்தில் "பண்டிதாஸ் ஸமதர்சிந:" என்றிருப்பது கொண்டு 'ஜாதி பேதம் முதலான வற்றையிட்டு ஏற்றத்தாழ்வு காண்பவர்கள் பண்டிதர்களல்லர் பாமரர்களே' என்கிற அபார்த்தம் நவீன ஸம்ஸ்காரகர்களின் வாக்கில் உலாவிவருகிறது. அது சிறிதும் பொருந்தாது பசுவினாலாகிற காரியம் யானையினாலாகாது, யானையினாலாகிற காரியம் பசுவினாலாகாது. பால் வேண்டும் போது பசுவைத் தேடுவதும், மகோத்ஸவங்களுக்கு யானையைத் தேடுவதும் யாவரிடத்துங் கண்ட வியல்பு. கவி ஹஸ்திநி சமதர்சனம் லோகவ்யவஹார ரீதியில் எங்ஙனே பண்ண முடியும்? 'ஸர்வத்ர ஸமதர்சிந:' என்றதற்கு நவீநர்கள் சொல்கிற பொருள் பொருந்தவேணுமாகில், யானைக்குச் செய்கிற அலங்காரங்களை நாய்க்குச் செய்யவேண்டும்; நாய்க்குச் செய்யுமவற்றைக் குதிரைக்குச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஆபத்திகளைப் பரிஹரிக்கைக்காக 'ஸர்வத்ர ஸமதர்சிந: என்பதற்குப் பொருத்தமான பொருள் காணவேண்டும். அதுதான் ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தில் காண்பது. அன்றியும், இதற்குமேல் மூன்றுவது ச்லோகத்தில் (5—20) "நப்ரஹ்ருஷ்யேத ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்" என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ப்ரியமானது கிடைத்தால் ஸந்தோஷிக்கக் கூடாது; அப்ரியமானது கிடைத்தால் வெறுப்புக் கொள்ளலாகாது என்று இதற்குப் பொருள். இப்படியிருக்க வல்லவனுக்குத் தான் ஸர்வத்ரஸமதர்சந ரூபமான ஜ்ஞாந விபாக மூண்டாகுமென்று பாஷ்யகாரர் அருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட ஓர் அதிகாரி தேறுவானாகில் அவனுடைய ஸர்வத்ரஸமதர்சித்வம் எப்படிப்பட்டதென்று நேராகக் கண்டு கொள்ளலாம்.

(தொடரும்)

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள் :

ஸ்ரீ மாகாளியம்மன் கோயில், பொள்ளாச்சி—மகோத்சவம்.
,, சுந்தரேசுவரர் கோயில், கோஹூர்—விசாகபிரம்மோத்சவம்.
,, சவுக்கை முத்தாரம்மன் கோயில், ஏழல்—குடமுழுக்கு விழா.
,, காசி விசுவநாத சுவாமி கோயில், நீடாமங்கலம்—வைகாசிப் பிரம்ம உத்சவம்.
,, ஆதிகேசவப் பெருமாள் கோயில், காட்டுப்பாளுர்—பிரம்ம உத்சவம்.
,, பாடலாத்திரி நரசிம்ம சுவாமி கோயில், சிங்கப் பெருமாள் கோயில்—பிரம்மோத்சவம்.
,, கண்ணுடையவார் கோயில், நாட்டரசன் கோட்டை—பிரம்மோத்சவம்.
,, புஷ்பவனேசுவர சுவாமி கோயில், பூண்டி (தஞ்சை)—வைகாச பிரம்ம உத்சவம்.
,, வரசித்திவிநாயகர் வேலப்பாடி, இராயவேலூர்—பிரம்ம உத்சவம்.
,, செண்பகாதேவியம்மன், திருக்குற்றாலம்—மகாகும்பாபிஷேகம்.
,, சுப்பிரமணிய சுவாமி கோயில், குமரகோட்டம் காஞ்சிபுரம்—விசாகதீர்த்த மகோத்சவம்.



ஸ்ரீ கன்னியாகுமரியம்மன்

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.

பிள்ளைத் தமிழ் என்பது கடவுளரையேனும் பிறதலைவரையேனும் அவர்களது இளமைப் பருவத்துச் செயல்களைப் பத்துப் பருவத்தாற் புனைந்து கூறுவதாம். இது தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் ஒன்று இதனைத் தொல்காப்பியர் விருந்து என்னும் அழகில் அமைப்பர். இங்கு ஒரு விசேடம். விநாயகர் பிள்ளைத் தமிழ், முருகன் பிள்ளைத்தமிழ், அம்மை பிள்ளைத்தமிழ், அழகர் பிள்ளைத் தமிழ் என ஏனைக் கடவுளர்க்கெல்லாம் பிள்ளைத் தமிழ் இருப்பச் சிவபிரானுக்கு மாத்திரம் பிள்ளைத் தமிழ் எவரும் கூறுவது இல்லை. ஏன்?

எல்லார் பிறப்பு மிறப்பும் இயற் பாவலர்தம்
சொல்லா லறிந்தோம் நம்சோணேசர்—இல்லிற்
பிறந்த கதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்திங்
கிறந்த கதையுங் கேட்டிலேம்.

என்பதனால் அறியலாம்.

இப்பத்துப் பருவங்களில் முதலாவது காப்புப் பருவமாம். இதில் விநாயகர் முதலிய எவரைப் பற்றிய பிள்ளைத் தமிழாயினும் முதற்கண் காத்தற் கடவுளாகிய திருமாலைக் கூறவேண்டுமென்பது மரபு 'காப்புக்கு முன்னெடுக்கும் கடவுள்தான் மாலேயாகும்' என்பது இலக்கணம். இதிலும் ஒரு விசேடம். சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இம்முறை மாறியுள்ளது. காப்புப் பருவத்தில் திருமால் காக்க என்னும் பேச்சேயில்லை. அதோடு 'தேவேந்திரன் காக்க' என்பதும் காணோம். அதற்குப் பதிலாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருத்தொண்டத் தொகையில் வரும் அடியார்களையே சுட்டி "இவர்கள் காப்பாராக" என்று கூறியிருப்பது போற்றத் தக்கதாகும்.

இரண்டாவது செங்கீரைப் பருவம். இதற்கு இப்போது கூறும்பொருளே பொருத்தமற்ற தாகும். இதற்குச் செவ்வையான சொல்லைச் சொல்லும் பருவம் என்கின்றனர். கீர்—சொல் என்கின்றனர். ஐ எங்கே வந்தது? இருகாலையும் மடக்கி இருகையையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்ந்தசைந்தாடுதல் செங்கீரைப் பருவத்தினிலக்கணம். செம்மை சொல்லைச் சொல்லுதலில் என்ன இயையபுடைத்தோ அறிகிலம். இனி இதற்கு செங்கீரம் என்பது செங்கிளி (பச்சைக்கிளி, பஞ்சவர்ணக்கிளி) தலையசைந்து ஆடுவது போன்றது என்பர். அதுவும் பொருத்தமின்று. கீரம்—கீரையாவேனேன்? அப்படியாயின் செங்கீரப்பருவம் என்று சொல்லிவிடலாமே. மற்று இதற்கு, தி. செல்வக் கேசவராய முதலியார் அவர்கள், செங்கீரைத் தண்டு காற்றில் அசைந்தாடுதல் போல இளங் குழந்தைகள் தலையசைத்தாடும் பருவம் என்கின்றனர். இதுவே பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது. மூன்றாவது—குழந்தைகளைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் பருவம். நான்காவது சப்பாணிப் பருவம், குழந்தைகளை இருகைகளையும் சேர்த்துக் கொட்டுக என்பது. ஐந்தாவது முத்தப் பருவம். குழந்தைகளை முத்தந்தாவென்று தாயாரும் பிறரும் வேண்டுவதாகக் கூறுவது. ஆறாவது — வருகைப்பருவம். தளர் நடையிட்டுவரும் குழந்தைகளை அழைப்பதாகக் கூறுவது. ஏழாவது அம்புலிப் பருவம். சந்திரனைக் குழந்தைகளோடு விளையாடவாவென்று அழைத்தலைக் கூறுவது, அம்புலி—சந்திரன். இப்பருவம் ஏனைய பருவங்களைக் காட்டிலும் பாடற்கரியதென்பர். 'பிள்ளைக் கவிக்கம்புலி புலியாம்'. அம்புலியை அழைக்கையில் சாம, பேத, தான, தண்ட வகையால் முறையே அம்புலிக்கும், பாட்டுடைத்தலைவருக்கும் ஒப்புக் கூறுதலும், வேற்றுமை கூறுதலும் விளையாடவரின் அம்புலிக்கு விளையும் நன்மை கூறுதலும், வாராவிடின் நிகழும் துன்பம் கூறுதலும் இதன் மரபு. சாமம் என்பதற்கு இன்சொல் என்று பொருள். அஃது

ஒப்பிலடங்கும். இவ்வேழு பருவங்களும் இரு வகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொது. பெண் பாற்பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவம், நீராடற்பருவம், ஊசற்பருவ மென்பவற்றையும், ஆண்பாற் பிள்ளைத் தமிழில் சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறு தேர்ப் பருவம், என்ப வற்றையும் அமைத்தல் மரபு. இவற்றுள் எட்டாவது அம்மானைப் பருவம். இது பாட்டு டைத்தலைவியை அம்மானையாடும்படி கூறுவது. ஒன்பதாவது நீராடற்பருவம். பாட்டுடைத் தலைவியை நீராட வேண்டுமென்று வேண்டுவது. பத்தாவது ஊசல்பருவம். ஊசலாட வேண்டுவது. ஆண்பாற் பிள்ளைத் தமிழில் வரும் சிற்றில் பருவம் - சிற்றில் விளையாடும் சிறுமியர் சிற்றிலை அழிப்பது. சிறுபறைப் பருவத்தில் பாட்டுடைத்தலைவரைச் சிறுபறை முழக்கும் படியும், சிறு தேர்ப் பருவத்தில் சிறு தேருருட்டும்படியும் வேண்டுதலும் கூறப் படும்.

இந்நூலின் நலங்களை எடுத்துக் கூறுவ தென்றால் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வோர் நயந்தான். எதை விடுப்பது? உலகில் சர்க்கரைக் கொழுக்கட்டை என்பார்கள். மாவினால் பண்ணியதனால் ஒருபகுதிதான் இனிக்கும். சர்க்கரையிலாயதெனின் எப் பக்கம் தின்னினும் எல்லாப்பகுதியுமே இனிக் கும். ஆதலால் இந்நூலில் நூறு பாடல்களுள் அங்கொன்று இங்கொன்று சொல்லின் தெனாலி ராமன் சித்திரம் என்று சொல்லும்படியே ஆகிவிடும்.

இறைவனது எண்குணங்களில் ஒன்று முடிவில் ஆற்றலுடைமை. அது அவன் அபார சக்திமான் என்பது. முழுமுதற்கடவுளாகிய விநாயகக் கடவுளும், அத்தகைய வலியின ரென்பதை முதற் செய்யுளிலேயே குமரகுருபர அடிகள் காட்டுகின்றனர். அது விநாயகக் கடவுளின் மதநீர் பெருக்கெடுத்தோடின் உல கினையே அழிக்கும் பிரளய கால வெள்ளம் போன்றது. அவரது கடைக்கண் நின்று எழும் நெருப்புப்பொறிகள் யுகமுடிவில் உலகை சுட்டு நீறாக்கும் பிரளய காலாக்கினி போன்றது. அவரது செவியினின்று வீசும் காற்று பிரளயத்துப் பிரசண்ட மாருதம் போன்றது. மதவெள்ளமும் கட்கடைக்கனலும் தம் எல்லை கடவாது அள வில் நிற்குமாறு செவியினின்று வீசும் காற்றுச் செய்கின்றது என்கின்றனர். அஃது 'கார் கொண்ட கவுண்மதக் கடை வெள்ளம்' என்று தொடங்கும் காப்புச் செய்யுளால் அறிவது.

உலகில் மாந்தர் செயல் முறைகளை அறிந்து வைப்பது புலவனின் பண்புகளில் ஒன்று. அது சப்பாணிப் பருவம் ஐந்தாம் பாடலில்,

"தெய்வக் குழந்தையைச் செங்கோலாட்டுநின்
சிறுகணைக் காற் கிடத்திக் குளிப்பாட்டி யுச்சி
முச்சிக் குஞ்சிக்கு நெய்யேற்றி வெண்காப்பும்
இட்டுவளர் கொங்கையிற் சங்கு வாக்கும்
பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற்
பசுஞ் சுண்ணமுந் திமிர்ந்து பைம் பொற்குறங்
கினிற் கண்வளர்த்திச் சிறிய பருமணித்
தொட்டி லேற்றித் தாலாட்டி"

என்னும் பகுதியால் அறியத் தகுவது.

### இனி நயங்களிற் சில :—

இறைவனுக்குக் கண் மூன்று. ஏனைய மகளிர் போன்று இல்லாது மூன்று கண்கட்கும் விருந்தளிக்க முத்தனங் கொண்டனர் நம் மீனாட்சி அம்மை என்பதனை "முக்கட் சுடர்க்கு விருந்திடுமும் முலையாய் முத்தந் தருகவே" என்கின்றனர். மற்றோரிடத்து போர்க் கோலம் வேறு, மணக் கோலம் வேறு, இவ்விரண்டும் தம்முண் மாறுபட்டவை. அங் ஙனமாகவும் அம்மைக்கு ஒன்றுயின வென்று "போர்க் கோலமே திருமணக்கோலமான பெண் பொன்னூசலாடியருளே" என்கிறார். அம்மையின் வலது கடைக்கண்ணில் இலக்கு மியும் இடது கடைக் கண்ணிற் கலைமகளும் உளர் என்பதை முத்தப் பருவம் பத்தாஞ் செய்யுளில்,

"குழற்றிருவைத் துவளச் சததள முளரியின்
வனிதையை யுதவு கடைக்கண் மடப்பிடியே"

எனக் கூறுகின்றனர். இவ்வுண்மையைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பெரிய நாயகியம்மை துதியில் "அவ்வலை மாதும் கலை மகளும் கண்ணுயினர் உனக்கு" எனக் கூறு கிறார். அபிராமி அந்தாதியிலும் "தனந்தரும் கல்வி தரும் அபிராமி கடைக்கண்களே" என் பதும் இங்கு அறியத்தகும். அவர் கற்பனைத் திறன் இன்னும் சுவையுடைய தாகவும் இருக்

கும். அதில் ஒன்று, நீராடற் பருவம். அம்மே! நமது ஐயர் சொக்க நாதர் சுமையடை கட்டி மண் சுமந்தாரே எதற்கு? ஏன்? கிழவி பிட்டுக்கா? இல்லை இல்லை. பிறருக்கு ஆளாகினார். அடியும் பட்டார். இத்துன்பத்தோடு மண் சுமந்தாரே எதற்கு? நீ அரண்மனையில் நீராடுங்கால் உன்மீது அணிந்த கலவைச் சந்தனங்களெல்லாம் ஓடி வந்து, வைகையிற் பாய்ந்து அவை மணலோடு மணலாய்க் கலந்திருக்கும். ஆகவே அந்த மண்ணைச் சுமக்க வேண்டுமென்ற விருப்பு. என்னே! உன்மீது அவர் வைத்த ஆசை. அதன் பொருட்டுச் செய்யத்தகாதன செய்தாரேயென்று. இக்கருத்தை,

மறிக்குந் திரைத்தண் புனல்வைகை
வண்ட லூடுமண் கூடைகட்டி
வாரிச் சுமந்தோ ரம்மைதுணை
மணிப்பொற் குடத்திற் கரைத்தூற்றும்
வெறிக்குங் குமச்சே றெக்கரிடும்
விரைப்பூந் துறைமண் பெறினெருத்தி
வெண்பிட் டிடவு மடித்தொருவன்
வேலை கொளவும் வேண்டுமெனக்
குறிக்குமிடத்தில்''

என்னும் நீராடற் பருவம் எட்டாஞ் செய்யுளிற் கூறுகிறார்.

இனி அம்புலிப் பருவத்தில் சாம தான பேத தண்டம் என்னும் நால்வகையால் அம்புலியை அழைப்பது முறை. அவற்றுள் பேதம் என்பது அச்சுறுத்தல். அப்பொருளில் அம்புலியை அழைத்தல் அம்புலியே நீ எங்குப் போய் உய்குவை. விண்தலம் பொலியப் பொலிந்திடுதியேல் உனது பகையாகிய பாம்பு உன்னை விழுங்காமல் விடாது. சூரிய மண்டலத்துப் புக்கால் நின் ஒளி மழுங்கி மாசு படுவை. அன்றி எம்பிரான் சடைக்காட்டில் தங்குவையெனில் இவ்வம்மை தான் நின்குடர் குழைப்பச் செய்யப் பெறுவை. ஆதலால் இக் கோமாட்டிபால் அடைந்தால் இவ்வித இன்னல் ஒன்றும் உருது. அண்டபகிரண்டம் முதலிய எல்லாம் பெறுவையென்று அப்பருவம் நான்காம் பாடலிற் கூறுகின்றார். இனி அம்மை அரசு செலுத்திய மாண்பை ஒருகவியிற் கூறுகிறார். அது ''முது சொல்தெளித்த பசுந்தமிழ் நூல் பாழ் போகாமே'' என்று தொடங்கும் தாலப் பருவம் 9-ஆம் செய்யுளிற் காணப்படுவதாம்.★

## இறைபணியாளர் மாற்றங்கள்

| பெயர் | இருந்த இடம் | மாற்றப்பட்ட இடம் |
|---|---|---|
| திரு. டி. எம். பெரியசாமி | ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், குமாரவயலூர். | ஸ்ரீ ஆலந்துறையார் தொகுதிக்கோயில்கள், அரியலூர் |
| ,, எம். சந்திர சேகரன் | ஸ்ரீ ஆலந்துறையார் தொகுதிக் கோயில்கள், அரியலூர். | ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், குமாரவயலூர். |
| ,, ஆர். ஜெயச்சந்திரன் | ஸ்ரீ புற்றிடம் கொண்டேசுவரர் கோயில், புத்தூர், பாபநாசம் தாலுகா. | ஸ்ரீ முல்லை வனநாதசுவாமி கோயில், திருக்கருகாவூர் மற்றும் ஸ்ரீ நவநீத கிருஷ்ண சுவாமி கோயில், ஒன்பதுவேலி. |
| ,, கே. வைத்தியநாதன் | ஸ்ரீ கைச்சினேசுவரர் கோயில், கைச்சினம், திருத்துறைப்பூண்டி. | ஸ்ரீ அக்னீசுவர சுவாமி கோயில், கஞ்சனூர். |
| ,, எஸ். பட்டாபிராமன் | ஸ்ரீ அக்னீசுவரசுவாமி கோயில், கஞ்சனூர். | ஸ்ரீ கைச்சினேசுவரர் கோயில், கைச்சினம். |

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A.B.L., திருநெல்வேலி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அருளாளப் பெருமாள் எம்பெருமானரும் உடையவரிடம் கேட்ட அர்த்த விசேஷங்களை மனத்திலே நன்கு தரித்தவராய் உடையவர் திருவடிகளை விடாதே அவரை ஆச்ரயித்துவந்தார். உடையவரும் தம் மடத்துக்குச் சமீபமாக அவருக்கு ஒரு மடம் சமைத்து அதில் அவர் வாசம் செய்து வருமாறு வகைசெய்தருளினர்.

சிலகாலம் செல்லலும் அநந்தாழ்வானும், எச்சனும் தொண்டனூர் நம்பியும், மருதூர் நம்பியும் உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேண்டுமென்று வந்து உடையவர் அடிபணிந்தனர். உடையவர் நீங்கள் அருளாளப்பெருமாள் எம்பெருமானர் திருவடிகளிலே ஆச்ரயியுங்கள் என்று கூறி அவர் திருவடிகளில் ஆச்ரயிப்பித்தருளினர். அருளாளப் பெருமாளும் தம் சிறுமையையும், உடையவர் கிருபையையும் எண்ணி உள்ளம் நடுக்குற்றவராய், தம்மை ஆச்ரயித்தவர்களை நோக்கி "கேளீர் முதலிகாள், குருவியின் கழுத்தில் பனங்காயைக் கட்டினாற்போல எம்பெருமானர் உங்களை நம்மிடம் கட்டி வைத்தார். ஆகையால் நாம் ஒரு பொருள் என்றே எண்ணிவிடாதீர். எம்பெருமானர் திருவடிகளே தஞ்சம் என்றிருப்பீர்களாக" என்றருளிச் செய்தார். அவர்களும் அவர் திருவடி தாரகமாக, உடையவர் திருவடிகளே தஞ்சமென்று உட்கொண்டு மனநிறைவுற்றனர்.

பின்னும் சில நாட்கள் கழிந்தன. வடநாட்டிலிருந்து ஸ்ரீவைஷ்ணவர் சிலர் எம்பெருமானர் திருவடிகளிலே தெண்டனிட விரும்பியவராய் வந்தனர். அவ்வழியே தாம் விரும்பிய மடத்தைத் தேடி வருபவர்கள் தெருவிலே அருளாளப் பெருமாள் உள்ளிட்ட சிலரைக் கண்டு எம்பெருமானர் மடம் எங்குளது என்று வினவ, அவர்களில் ஒருவர் எந்த எம்பெருமானர் மடத்தைக் கேட்கிறீர்கள் என்று பதில் வினவினர். வந்தவர்கள் வியப்படைந்தவர்களாய் "நம் தர்சனத்துக்கு எத்தனை எம்பெருமானர்கள் உண்டு என்று இப்படிப் பரிகாச வார்த்தையாடுகிறீர்கள் என்று சற்றுக்கடுகடுத்துக் கேட்க, தெருவிலுள்ளார் அச்சமடைந்து 'ஸ்வாமிகளே! கோபிக்காதீர்கள். இங்கே அருளாளப் பெருமாள் எம்பெருமானர் என்னும் ஒரு ஸ்வாமியின் மடமும் இருக்கின்றது. அதனாலேதான் அப்படிக் கேட்டோம் என்றனர். ஸ்ரீ வைஷ்ணவர்கள், "நாங்கள் அவரை அறியோம், உடையவர் மடத்தையே கேட்டோம்" என்று கூறினர். அவர்களுக்கு இராமாநுசர் மடம் காட்டப்பெற்றதும் அவர்கள் ஆங்கே சென்று உடையவரைச் சேவித்திருந்தனர் இந் நிகழ்ச்சியை எண்ணி எண்ணி அருளாளப் பெருமாள் எம்பெருமானர் திருவுள்ளம் பதைத்தது. "ஐயோ! நாம் உடையவர் ஸன்னிதியினின்று பிரிந்து தனித்து வாழ்வதனாலல்லவா நம்மை உடையவருக்கு எதிர்த்தட்டாகப் பிறர் கூற இடமுண்டாயிற்று!" என்று மிகவும் மனம் நொந்து தம்முடைய மடத்தை உடனே இடித்துத் தரைமட்டமாக்கி மடம் இருந்த

சுவடே இன்றிச் செய்து இவ்விதத் தவறான எண்ணங்களுக்கு அதுவரை இடமளித்ததற்கு நொந்து கொண்டிருந்தார்.

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் தம் மடத்தைத் தரைமட்டமாக்கிவிட்டார் என்ற செய்தி உடையவருக்கு எட்டியது. அவர் வியந்து உடனே அதன் காரணம் அறியவேண்டி, அடியார் புடைசூழ அருளாளப் பெருமாள் எம்பெருமானார் இருந்த இடம் நோக்கி எழுந்தருளினர். ஆசாரியன் எழுந்தருள்வது கண்ட அருளாளப் பெருமாள் அவர் திருவடிகளிலே விழுந்துகிடந்தார். உடையவர் அவரைத் தம் திருக்கைகளாலே எடுத்தணைத்து "மாசு படாத உமது சிந்தை இவ்வளவு நோவு படும்படியும், நீர் மடத்தையே இடித்துத் தரைமட்டமாக்கவும் அப்படி என்ன நிகழ்ந்துவிட்டது?" என்று பரிவோடு வினவினர். அருளாளப்பெருமாள் எம்பெருமானார் கூப்பிய கரத்தராய்க் குழைந்து விம்மும் சொல்லராய்,

"என் உயிருக்குத் தலைவா கேள்
இற்றை நாளின் காலையிலே
மன்னும் வடபால் திருநதிக்கு
விடைகொள் பொழுதில் வழிஎதிரே
உன்னைத் தேடிச் சிலர்வந்தார்
உரைத்தார் இரண்டெம் பெருமானர்
பன்னப் பட்ட இருவர்களில்
பகரும் பூதூர் நகர்வள்ளல்

இடத்தைக் காட்டும் எமக்கென்றார்,
என்னை ஆண்டீர்க்கு இணையோயான்
திடத்தைக் கொடுக்கும் ஆண்பாலைப்
பொசிப்ப வீடினும் தீஅரவு
விடத்தைக் கொடுத்தல் போலன்றோ
வினையேன் அறிந்தது அத்திறத்தான்
மடத்தை இடித்தது இனிஎன்றும்
மாசிலாய் நின்சன் னிதியில்

இருந்து வினையேற் கடுத்ததொழில்
இயற்றி வாழ்வேன் அதுவல்லால்
பொருந்து கில்லேன் வேறிருத்தல்
புனித! என்னத் திருவடியில்
திருந்த இறைஞ்சி"

ஸ்வாமி! இவ்வாத்மா அநாதிகாலம் தேவரீர் திருவடிகளை அகன்று அல்லல் பட்டது போதாதென்றோ இப்போதும் அடியேன் தேவரீரை அகன்று கிடக்கத் திருவுள்ளம் பற்றினது! என்று மிகவும் மனம் நொந்து கூறினர். உடையவரும் அவரை மிகவும் தேற்றி இனி நாம் செய்ய அடுப்பது என்? என்ன, அருளாளரும் "நின் தாளிணைக்கீழ்வாழ்ச்சி யான் சேரும் வகைஅருளாய்" என்கிறபடியே தேவரீருடைய திருவடிநிழலிலேயே அடியேனை வைத்துக்கொண்டு நித்திய கைங்கர்யம் கொள்ள வேணுமென்று விண்ணப்பித்தார். உடையவரும் 'அஞ்சாதீர்' என்று அவரை அணைத்துக் கணநேரமும் தம்மைப் பிரியாதிருக்கும்படி வைத்துக் கொண்டார். அருளாளரும், ஞானசாரம் பிரமேயசாரம் என இரு அரிய நூல்களியற்றி உடையவரை உகப்பித்திருந்தார்.

அப்பால் உடையவர், கோஷ்டிப்பெருக்குக்கு ஸ்ரீ பகவத் விஷயம் (திருவாய்மொழி அர்த்தம்) அருளிக்கொண்டிருந்தார். அதிலே 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி' என்ற திருவாய்மொழிக்கு அர்த்தம் சொல்லுகையில் இரண்டாம் பாட்டான 'எந்தை தந்தை' என்ற பாட்டில் 'சிந்து பூ மகிழும் திருவேங்கடம்' என்கிற இடம் வந்ததும், உடையவர் திருவுள்ளத்திலே திருமலையிலே பெருமாளுக்கு ஏராளமான பூக்கள் சாத்துகைக்கு வசதியாக ஒரு திருநந்தவனம் அமைக்கவேண்டும் என்ற நினைவு உதயமாயிற்று. அன்றிரவில் அவர் நல்ல

தித்திரையில் இருக்கையில் அவர் கன வில் திருவேங்கடமுடையான் தோன்றி உடையவரே! திருமலையில் நாம் மிகவும் திருவுள்ளம் நொந்திருக்கிறோம். அதனை நீர் போக்க வேண்டும்'' என்றருளினார். உடையவர் பதறி எழுந்து பெருமானை வணங்கி 'ஐயனே! உமது திருவுள்ளத் தையும் நோவுபடுத்துவார் உண்டா? படுத்தத்தான் இயலுமா? அடியேன் செய்ய வேண்டியது யாது? நியமித்தருள வேண்டும்'' என்று பிரார்த்திக்க, பெரு மாளும் இளநகையனாய் 'உடையவரே! நானும் தினமும் பார்க்கிறேன். தம் முன் வினையால் குருடாய், முடமாய், கூனாய், மலடாய், ஊமையாய் பிறந்தவர்களும், வாழ் வில் குறை பட்டவர்களுமே பல்லாயிரக் கணக்கில் வந்து என்னைப் பூசித்துத் தம் குறைகளை நான் போக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். நானும் செய்து கொண்டே வருகிறேன். எனி னும் என் உள்ளத்திலே "நம்மை மட்டும் நாடி, வேறு ஒரு குறை இரவாதவனாய் ஒருவனாவது வரமாட்டானா?'' என்று படுகிறது.

"இல்லாப் பொருளைத் தருதி என எடுத்த
மலர்கள் தொடுத்த தொடர்
பல்லாயிரங்கள் எனக்களித்துப் பகலும்
இரவும் இரந்தென்னைக்
கொல்லா நின்றார். அதை மாற்றிக் கோதி
லாத குணத்தினனாய்
எல்லாப் பொருளும் உடையவனாய் யாதும்
எனை வேண்டாதவனாய்''
"ஒருவன் உண்டேல் வரவிடுதி......''

உம்முடைய சீடர்களிலே அப்படி ஒருவ னிருந்தால் அவனை நம்பால் நம் மனம் மகிழ அனுப்பிவையும்'' எனக்கூறி மறைந்தார்.

மறுநாள் திருவாய்மொழி அர்த்தம் கூறு கையில் உடையவர் திருவுள்ளத்மத, அவரது உள்ளக்கிடக்கையும், பெருமாள் முன்னிரவில் கனவில் சொன்ன கட்டளை யும் சேர்ந்து ஓடின. தம் சீடருள்ளே அப்படி ஒருவர் யார் என்று ஆய்ந்து தாம் ஒரு முடிவுக்கு வந்து கொண்டார். எனி னும் தம்முடிவு சரியா என்று ஆராய நினைந்து, சிஷ்ய கோடிகளைப் பார்த்துத் தம் விருப்பையும், இறைவன் விருப்பை யும் கூறி இவ்விரு விருப்பையும் நிறை வேற்றும் துணிவுடையார் யாரேனும் உங்களில் உண்டா என வினவிச் சிஷ்ய கோடியைச் சுற்றித் தம் திருநோக்கை வீசினார். அவர் நோக்கு அனந்தாழ்வான் மேற்படலுமே அனந்தாழ்வான் சடக் கென எழுந்து கைகூப்பி "அடியேன் விடைகொள்கிறேன்'' என்றுகூறி உடை யவரை வணங்கி விடைகொண்டு தம் மனையாளுடன் திருமலைக்குப் பயண மானார்.

போனவர் நேரே திருவேங்கடமுடை யானை வணங்கித் திருநந்தவனம் அமைக்கத் தக்கவிடம் தேடிப் பெற்றுக் கொண்டார். காடாக இருந்த அந்த இடத்தை முதலில் மரங்கள் செடிகளை வெட்டிக் காலி செய்தார். தரை ஒரே மேடும் பள்ளமுமாய் இருந்ததைச் சமன் செய்ய முனைந்தார். வேறு துணையின் மையின் அவரும் அவர் மனைவியுமே அத் தொழிலில் ஈடுபடலாயினர். மேடுகளை அனந்தாழ்வான் வெட்டி, வெட்டிக் கழிக் கிற மண்ணைக் கூடையிலிட்டு, மனைவி தலையிலேற்ற அந்த அம்மையார் அதனைக் குழிகளுள்ளவிடத்தே கொண்டுபோய்க் கொட்டி வந்தார். தினமும் இவ்விதமே நடந்து வந்தது. அவ்வம்மையார் அப் போது எட்டுமாதக் கர்ப்பிணி, உள்ளே சுமையோடும் வெளியே சுமையோடும் அவள் கொஞ்சமும் முகச்சுளிவின்றி மண் கூடையைச் சுமந்தாள். என்னதான் அவள் மனோதிடத்துடன் உழைத்தாலும்

இயற்கை அதன் செயலைக்காட்டத்தானே செய்யும். ஒருநாள்.

"வருவாளந்த மயிலனையாள் வயிற்றில்
  கனத்தால் தலைச்சுமையால்
ஒருநாள் இளைத்துக் கூடையொடும்
  ஓயும் பரிசை உற நோக்கித்
திருமா மகளார் தனிக்கேள்வன் பிதாம்பரம்
  சேர்திரு வரையின்
மருவாக் கட்டு கச்சையொடோர் மனுவாய்
  வயதும் ஈரைந்தாய்.

ஒட்டர் குலத்தில் உதித்தவன்போல் ஓங்கு
  நெறிசேர் அனந்தாழ்வான்
கட்டியடிக்கும் வெளிப்படில். அக்கமலை
  யனையாள் உறுவருத்தம்
மட்டுமதியும் இலை அந்தோ என்ன வந்து
  மாதின் எதிர்ப்
பட்டங்கனந்தன் விழிகளின் நேர்படாது
  மறைந்து ஓர் பழுவத்தில்

நின்று, கூடைதனை வாங்கி, நிகரில்
  ஒளிசேர் நீண்முடியில்
அன்று தாங்கிக்கொடு போய்ப்போட்டு
  அவள்பால் மீண்டும் அதுகொடுத்து
மன்றல் கமழும் துழாய் முடியான் நிற்ப
  அந்த மயிலனையாள் சென்றாள்
      விரைவில்".

இறைவன் பார்த்தான். அவள் துயரை நீக்க ஒரு ஒட்டக்குலச் சிறுவன் போன்று அவள் முன்தோன்றி "அம்மையே! மிகவும் வருந்துகிறீர்கள். நான் போய்க்கேட்டால் உங்கள் கணவர் கூடையை என்னிடம் தாரார். நான் இங்கே மறைவிலிருக்கிறேன். தாங்கள் அவரிடம் கூடையை வாங்கி என்னிடம் கொடுங்கள். நான் ஒரு நொடியில் பள்ளத்தில் கொட்டி வருகிறேன்" என்றுகூற அவ்வம்மையாரும் இதுவும் அவனருள் தான் என்று கூடையை அவனிடம் கொடுக்க அவனும் கணத்திலே மண்ணைக் கொட்டி வந்து வெறும் கூடையை அவளிடம் கொடுக்க வேலை வெகு விரைவிலே நடந்தது. மண் போடவேண்டிய பள்ளம் தொலைவாயிருக்கத் தம் மனைவியார் விரைவிலே வெறுங் கூடையோடு வருவதைக் கவனித்த அனந்தாழ்வான் இவள் மண்ணைப் பள்ளங்களிலன்றி, தன் சிரமமிகுதியால் அருகிலேயே கொட்டி வருகின்றாளோ என ஐயுற்று இவளை நோக்கி 'நீ மண்ணை அருகிலேயே கொட்டி வருகிறாயா? எப்படி இவ்வளவு தூரமுள்ள பள்ளத்துக்குப்போய் இவ்வளவு விரைவில் உன்னால் வரமுடிகிறது' என்று கேட்டார். அவள் உண்மையை சிறிதும் ஒளிக்காமல்,

"மறுவறு மனத்தினனே வழியிடை
  எதிரே வந்தே
சிறுபயல் ஒருவன் ஒட்டர் சென்மமே
  தோன்றி நின்றான்
விறுவிறென்றோடி வந்து மேவும் என்
  இளைப்பை நோக்கித்
துறுமயிர்த்தலைமேல் கூடை துண்ணென
  வாங்கி வைத்தே"
"போட்டு மீண்டென்பால் கூடை
  பொருக்கெனத் தந்தான் என்றாள்"

கேட்ட அனந்தாழ்வான் மிகவும் மனம் நொந்து அவளைப் பார்த்து, 'அடி! அறியாப் பெண்ணே! நீ என்ன காரியம் செய்தாய். அந்தப் பையன் உன்னிடம் பரிவுள்ளவன்போல் காட்டி நம்முடைய கைங்கர்யத்தையல்லவா கொள்ளை யிடுகிறான். கிடைத்தற்கரியபேறாக பரமாசார்ய ப்ரஸாதமாகக் கிடைத்த இந்தக் கைங்கர்யத்தை ஒருவன் கொள்ளை யிடுவதா? எங்கே அவனைக் காட்டு" என்று கூறி அவன் தலையில் ஒரு மண்கூடையையும் ஏற்றி அவளை முன்னே செல்லவிட்டு, தான் பின்னே கொட்டும் கையுமாக மறைவிற் போனார். (தொடரும்)

# இறைவனின் இருப்பிடங்கள்

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்,
சிறுதையூர் லால்குடி.

**சிவாசனம்**

அங்கு இங்கு எனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவர் கடவுள். பேரறிவுப் பிழம்பாகிய இறைவனுக்குப் படைத்தல் - காத்தல் - அழித்தல் - மறைத்தல் - அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்வதற்கெனத் தங்குவதற்கு இருப்பிடமுண்டு. அதுதான் உலகம். நாம் காணுகின்ற மண்ணுலகு மட்டுமல்ல.

> "ஏய்ந்தமுறை மந்திரங்கள்
> பதினென்று; பதங்கள்
> எண்பத்தொன்று; அக்கரங்கள்
> ஐம்பத்தொன்ருகும்;
> ஆய்ந்தபுரம் இருநூற்ருேடு
> இருபத்து நாலாம்;
> அழிதருதத் துவம்முப்பத்து
> ஆறு; கலை ஐந்தே"
>
> —சித்தியார், 261.

என்றதற்கு ஏற்ப, இவ்வுலகில் வாழும் எண்ணிலாத உயிர்களும், ஐந்து கலைகளும், முப்பத்தாறு தத்துவங்களும், இருநூற்று இருபத்துநான்கு புவனங்களும் பற்பல மொழிகளுமாக அடங்கிய பெரியதோர் உலக்மாகும். சிவபெருமான் இப்பெரிய உலகத்தையே இருப்பிடமாக- ஆசனமாகக்கொண்டு அதன் மீது வீற்றிருக்கின்ருர். இத்தகைய இறைவனின் இருப்பிடத்தைச் "சிவாசனம்" என்று ஆகமங்கள் மிகச் சுருக்கமாகக் குறிக்கின்றன.

> ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
> மேனிஐந் தரக வியாத்தமுப் பத்தாருய்த்
> தானந்த மில்லாத தத்துவ மானவை
> ஏனமிலா அண்டத் தெண்மடங் காமே.

என்பது தமிழாகமம் ஆகிய திருமூலர் அருளிய திரு மந்திரம்.

சதாசிவ ரூபம் என்னுந் தமிழ் நூலிலும் சிவாசனங் குறித்த தெளிவான பொருள்களைக் காணலாம்.

> " மேதினி யில்உயர் வித்தை வியாத்தி
> ஆன சக்தி மண்டலம் அளவாய்த்
> தீயன இலாத சிவாசன மாகும்;
> தடமலி சாதாக் கியமுதற் சமனை
> முடிவா கச்சிவ மூர்த்திய தாகும்;
> தரைமுதல் உன்மனை அளவும் நிலாவிய
> பரைசிவன் பூரண மூலம் எனப்படும் "
>
> —சதாசிவ ரூபம்.

இதன் கருத்து :—பூமிக்குமேல் சுத்த வித்தியா தத்துவத்தின் வியாப்தியான சக்தி மண்டலம் அளவான சுத்தஸ்தானமே சிவாசனமாகும். சாதாக்கிய தத்துவத்தி லிருந்து சமனை முடிவாக வுள்ளதே சிவமூர்த்தியாகும். நிலத்திலிருந்து உன்மனு கலைவரை பராசக்தி மண்டலத்தில் பரிபூரணமாக அமர்ந்திருக்கும் சிவமே மூலம் எனப்படும்.

சமனை என்ருல் மனத்தோடு கூடியது என்று பொருள். உன்மனை என்பது மனமிறந்த சுத்த நிலை. பாச பந்தங்களை விட்டு இறைவனை நோக்கி மனம் எவ்வளவு மேலே உயர்கின்றதோ அம்மன உயர்வின் எல்லையில் சிவானந்தவடிவை- சிவ மூர்த்தியைத் தரிசிக்கலாம். மனத்திற்கும் அப்பாற்பட்ட, அதீத நிலையே சிவ மூலம் ஆகும். சைவ சித்தாந்த தத்துவங்களின் படிமுறைகளை நன் குணர்ந்

தால்தான் எல்லாம் வல்ல இறைவனின் வியாப்தி - (நிறைவு) வியாபகங்களை விதித்தபடி அறிய முடியும்.

"சிவ பரஞ்சுடரின் வியாப்தி-வியாபக பாவனையினுலே தத்துவங்களை அறிந்து வழி பாட்டைத் தொடங்குவாயாக!" என்று காரணுகமம் கட்டளையிடுகின்றது.

"வியாப்தி வியாபக பாவேந
ஞாத்வா யஜன மாரபேத்"

—சிவாசனவிதி.

எனவே சிவ வடிவங்களைப் பூஜை செய்பவர்கள் சிவாசனம் சிவமூர்த்தி-மூர்த்திமான் இவைகளை நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசிய மாகும். "ஐந்து சுத்தி செய்து ஆசனம் மூர்த்தி மூர்த்திமானும் சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த பத்தியினுல் அருச்சித்துப் பரவிப் போற்றி" என்பது சிவஞான சித்தியார்.

இங்குக் கூறியதிலிருந்து உலகமே இறைவனின் இருப்பிட மென்றும்-பிராசாத முறைப்படி ஆன்மா தூய மனத்தோடு கூடிய சமனுகலையி லிருந்து சிவ மூர்த்தியைக்காண இயலும் என்றும், மனம் செல்ல முடியாத உன்மனு கலை என்ற அதீத நிலையில் சராசரங்களுக்கும் அப்பாற்பட்டு இறைவன் சச்சிதானந்த மயமாய்த் திகழுவதே 'சிவமூலம்' என்றும், சிவாசனம்-சிவ மூர்த்தி-சிவ மூலம் பற்றி எடுத்துக்காட்டப் பெற்றது.

**சக்தி வடிவம்**

இறைவ னிருப்பிடம் இன்னதென அறிந்தோம். இனி அதீத நிலையிலுள்ள இறைவன் சிற்றறிவுடைய நம்மனோர்க்காக, சராசரங்களிலெல்லாம் கலந்து நின்று அருள் பாலிப்பதையு முணரலாம். இறைவன் பேரறிவும் பேராற்றலு முள்ளவர். உயிர்களுக்காகச் சிவன் தன் பேரறிவையும் பேராற்றலையும் வெளிப்படுத்தவேண்டுமாயின், வடிவத்தின் வாயிலாக வெளியிட்டால்தான் உயிர்களால் உணர இயலும். எனவே இறைவன் சக்தியையே தமது வடிவமாகக்கொண்டு சராசரங்கள் இயங்கும்படி பிரபஞ்சம் முழுதும் மறைய நின்றுள்ளான். இறைவன் சராசரங்களில் வியாபித்திருப்பதனுல் தான் சக்தி தூண்டப்பெற்று உலகம் விரிவடைகின்றது. இப் பிரபஞ்ச மெங்கும் நிறைந்துள்ள உயிர்களுக்குச் சக்தி அம்மையாகவும், சிவன் அப்பனுகவு மிருந்து சுத்த மார்க்கத்தைக் காட்டுகின்றனர். ஆகமங்கள் இப்பிரபஞ்சத்தைச் சக்தி வடிவம் என்றும், அச்சக்தியை ப்ரேரிப்பவர் சிவபெருமானே என்றும் கூறுகின்றன.

சிவ சக்தியின் துணையில்லாது இவ்வுலகம் நிலைத்து நிற்க இயலாது. மிக நுண்ணிய அணுவைப்போன்ற ஆலம் வித்திலிருந்து பற்பல கிளைகளும்- இலைகளும்-காய்களும்-கனிகளுமாகப் படர்ந்த மிகப்பெரிய ஆலமரம் தோன்றுவது போல், இறைவன் தன் சக்தியாகிய பேராற்றலினுல் உயிர்களுக்குத் தூய வழி வகைகளை அமைத்துத் தந்துள்ளார். இன்னல்களுக்கு இருப்பிடமான அஞ்ஞான இருட்டிலிருந்து விடுபட்டு இவ்வுலக மெங்கும் கலந்துள்ள இறைவனை நாடவேண்டும், என்பதே ஞானநூல்கள் நமக்கு உணர்த்தும் கருத்தாகும்.

"படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே.

—திருமந்திரம் 2009.

அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி ஈசனவன் எங்கு மாகித்
தணிவற நின்றுன் சராசரந் தானே.

—திருமந்திரம் 2010.

நம் நாட்டில் சரா சரங்களையும் இறைவனிருப்பிடமாகக் கருதி அவைகட் கறிகுறியான பொருள்களை வணங்கி வழி படும் வழக்கம் மிகத் தொன்மையானது. சங்கமங்களாகிய ஆசாரியர்-அருட்குரு-சிவனடியார்கள் - அந்தணர் - துறவிகள் முதலிய பெரியோர்களையும், பசு—அரசமரம் முதலிய பகுத்தறிவற்ற உயிரினங்களையும், விக்கிரகங்கள் - மண்டலம் - பூமி - நீர் - நெருப்பு - ஆகாயம் ஆகிய ஜடப்பொருள் களையும், இறைவனைப் பாவித்து வணங்கி வழிபடுவதை இன்றுங் காணலாம்.

## அஷ்டமூர்த்தி

இத்திரு நாமம் சிவபெருமானுக்குரியது. நிலம்-நீர்-நெருப்பு-காற்று-வானம்-சூரியன்-சந்திரன்- ஆன்மா ஆகிய இவ் வெட்டும் இறைவனுக்கு உடம்பாம். மூர்த்தி-உடம்பு: இறைவன் உலகுக்கு உயிரா யிருப்பதை இத் திருநாமம் குறிக்கின்றது. இறைவன் அஷ்ட மூர்த்தியாக விளங்குதலை,

நிலம்நீர் நெருப்புஉயிர் காற்று
நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனொடு
எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழ் எனத் திசை
பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா
தோள்நோக்கம் ஆடாமோ.

எனவரும் திருவாசகம் முதலிய திருப்பாடல் களால் உணரலாம்.

அஷ்ட மூர்த்தங்களுக்குமுரிய சிவ வழி பாடுகள் ஆலயங்களில் நடை பெறுகின்றன. விக்கிரக வழிபாடுகள், புண்ணிய நதிகளின் நீர் நிரம்பிய பூர்ண கும்ப பூஜைகள், ஓம குண்டங்களில் அக்னியை வளர்த்து வழி படுதல் ஆகியவை, பஞ்ச பூதங்களில் நிலம்-நீர்-நெருப்பு இவைகளைச் சேருகின்றன. காற்றுக்கும் வானத்திற்கும் உருவமில்லை. இவ்வழிபாடு அருவமாகச் செய்யப்படவேண்டும். சூரிய சந்திரர்களுக்கும் ஆலயங்களில் பூஜைகள் உண்டு. சிவாச்சாரியர்-அர்ச்சகர்-அடியார்கள் ஆகியவர்களை வணங்கி வழிபடுவதே ஆன்ம பூசையாகும். இவ்வாறாக, திருக்கோயில்களிலும் சைவ சமயத்திலும் அஷ்ட மூர்த்தங்களுக்கும் அறிகுறியான பொருள்களில் வழிபாடுகள் செய்ய விதிக்கப்பட்டுள்ளன. எனவே அஷ்ட மூர்த்தியும் இறைவனிருப்பிடம் ஆகும்.

## அறிவுடையோர் நெஞ்சம்

இதுகாறுங் கண்ட இருப்பிடங்களை விட அறிவுடையோர் நெஞ்சங்களிலேயே இறைவன் எப்போதும் விருப்புடன் தங்கி நிற்கின்றான். அவர்களைப் போற்றிப் புகழ்ந்து வழி பட்டால் அதுவும் எல்லாம் வல்ல இறைவனையே சேரும். எனவே அறிவுடைய பெரியோர்கள் ஆகிய அடியார்களையும் ஆசார்யர்களையும் அன்புசெய்து வழிபடுதலும், இறை வழிபாடு ஆகும். இலிங்க வழிபாட்டைப் போலவே, ஜங்கம வழிபாடும், குரு வழிபாடும் நூல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. எனவே குரு-லிங்கம்-ஜங்கமம் என்னும் மூன்றையும் இறைவனின் இருப்பிடங்கள் என்று உணர்ந்து, நாம் வழிபட்டு நலம் பெறுவோமாக!

அறிவுடையார் நெஞ்சு அகலிடம் ஆவது
அறிவுடையார் நெஞ்சு அருந்தவம் ஆவது
அறிவுடையார் நெஞ்சோடு ஆதிப் பிரானும்
அறிவுடையார் நெஞ்சத்து அடங்கிநின் றானே

ஆலயம் வாழ்க! அடியார் வாழ்க!
ஆசார்யர் வாழ்க!

# கீதா ஸாரம்

காரப்பங்காடு ஸ்ரீ வேங்கடாசார்ய சுவாமிகள், மயிலாப்பூர்.

## அர்ஜ்ஜுனன் நிலை (3)

ஸ்ரீ பார்த்தஸாரதி அருளிச்செய்த கீதா சாஸ்திரத்தில் முதல் அத்தியாயத்தின் முற்பகுதியில் கூறப்பெற்றிருக்கும் துரியோதனன் நிலையைக் கண்டோம். இனி, அவ்வத்தியாயத்தின் பிற்பகுதியிலும், இரண்டாம் அத்தியாயத்தின் முதல் ஒன்பது சுலோகங்களிலும் கூறப்பெற்றிருக்கும் அர்ஜ்ஜுனன் நிலையைக் காண்போம்.

அர்ஜ்ஜுனன் நிலையை ஆளவந்தார்,

"அஸ்தாந ஸ்நேஹ காருண்ய
தர்மாதர்மப(தி)யாகுலம் ।
பார்த்தம் ப்ரபந்நம் உத்திச்ய
சாஸ்த்ராவதரணம் க்ருதம் ॥

என்னும் சுலோகம் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

இச்சுலோகத்தின் கருத்து :

"தகுதியற்ற இடத்தில் உண்டான அன்பு, தயை இவற்றாலும், தருமத்திலே இது அதருமம் என்கிற எண்ணத்தினால் உண்டான அச்சத்தினாலும் கலக்க முற்றவனும், கண்ணன் கழலிணையைப் பற்றினவனுமான அர்ஜ்ஜுனனைக் குறித்து, ஹிதோப தேசத்தின் தொடக்கம் செய்யப்பெற்றது" என்பது.

நம் ஸ்வாமி ஸ்ரீராமாநுஜர், மேற்கூறிய சுலோகத்தில், 'தர்மாதர்ம பயாகுலம்' 'தர்மாதர்ம தியாகுலம்' என்னும் இரண்டு பாடங்களையும் ஆதரித்து, கருத்துப்பொருள் கூறியிருக்கிறார்.

(1) இங்கு, "ஸது பார்த்தோ மஹாமநா: பரமகாருணிக: தீர்க்கபந்து: பரமதார்மிக: ஸப்ராத்ருக: பவத்பி: அதிகோனர: மாரணை: ஜதுக்ருஹ தாஹாதிபி: அஸக்ருத் வஞ்சித: அபிபரம புருஷ ஸஹாயேந ஆத்மநா ஹநிஷ்யமாணாந் பவதீயாந் விலோக்ய பந்து ஸ்நேஹேந பரயா க்ருபயா தர்மாதர்ம பயேந ச அதிமாத்ர ஸந்ந ஸர்வ காத்ர: ஸர்வதா அஹம் ந யோத்ஸ்யாமி இத்யுக்த்வா பந்து விச்லேஷ ஜநித சோக ஸம்விக்நமா நஸஸ்ஸசரம் சாபம் விஸ்ருஜ்ய ரதோபஸ்த உபாவிசத் ॥"

இத்திருவாக்கு முதல் அத்தியாயத்தின் முடிவில் உள்ளது.

(2) ஏவம் அஸ்த்தான ஸமுபஸ்தித ஸ்நேஹ காருண்யாப் யாம் அப்ரக்ருதிம் கதம் க்ஷத்ரியாணும் யுத்தம் பர்மதர்மம பயதர்மம் மங்வாநம் தர்மபுபுத்ஸயாச சரணகதம் பார்த்தம் உத்திச்ய...பகவதா பரம புருஷேண அத்யாத்ம சாஸ்த்ராவதரணம் க்ருதம் ததுக்தம்.

"அஸ்தாந ஸ்நேஹ
காருண்ய தர்மாதர்மதியாகுலம் ।
பார்த்தம் ப்ரபந்ந முத்திச்ய
சாஸ்த்ராவதரணம் க்ருதம் ॥"

மேற்கூறிய திருவாக்கு இரண்டாம் அத்தியாயம் ஒன்பதாவது சுலோகத்தின் கீதாபாஷ்ய வியாக்யானத்தில் அமைந்துள்ளது.

இவ்விரு வகையில் உள்ள திருவாக்குகளையும் காண்பாருக்கு, ஸ்ரீ ராமாநுஜரால் 'தர்மாதர்ம பயாகுலம்', 'தர்மாதர்ம தியாகுலம்' என்னும் இரண்டு பாடங்களும் நன்கு ஆதரிக்கப்பட்டுள்ளவை என்பது விளங்கும்.

மேற்கூறிய இருவகையில் உள்ள ஸ்வாமி ஸ்ரீ ராமாநுஜருடைய திருவாக்குகளும் அர்ஜ்ஜுனன் நிலையைக்கூறும் ஆளவந்தார் அருளிச்செய்த "அஸ்த்தான ஸ்நேஹ காருண்ய......" என்னும் சுலோகத்தின் கருத்தும் பொருளை ஒருவாறு கூறுகின்றவை யாதலின், அத்திருவாக்குகள் இரண்டையும் சிறிது விரித்துக்கூறி, அச்சுலோகத்தின் கருத்தை விளக்குவோம்.

1. ஸ்ரீராமாநுஜர், அர்ஜ்ஜுனனே முன்னம் கூறிய துரியோதனனிலும் பல குணங்களோடு கூடி இருக்கின்றமையில், சிறப்புடையன் என அவ்வர்ஜ்ஜுனனின் வேற்றுமையைத் தெரிவிக்கிறார், ஸதுபார்த்த: என்று. துரியோத

னன் முதலானோர் உண்மையில் உறவினர் அல்வர்; உறவினர் என்னும் சொல்லால் மாத்திரம் கூறத்தகுந்தவர். இங்ஙனம் இருக்கும் அவர்களைக் கொல்வதில் சிறிதும் விருப்பமின்றி, வெற்றி முதலியவற்றை த்ருணமாக எண்ணினவன். ஆதலின், 'மஹாமநா:' (பெரிய மனதை உடையவன்) என்கிறார். துரியோதனன் முதலானோரான சத்ருக்களின் துன்பத்தைப் பொறுக்காதவனாய் இருத்தலின், 'பரமகாருணிக:' (மிகுந்ததயை உடையவன்) என்று அருளிச் செய்கிறார். மேற்கூறிய துரியோதனன் முதலிய உறவினரால் பெரிய அபகாரம் செய்யப்பட்டிருந்த போதிலும், தான் அவ்வுறவினரிடத்தில் உறவை விடாமையின், 'தீர்க்கபந்து:' என்று கொண்டாடிச் சொல்லுகிறார். குலம் அழிவதால் உண்டாகும் அதருமங்களை நன்கு கண்டு விலகுவதால், 'பரமதார்மிக:' என்று புகழ்ந்து பேசுகிறார்.

இங்ஙனம், பல சிறந்த குணங்கள் உடையனும், உடன் பிறந்தவர்களோடு கூடியவனுமான அந்த அர்ஜ்ஜுனன், மிகவும் துன்பத்தை உண்டு பண்ணுகின்றனவும், மரணத்தைக் கொடுக்கின்றனவுமான அரக்குமாளிகை கொளுத்துதல் முதலிய செயல்களால் பல தடவைகளில் உங்களால்(துரியோதனாதிகளால்) மோசம் செய்யப்பட்டவன். இங்ஙனம் இருந்த போதிலும், ஸ்ரீ பார்த்தசாரதியை ஸஹாயமாகக் கொண்டிருக்கும் தன்னால் கொல்லப்படப்போகின்ற உன்னைச் சேர்ந்தவர்களை (துரியோதனன் முதலானோரை)ப் பார்த்து, உறவினர் பக்கல் ப்ரீதியினாலும், தருமத்தை அதருமமாக நினைத்ததனால் உண்டான அச்சத்தினாலும், மிகவும் ஒடுங்கின எல்லா உறுப்புக்களையும் உடையவனாய் 'நான் எவ்விதத்திலும் போர் புரியப் போவதில்லை' என்று கூறி, உறவினரின் பிரிவால் உண்டான துன்பத்தினால் மிகவும் சலித்த (போர் புரிதல் வேண்டும் என்னும்) உறுதியை உடையவனாய் அம்புகளோடு கூடிய வில்லைப் போட்டுவிட்டு, தேர்த்தட்டில் உட்கார்ந்தான்—என்பதை ஸப்ராத்ருக: பவத்பி:... ரதோபஸ்த உபாவிசத் என்னும் பகுதியினால் வெளியிட்டிருக்கிறார்.

மேற்கூறிய ஸ்ரீராமாநுஜர் திருவாக்கின் கருத்தைக் காண்பாருக்கு, ஓர் ஐயம் எழக் கூடும். "அர்ஜ்ஜுனன் சிறந்த குணங்கள் உடையவனா? அல்லது. குணங்கள் அற்றவனா?" என்பதே அவ்ஐயமாம்.

'மஹாமநா:', 'பரமகாருணிக:', 'தீர்க்கபந்து:', 'பரமதார்மிக:' என்னும் அடைமொழிகளால் அர்ஜ்ஜுனனின் சிறந்த குணங்களையே வெளியிட்டிருக்கிறார். அதனால், 'குணங்கள் நிரம்பியிருப்பவன் அர்ஜ்ஜுனன்' என்பது தெளிவு. "அஸ்த்தாந ஸ்நேஹ காருண்ய தர்ம பியாகுலம்" என்னும் ஆளவந்தார் திருவாக்கின் கருத்தை விவரிக்கும், "பந்துஸ்நேஹேந பரயாக்ருபயா தர்மாதர்ம பயேந ச அதிமாத்ர ஸந்ந ஸாவகாத்ர:" என்னும் (ஸ்ரீ ராமாநுஜர் திருவாக்கில் அமைந்துள்ள) பகுதியைக் காணுங்கால், குணஹீனன் என்று தெரிகிறது. இதை உதாரணத்தைக் காட்டிச் சிறிது விரித்துக் கூறுவோம்.

(தொடரும்)

---

(480-வது பக்கத் தொடர்ச்சி)

அங்ஙனம் இருந்தும், அவர் மேலே கூறியவாறு இரண்டு வரிகளைப் பாடியுள்ளார். அவர் அங்ஙனம் கூறச்சான்று யாது?

கயிலாசநாதர் கோவில் கி. பி. 685-705க்குள் கட்டப்பட்டது. இரண்டாம் நந்திவர்ம பல்லவனை (கி.பி. 710-775) முறியடித்த சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சியில் கயிலாசநாதர் கோவிலைப் பார்வையிட்டான்; அதன் பெருஞ்செல்வத்தைக் கண்டு வியந்தான்; அச்செல்வத்தை அக்கோவிலுக்கே அளித்து மீண்டான் என்று அவனுடைய கேந்தூர்ப்பட்டயம் கூறுகிறது.7 இச்செய்தியையே கயிலாசநாதர் கோவிலில் உள்ள அவ்விக்கிரமாதித்தனது கன்னடக் கல்வெட்டு ஒன்றும் கூறுகிறது.8

சேக்கிழார் இவ்விரு கல்வெட்டுக்களையும் படித்துணர்ந்த பின்பே மேலே கூறப்பட்ட இரண்டு வரிகளைப் பாடினார் என்று கோடல் பொருத்தமாகும்.

7 Epigraphia Indica, vol. 9, p. 205.
8 Epigraphia Indica, vol. 3. p. 359.

# திருமலையப்பன் திருப்பள்ளி எழுச்சி

வித்துவான் திரு கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியார், பொலாரம், டெக்கான், ஆந்திரா.

கிளரொளிக் கதிரவன் கீழ்த்திசை யணைந்தான்
கீண்டது கனையிருள் காலையம் பொழுதாய்
வளரொளிக் கோசலை மனமகிழ் இராமா
வான்வலிச் சீயமாய்க் கண்வளர் செல்வா
அளிமிகு தெய்வதம் போற்றிடும் பொழுதால்
ஆற்றிடு கடனெலாம் வழங்கிடல் வழக்கால்
அளிமுரல் மலர்விரி திருமலை யதன்மேல்
அமர்தரு பள்ளிநின் றெழுந்தரு ளாயே. (1)

தூமலர்க் கண்ணிணை துயிலெழா விடில் நீ
தொல்லுல கெங்கணுந் துயரெலாம் நீங்கா
மாமறை முதலினை யொலிதரு குரலோன்
வலமிகு கருடனுங் கொடியினை யுடையாய்
மாமலர்க் கொடிமனம் கவர்தரு கோனே
மங்களம் நிறைதர மனங்கொள வேண்டும்.
மாமழை யதிர்தரும் திருமலை யதன்மேல்
மாதவ பள்ளிநின் றெழுந்தரு ளாயே. (2)

வளரெழில் மிகுதியால் வாளராத் துயில்வோன்
மனங்கவர் மடக்கொடி மாதவன் மார்பில்
களிகொள நடம்புரி கமலமென் செல்வி,
கவினெலாந் திரண்டெழு காரிகை யாவாய்,
அளிமுரல் துளவநற் றொடையலாய் உளத்தே
யாட்சிசெய் யணங்கு நீ யென்பதை யறிவோம்
துளிநறுக் கமழ்தரு திருமலைத் தாயே
துன்பொழிந் தின்புற வெழுந்தரு ளாயே (3)

குளிர்தரு தாமரை மலரெனும் விழியாய்
குறைவிலாத் தண்மதி புரையுநன் முகத்தாய்
அளிதரு பதத்தினை யடைந்தவ ருளத்தே
யமுதஊற் றெழுந்திட அபயமே யளிப்பாய்
இளிவர லகற்றிடுந் திருமலை யையன்
இதயமே இருத்திய தறிந்தனர் சசியும்
ஒளிதரு கலைமகள் மலைமகள் முதலோர்
உவப்புடன் அருள்செய வெழுந்தரு ளாயே.(4)

அத்திரி முதலினோர் அருந்தவ முனிவர்
ஐந்தொடு மிருவர்கள் அருவிநீர்ப் படிந்தார்
நித்திய பூசனை முடித்தனர் வந்தார்
நியமமும் நேர்மையு முடையவர் தூயர்,
பத்தியின் மறையெலாம் பாடினர் நின்றார்
பதமலர் போற்றுமா விருப்பினர் அவர்தம்,
அத்தகு முளத்தவா நிறைவுற அரவ
அருங்கிரித் தலைவநீ யெழுந்தரு ளாயே. (5)

சிருட்டிசெய் தொழிலினன் ஐந்துளமுகத்தோன்
சேவலாங் கொடியுடை யறுமுகன் வானோர்:,
திருத்தரு தலைவனும் புரந்தரன் முதலோர்
செல்வனே சேவகம் பாடியே நின்றார்,-
உரைத்திடு கலையெலாம் அறிந்தவன் வியாழன்
உறுதினப் பயனெலா மோதின னுள்ளான்
விருப்புட னவர்க்கெலாம் அருள்செய அரவ
அருங்கிரித் தலைவநீ எழுந்தரு ளாயே (6)

புலர்வது பொழுதுமே புனிதமெல் லரும்பும்
புதுமணம் பரப்பியே விரிதரு மழகாய்
விலங்கலாம் பொதியமேற் சந்தன மளைந்தே
விரைநிறைந் துலவுமால் தென்றலு மீண்டே,-
அலங்கலந் துளவணி வரைபுரை மார்பா,
அகலமொடு வழிதரும் விருந்துணும் பொழுதாய்
அலகறும் அமயமி தையனே உனக்காம்
அரவமாங் கிரிமுதல் எழுந்தரு ளாயே (7)

அடியவர் பலர்பலர் உவப்புறக் கேட்டே
அன்புமிக் கூர்ந்தனர் தமைமறந் திருக்கக்,-
கொடியுயர் சந்நிதி மண்டபத் தமைத்த
கோலமார் பஞ்சரப் பைங்கிளி யெல்லாம்
விடிவரைச் சேடமாம் பாயசம் வாழை
விருப்புடன் சுவைத்தன பேருவந் தோதும்
நெடுமுடி யண்ணலே நிகரிலாச் சருப்ப
நீள்வரைத் தலைவனே யெழுந்தரு ளாயே. (8)

ஏழிசை பயில்பவன் சதுமுகன் புதல்வன்
இறைப்பொழு தோரிடம் இருந்திடான்
திரிவோன்,-
யாழிசை யெழுப்பினன் கோயிலின் முன்றில்
யாவரும் வியந்திட மறந்தனன் நின்றான்,-
மாழையொண் கண்ணியர் மண்மகள் பூமிமேல்
மாமகள் திருவடி வருடிடப் பாலார்,-
ஆழியிற் றுயில்தரு பண்பனே அரவாம்
அசலமே லிறைவனே யெழுந்தரு ளாயே. (9)

செங்கதிர்ச் செல்வனு மெழுந்தனன் மலராஞ்
சிறையிடை யிரவெலா மிருந்தன நின்றன்,
பங்கயச் சேவடி காண்பது மின்ருய்ப்
பாயொளிப் பன்னிறக் கமலமும் விரிந்த,-
இங்கித கீதமும் பாடின இன்பம்
எழுதர விரைந்தன சுருப்பின மீண்டே.-
பொங்கிடு சின முறு மரவமாம் வெற்பா
புரிந்திடத் தண்ணளி யெழுந்தரு ளாயே. (10)

மடநலா ராயர்தம் மங்கையர் விடியல்
மறந்திடா ருணர்ந்தன ரெழுந்தனர் தயிரார்.-
மிடவெலாங் கொணர்ந்தனர் கடைதருமோதை
மிதந்தது திசையெலாம் எதிரொலிதோன்றும்,-
அட இது செவிக்குண ராதது மென்னே!
அயர்தரு நித்திரை கலைதர வேண்டும்,-
படமுடைப் பாந்தளாம் வெற்பிடை நின்ருய்
பரிவுடன் விழிமலர்ந் தெழுந்தரு ளாயே. (11)

உன்னிறக் குவளையாங் குவளை நன் மலரை
உறுசின முளத்தெழு சுரும்பது பகைத்தே,
தன்னறு கால்களாற் கிளறியே யுலகில்
தன்னிறப் பொருத்தமே சாற்றிடு மிசைத்தே,-
உன்னுறு கிரியிடை யுறவுகொள் வோருள்
ஓர்பகை மூண்டிட லெம்முறை யாமோ,
அன்னவர்க் கருள்செய லுன்கட னன்ருே
அரவமாங் கிரியிஞய் எழுந்தரு ளாயே. (12)

இதயமாம் மலர்மிசை யிருந்திடு கின்ருேய்
இரந்தவர் மகிழ்ந்திட ஈந்தளித் திடுவோய்
மதுமலர் மடநலாள் இறைப்பொழு தகலாள்
வாழ்தரு மார்புடை யெம்பெரு மானே,
துதிபெறு திருநகர்க் கொருதனி முதலே
துயரறுத் திமையவர்க் கிதந்தரு தேவே,-
கதிதரு கருமமே கருதினை வந்தோய்
கட்செவி வரையிறை யெழுந்தரு ளாயே. (13


## இறைபணியாளர் மாற்றங்கள்

| பெயர் | இருந்த இடம் | மாற்றப்பட்ட இடம் |
| --- | --- | --- |
| திரு. ஜி. பாண்டுரங்கம் | ஸ்ரீ அகஸ்தீசுவரர் தொகுதிக் கோயில்கள், கந்தருவ கோட்டை. | ஸ்ரீ ரேணுகாதேவி அம்மன் கோயில், விஜயபுரம், திருவாரூர். |
| ,, ஆர். கோதண்டராமன் | ஸ்ரீ ரேணுகாதேவி அம்மன் கோயில்கள், அரியலூர். | ஸ்ரீ அகஸ்தீசுவரர் தொகுதிக் கோயில்கள், கந்தருவ கோட்டை. |
| ,, ஆர். எஸ். சீனிவாசன் | ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் தொகுதிக் கோயில்கள், செந்தலை. | ஸ்ரீ கிருதிவாகீசுவரர் தொகுதிக் கோயில், சூலமங்கலம். |
| ,, எஸ். நல்லநாயகம் | ஸ்ரீ கிருதிவாகீசுவரர் தொகுதிக் கோயில், சூலமங்கலம். | ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் தொகுதிக் கோயில்கள், செந்தலை |
| ,, எஸ். பி. செல்வவிநாயகம் | ஸ்ரீ கோட்டூர்க் கொழுந்தீசுவரர் கோயில், மன்னுர்குடி வட்டம். | ஸ்ரீ மாதவப்பெருமாள் கோயில், மயிலாப்பூர். |


## வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழ் பதிப்பாகும் அச்சகத்தின் உரிமையாளர் மாற்றம் காரணமாக, இம்மாத இதழ் வெளிவரச் சிறிது காலதாமதம் நேர்ந்தமைக்கு, வாசக அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகின்ருேம்.


— ஆசிரியர்.



ஸ்ரீ வைகுண்டவாசப் பெருமாள்



ஸ்ரீ குசலவபுரீசுவரர் கோயில் மண்டபம்



குசலவபுரீசுவரர் கோயில் உட்புறத் தோற்றம்



குசலவர் குதிரையைப் பிடித்து
நிறுத்தி இருக்கும் சிற்பம்



ஸ்ரீ பார்த்தசாரதி கோயில்
திருவல்லிக்கேணி - சென்னை

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.